தமிழ்ச் சங்கங்களின் வரலாறு



பொதியமலைத் தமிழ்ச்சங்க காலத்து நாட்டின் அமைப்

கழக வெளியீடு : ௪௮௦

தமிழ்ச்சங்கங்களின் வரலாறு

ஆசிரியர் :

திருமந்திரமணி, துடிசைகிழார்,

அ. சிதம்பரனார்

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி. :: சென்னை -1.

First Edition : Nov., 1948.
Reprint : May, 1957.

Thamizhch Sangangalin Varalaru

[All Rights Reserved]

Published by,

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.

Head Office :

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.—C. 1000.

பதிப்புரை

எவ்வகை வாழ்வும் எழிலுற நடந்து இன்புறச் சங்கங்கள் இன்றியமையாதன. அம்முறையில் தொன்மைத் தமிழ்மக்கள் பன்னெடுங்காலங்கட்கு முன்பே "தமிழ்ச்சங்கங்"கண்டு, சீரும் சிறப்பும் மலிய நடத்தி, அதன் பயனாக உலகத்துக்கே நனி நாகரிகம் நல்கி உயர்ந்தனர். அச் சங்கங்களில் வேந்தரும் புலவரும் வேற்றுமையின்றி வீற்றிருந்து விழுமிய செந்தமிழ்த் தொண்டாற்றினர்.

பின், வேற்றுப்புல மக்கள் விரவித் தங்கள் வெளிப்பகட்டா லும் ஒலிப் பெருக்காலும் செந்தமிழ் மக்களைத் திகைப்புறுத்தித், தம்வழி ஈர்த்தனர். அவர்களும் அம் மயக்கிலீடுபட்டுத் தம் தாய் மொழியையுந் தமிழ் நாகரிகத்தையும் போற்றும் தனித்தொண்டை மறந்தனர். தண்டமிழ்நாடு உலகங்கண்டறியாத பெருவளமுற்று,

> "பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
> அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து."

என்னுந் தமிழ்மறைக்கேற்ப, வணிகத்தாலும் பணிமிகு கைத் தொழிலாலும் சிறந்திருந்தது. அச் சிறப்பை நாடி வெளிநாட்டு வணிகர்களும், மன்னர்களும் ஒருவர்பின் ஒருவராய் வளங் கொண்டும் போர்புரிந்தும் நாட்டை மாறுபடுத்தினர். அதனாலும் தமிழ்ச்சங்கங்களுக்கு உலைவு நேர்ந்தது.

இந்நிலையில் ஆங்கில ஆட்சி நிலைத்தது. அவ்வாட்சியில் வரலாற்றுநூல் எழுதினாரும், ஆராய்ச்சிநூல் வெளியிட்டாரும் செந்தமிழ்மொழியால் வாழ்ந்தும், அம் மொழிக்கு ஆக்கந் தேடாது, பிறமொழி மயக்கால் நடுநிலை குன்றித் தமிழ்ச்சங்கங் களின் காலப் பழமையை மிக அண்மைக் கிழமையாக்கி வழுவினர். அவற்றையெல்லாம் பொருந்துமாறு மறுத்து, வலிய சான்றுக ளுடன் உண்மைகாட்டி, ஆசிரியர் இந் நூலகத்துத் தெளிவுபடுத்தி யுள்ளார். இந் நூலுணர்ச்சி, நம் தமிழ் அன்னையைத் தொன்மைச் சங்க அரியணைமீதமர்த்தி, மாசற்ற தூய தமிழ்வளஞ்சார்ந்த புதுப்புது மணியணியணிவித்துத் தமிழர்களுக்கே யுரியவென உலகங்கூறும் பண்டைய நாகரிகத்தைக் கைக்கொண்டு நாடும் மொழியும் நன்னெறியும் கடைப்பிடித் தொழுகச்செய்து, நம்மையுமோர் பொருளாக்கி, உலகம் மதிக்கச் செய்யும்.

இத்தகைய சீரிய நூலை ஆக்கித்தந்த திரு. திருமந்திரமணி, துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக. இந் நூலைத் தமிழுலகம் வாங்கிக் கற்று இன்புற்று எங்களை ஊக்குமாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
	தோற்றுவாய்	1
க.	தென்மதுரைத் தமிழ்ச்சங்கம்	4
உ.	மகேந்திரமலைத் தமிழ்ச்சங்கம்	15
௩.	பொதியமலைத் தமிழ்ச்சங்கம்	26
ச.	மணிமலைத் தமிழ்ச்சங்கம்	31
ரு.	குன்றம் எடுத்த குமரவேள் தமிழ்ச்சங்கம்	38
சா.	தலைச்சங்கம்	52
எ.	முதுகுடுமித் தமிழ்ச்சங்கம்	63
அ.	இடைச்சங்கம்	70
கூ.	திருப்பரங்குன்றத்துத் தென்மதுரைத் தமிழ்ச்சங்கம்	90
க0.	கடைச்சங்கம்	100
கக.	வச்சிரநந்தி தமிழ்ச்சங்கம்	133
கஉ.	மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்	140
க௩.	கோவைத் தமிழ்ச்சங்கம்	148
கச.	கரந்தைத் தமிழ்ச்சங்கம்	149
	பின் இணைப்பு I	150
	பின் இணைப்பு II	164

முகவுரை

"ஐந்திணை அகநூல்," என்ற இறையனார் களவியல் நூலை, நக்கீரர் I வகுத்த உரையுடன் படிக்கும்போது, ஒருவன் தலை—இடை—கடை ஆகிய முச்சங்கங்களைப்பற்றியே கூறப்பட்டுள்ளதைக் காண்கிறான்.

ஆனால், சங்க இலக்கியங்களையும், சங்க காலத்துக்குப் பிற்பட்ட இலக்கியங்களையும் படிக்கும்போது, முச்சங்கங்களுக்கு முந்தியும் பிந்தியும் தமிழ்நாட்டில் தமிழ்ச்சங்கங்கள் நடைபெற்றதற்குச் சான்றுகள் நிறைய இருக்கின்றன. அச் சான்றுகளை எல்லாம் திரட்டிப் பின் இணைப்பு I என்ற தலைப்புடன் இந்நூலில் சேர்த்துள்ளேன்.

பின் இணைப்பு I-இல் காட்டப்பட்டுள்ள ஆதாரங்களை ஒருவன் அமைதியாகவும், வேறுபட்ட மனம் இல்லாமலும் நோக்குவானேயாகில், தமிழ்ச்சங்கங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக, இத் தமிழ் நாட்டில் நடைபெற்று வந்தன, இன்றும் நடைபெற்று வருகின்றன என்ற முடிவுக்கு வந்தே தீருவான்.

கடைச்சங்கப் புலவரான ஔவையாரும், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும் கடைச்சங்கத்தைப் பற்றிப் பாடியிருப்பரேல், தமிழ்ச்சங்கம் நடைபெற்றதைப் பற்றி யாரேனும் ஐயங்கொள்ளுவார்களா? அப்படிக் கொள்ளுவார் ஆனால் அவர்களை என்னென்பது?

> "உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
> அலகையாய் வைக்கப் படும்." (குறள்—அ௫0)

என்னும் முதுமொழிக்கு இலக்காவான்.

அகம்—புறம் முதலிய தொகைநூல்களில், தமிழ்ச்சங்கங்களில் உறுப்பினர்களாயிருந்த புலவர்களுடைய பாட்டுக்களே உள்ளன. ஆதலின், சங்கங்கள் நடைபெற்றதைப்பற்றி ஐயுறக் காரணம் சிறிதும் இல்லை.

கடைச்சங்கம் அழிவெய்திய பதினைந்து ஆண்டுகளுக்குப்பின் வாழ்ந்த மாணிக்கவாசகர் (250—282 A. D.) கடைச்சங்கத்தைப் பற்றிப் பேசுவாரானால், அவர் சொல்லிலும் ஐயம் உண்டோ? அவர் பாண்டியன் முதல் மந்திரியாய் இருந்து, கடைச்சங்கம் நடைபெற்று வந்ததற்கு ஆதாரங்களை அரசாங்க நூல்நிலையத்தில் இருந்து பார்த்தவர் அன்றோ? அதனால் அல்லவோ "கூடலில் ஆய்ந்தஒண் தீந்தமிழின், துறைவாய் நுழைந்தனையோ," என்று ஆனந்தக் கூத்தனைக் கேட்கிறார்.

ஆதலின், தமிழ்ச்சங்கங்கள் தமிழ்நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக நடைபெற்றன, நடைபெற்று வருகின்றன என்பதற்கு ஐயம் கிடையாது.

இந் நூலின்கண் பதினொன்கு தமிழ்ச்சங்கங்களைப்பற்றிக் கூறப் பட்டுள்ளது. அச் சங்கங்கள் நடைபெற்றன என்பதற்கு இலக்கியச் சான்றுகளும், இதுவரை கிடைத்துள்ள செப்பேடு, கல்வெட்டுச் சாசன ஆதாரங்களும் காட்டப்பட்டுள்ளன. தமிழ் நாட்டுச் சங்கங்களைப்பற்றிப் பிறநாட்டு வரலாற்றுச் சான்றுகளையும் காட்டியுள்ளேன்.

சங்கங்கள் என்றால் இக்காலத்துப் பல்கலைக்கழகம் (University) போன்றது என்று கொள்ளவேண்டும். மாணவர்கள் சங்கத்திலேயே இருக்க—படுக்க—உண்ண—உடுத்த முதலிய எல்லா வசதிகளையும் பெற்றுவந்தார்கள். அஃதாவது, குருகுல வாசம் (Residential University) என்னப்பட்ட சங்கங்களாக இருந்தன.

இச் சங்கங்களில் சீனு (China), காந்தாரம் (Afganistan), எகுபதியம் (Egypt), பாபிலோனியா, அக்கேடியா, அமேரியா, பாரசீகம், இலங்கை முதலிய இடங்களில் இருந்தும் மாணவர்கள் வந்து படித்துச் சென்றுள்ளார்கள் என்று தெரிகிறது.

நாலந்தா (Nalanda), தக்கசீலம் (Taxilla) முதலிய ஆரிய நாட்டுப் பல்கலைக் கழகங்கள் ஏற்படுவதற்குப் பன்னூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழ்நாட்டில் தமிழ்ச்சங்கங்கள் நடைபெற்று வந்தன என்பதற்கு வடநாட்டு ஆரியர்கள் நூல்களிலேயே ஆதாரங்கள் உள்ளன.

"சங்கம் என்ற சொல்லே தமிழ்ச்சொல் அன்று; அது வடமொழிச்சொல்; அதனால் தமிழில் சங்கம் என்பதற்குச் சரியான சொல் கிடையாது. வடநாட்டில் நடந்த நாலந்தா, தக்கசீலம் முதலிய சங்கங்களைப் பார்த்து, தென்னாட்டிலும் தமிழ் மொழிக்குச் சங்கங்கள் இருந்ததாகக் கதை கட்டியுள்ளார்கள்," என்று வாய்கூசாது கூறுபவர்களும் இந்நாட்டில் உண்டு.

மொழிநூல் வல்ல மாகறல் கார்த்திகேய முதலியார் அவர்களும், யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாசப் பாதிரியாரும், பன்மொழி வல்ல தேவநேயப் பாவாணரும் 'சங்கம்' என்ற சொல் தமிழே என்று அறுதியிட்டுள்ளதை அவரவர்கள் நூல்களிற் காண்க.

மேலும், இப்போது பதிப்பிக்கப்பட்ட தொல்காப்பியத்தில், தப்பாகப் பிரசுரிக்கப்பட்ட சூத்திரங்களை வைத்துக்கொண்டு, பகுத்தறிவையும் பறிகொடுத்துவிட்டு, சகரம் மொழிக்கு முதலில் தமிழ்மொழியில் வாராது என்று தொல்காப்பியர் சூத்திரம் செய்துள்ளார். ஆதலால், 'சங்கம்' என்ற சொல் வடமொழியே ஒழியத் தென்மொழியன்று என்று பிடிவாதமாகக் கூறுபவரும் உண்டு. அந்தத் தொல்காப்பியச் சூத்திரம் வருமாறு:—(Vide செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 15, பரல் 2, பக்கம் 67—69)

Digitized by RMRL

"க—த—ந—ப—ம எனு மா வைந்தெழுத்தும்
எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே
சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அவை ஔ வெனும் ஒன்றலங் கடையே."

என்பதுதான் தொல்காப்பியர் சூத்தரித்தது.

ஆனால், இப்போது பதிப்பித்தவர்கள் இந்த ஒரு சூத்திரத்தை இரண்டு சூத்திரங்களாக்கி, கடைசி அடியை

"அ—ஐ—ஔ எனும் மூன்றலங் கடையே."

என்று பதிப்பித்துள்ளார்கள்.

ஏடு பெயர்த்து எழுதினவன் செய்த தவறானது பண்டிதர்களுடைய அறிவையே மயக்கிவிட்டது; தமிழ்நாட்டில் சங்கம் இருந்ததில்லை என்று தமிழுக்கு எதிரியாக உள்ளவர்கள் கூற ஒரு கருவியாக உபயோகப்படுகிறது.

சூத்திரத்தின் பொருள் :—

"க்—த்—ந்—ப்—ம் என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களும் எல்லா உயிரெழுத்துக்களோடுங்கூடிப் பெருவரவிற்றாய் மொழிக்கு முதலாக வரும்.

ச் என்ற மெய்யெழுத்தும் அவ்வைந்து மெய்யெழுத்துக்களைப் போலவே, எல்லா உயிரெழுத்துக்களோடுங்கூடிச் சிறுவரவிற்றாய் மொழிக்கு முதலாக வரும்.

ஆனால், க்—ச்—த்—ந்—ப்—ம் என்ற ஆறு மெய்யெழுத்துக்களும் ஔ என்னும் உயிரெழுத்தோடுங்கூடிமாத்திரம் மொழிக்கு முதலாக வாரா.

மேற்கோள் :—

	சரியானது	பிழையானது
1.	கவ்விற்று	கௌவிற்று
2.	சவ்வரிசி	சௌவரிசி
3.	தவ்வை	தௌவை
4.	நவ்வி	நௌவி
5.	பவ்வம்	பௌவம்
6.	மவ்வல்	மௌவல்

என்பதே."

ஆனால், தொல்காப்பியம் படித்த சிலரும், படியாத பலரும், படித்தும் பிடிவாதக் குணமுள்ள சிலரும் மேலேகாட்டிய சொற்களைப் பிழையாகவே எழுதி வருகிறதைச் செய்தித் தாள்களில் பார்க்கலாம். ஆகையால், தமிழர்கள் விழிப்படைந்து, தவற்றை

உணர்ந்து சரியானபடி மேற்கண்ட சொற்களை எழுதி வரவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தப்புவரியாகிய "அ—ஐ—ஔ எனும் மூன்றலங்கடையே" என்ற அடியின்படி பொருள் செய்வோமானால் க்—ச்—த்—ந்—ப்—ம் என்ற ஆறு மெய்யெழுத்துக்களும் அ—ஐ—ஔ என்ற மூன்று உயிர் எழுத்துக்களோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வராமல் இருக்கவேண்டும். வழக்கத்தில் அப்படி இல்லை. இலக்கியங்களிலும் அப்படி இல்லை. இலக்கியங்கண்டதற்கு இலக்கணமேயொழிய, இலக்கணத்திற்காக இலக்கியம் இல்லை.

மேலும், அ என்ற எழுத்தோடு சேர்ந்து அம் மெய்யெழுத்துக்கள் வரவில்லையென்றால், வேறு எந்த உயிரோடும் வர முடியாது. என்னெனின், எல்லா உயிர்களும் அகரத்தினின்றுமே பிறந்தன என்பது நாற்றுணிபு.

கடைசி அடியாகிய அந்தத் தவறான அடியைச் சகரத்துக்கு மாத்திரம் தற்காலப் பண்டிதர்கள் கொள்ளுகிறமாதிரி கொண்டால், சகரம் அகரத்தோடும், ஐகாரத்தோடும், ஔகாரத்தோடும் மொழிக்கு முதலாக வரக்கூடாது. சங்க இலக்கியங்களைப் பார்த்தால் அதற்கு நேர்முரணைக் காணலாம்.

தொல்காப்பியத்திலேயே இரண்டு சூத்திரங்கள் சகரத்தை மொழிக்கு முதலாக வைத்துச் செய்யப்பட்டுள்ளன. தொல்காப்பியர் "அ—ஐ—ஔ எனும் மூன்றலங் கடையே" என்று சூத்திரம் இயற்றி இருந்தால், அதற்கு முரணைகச் சகரத்தை மொழிக்கு முதலில் வைத்து இரண்டு சூத்திரங்கள் செய்வாரா? உன்னிப்பாருங்கள்.

மேலும்,

"தந்த கள்வன் சமழ்ப்புமுகம் காண்மின்."

(பரிபாடல்—௨0)

"மன்பதை சவட்டும் கூற்றம் என்ப."

(பதிற்றுப்பத்து—அ௫)

"பஞ்சாய்க் கோரை பல்விற் சவட்டி."

(பெரும்பாணாற்றுப்படை—௨௩௭)

"சந்து நீவிய புன்முடிந் திடுமின்."

(மலைபடுகடாம்—௩௯௩)

என்ற அடிகளை நோக்கும்போது, தொல்காப்பியத்தை இலக்கணமாகக்கொண்ட சங்கநூற் புலவர்கள் சகரத்தை மொழிக்கு முதலாக வைத்துப் பாடி இருக்கமாட்டார்கள்.

"சையொத் திருந்தால் ஐயமிட் டுண்." என்று சகரம் ஐகாரத்தோடு மொழிக்கு முதலாக வைத்து ஔவையார் பாடியிருக்கமாட்டார்.

Digitized by RMRL

கி. மு. 20,000,000-க்கு முன்



இமயமலை கிளம்பாததற்குமுன் பூமண்டலத்தின் அமைப்பு.

[350 and 70 million years B.C.]

Digitized by RMRL

பஃறுளியாற்றுத் தென்மதுரை & மகேந்திரமலைத் தமிழ்ச்சங்க காலம்



குறிப்பு: எல்லைக்கோடு கருப்பாயிருப்பது பஃறுளியாற்றுத் தமிழ்ச்சங்க காலத்திலும் (30,000 B.C.) உள்ளே சிறுபுள்ளிகளுடன் இருப்பது மகேந்திரமலைத் தமிழ்ச்சங்க காலத்திலும் நாட்டின் நிலையைக் குறிக்கும். 1. முத்தூர், 2. தென்மதுரை.

கி. மு. 20,000,000-க்கு முன்



இமயமலை கிளம்பாததற்குமுன் பூமண்டலத்தின் அமைப்பு.

[350 and 70 million years B.C.]

பஃறுளியாற்றுத் தென்மதுரை & மகேந்திரமலைத் தமிழ்ச்சங்க காலம்



குறிப்பு: எல்லைக்கோடு கருப்பாயிருப்பது பஃறுளியாற்றுத் தமிழ்ச்சங்க காலத்திலும் (30,000 B.C.) உள்ளே சிறுபுள்ளிகளுடன் இருப்பது மகேந்திரமலைத் தமிழ்ச்சங்க காலத்திலும் நாட்டின் நிலையைக் குறிக்கும். 1. முத்தூர், 2. தென்மதுரை.

Digitized by RMRL

Digitized by RMRL

கால வரையறையுடன்

தமிழ்ச்சங்கங்களின் வரலாறு

தோற்றுவாய்

களவியல் நூலையும், அதன் உரையையும் ஒருவன் படிப்பான் ஆனால், அவனுக்குத் தமிழ்ச் சங்கங்களின் வரலாறு கால வரையறையுடன் தெரியவேண்டியது இன்றியமையாதது என்று தோன்றும்.

"சங்கங்களின் கால வரையறை தெரியாத வரையில் பழையது புதிது ஆகவும், புதியது பழையது ஆகவும், மெய் பொய்யாகவும், பொய் மெய்யாகவும், முன் இருந்த ஆசிரியர் பின் இருந்தவராகவும், பின் இருந்த ஆசிரியர் முன் இருந்தவராகவும் கொள்ளப்பட்டு, உண்மை சிறிதும் விளங்காமல் பெரியதொரு தலைதடுமாற்றமே தலைவிரித்தாடும். இத்தகைய தலைதடுமாற்றப் பேயால் பிடியுண்டு நிற்கும் வரையில் மக்கள் பொய்யான வழிகளில் அலைந்து திரிந்து மீளாத் துன்பத்திற்கு ஆளாகி நிற்பர். ஆனதனால்தான் உண்மையை உள்ளவாறு உணர்ந்து இம் மக்கட் பிறவியை உண்மை நெறியிற் செலுத்தி முன்னேற்றுதற்கு, அறிவையும் இன்பத்தையும் தமக்கு வழங்கிய தம் ஆசிரியர்கள் இருந்த காலங்களையும், அக்கால நிலைகளையும் உணர்வதில் ஐரோப்பிய அறிஞர்கள் பெருவேட்கையும் பெருமுயற்சியும்

உடையவர்களாய் இருக்கின்றனர். முற்காலத்திருந்த அறிஞர்களின் உண்மை நிலைகளை எல்லாம் உண்மையாக ஆராய்ந்து அறிந்து உண்மை அறிவில் தலைசிறந்து வருதலினால்தான் மேனாட்டு வெண்மக்கள் அறிவிலும், ஆற்றலிலும், நாகரிகத்திலும், இன்ப வாழ்விலும் நாளுக்கு நாள் வளர்பிறைபோல் வளர்ந்து, அவ்வுண்மை அறிவு வாயாத மற்ற நாட்டவர்களை எல்லாம் தம் அடிக்கீழ்ப் படுத்துச் செங்கோல் ஓச்சி வருகின்றனர்.

கால ஆராய்ச்சி செய்து அவ்வக்கால நிலைகளையும், அவ்வக் காலத்தில் இருந்த ஆசிரியர்களையும் உணராமையினால் தான், நம் நாட்டவர்கள் பொய்க் கதைகளிலும், பொய்த் தெய்வ வணக்கங்களிலும், போலி ஆசிரியர் மருள் உரைகளிலும், வீழ்ந்து மயங்கி உண்மை அறிவு வாயாதவர்களாய், அதனால் தம் பிறவியைப் புனிதப்படுத்தும் வழிவகைகள் தெரியாதவர்களாய், அறிவும் ஆற்றலும் இன்றி, தம் முட் பொறாமையும், பகைமையும் கொண்டு, நோயிலும் வறுமையிலும் உழன்று, தீவினைக்கு ஆளாகி, மங்கி, மடிந்து போகின்றனர். எனவே, இம் மக்கட் பிறவியைத் தெய்வப் பிறவி ஆக்குதற்கு இன்றியமையாத கருவியாய் மேம்பட்டு விளங்குவது கால ஆராய்ச்சியால் உரங்கொண்டு துலங்கும் மெய்யறிவு விளக்கமே யாம்,” என்று “மாணிக்கவாசகர் வரலாறு” என்னும் புத்தக முகவுரையில் அதன் ஆசிரியர் கூறுவது காண்க.

ஆதலின், கூடுமான வரையில் இதுவரை கிடைத்த கல்வெட்டுகள், சாசனங்கள், இலக்கிய ஆதாரங்கள், நாட்டுச் சரித்திரங்கள் இவைகளைக் கொண்டு, தமிழ் நாட்டில் நடைபெற்ற தமிழ்ச்சங்கங்களின் காலங்கள் ஒருவாறு நிச்சயித்து ஈண்டு எழுதப்பட்டிருக்கின்றன. இக் காலங்கள்

Digitized by RMRL

இனி வரும் ஆராய்ச்சியால் சிறிது மாறுபட்டாலும் படலாம்.

ஈண்டுக் குறிப்பிடப்பட்டவை கி. மு. 30,000 முதல் கி. பி. 20-ஆம் நூற்றாண்டு வரை நடந்த, நடக்கின்ற தமிழ்ச் சங்கங்களே யாம்.

கி. மு. 30,000-க்கு முன்னும் தமிழ்ச் சங்கங்கள் இருந்தன என்று தெரிகிறது. ஆனால், அவைகளின் வரலாறுகள் தெள்ளத் தெளியத் தெரிய வராததால், ஈண்டு இப்போது விடப்பட்டன.

சங்க நூல்களாலும், சமண நூல்களாலும், பிற நாட்டுச் சரித்திரக் குறிப்புகளினாலும், கல்வெட்டுக்களாலும், தாமிர சாசனங்களாலும் நமக்கு நன்றாய்ப் புலப்பட்டவற்றையே ஈண்டுக் கூறியிருக்கின்றோம்.

தமிழ் நாட்டுச் சரித்திரம் இமயமலை தோன்றிய (கி. மு. **20,000,000**) காலம் முதற்கொண்டு பல ஆதாரங்களுடன் எழுதப்பட்டுவருகின்றது. அது வெளியாகும்போது, தமிழ்ச் சங்கங்களைப்பற்றி இன்னும் பல வரலாறுகள் வெளிவரலாம்.

இனி, கி. மு. 30,000 முதல் நடைபெற்ற தமிழ்ச் சங்கங்கள் இன்னின்னவை யென்பது, அவைகளின் காலம், சங்கம் இரீஇயினார் வரலாறு, பாடப்பட்ட நூல்கள் முதலியவைகளைப்பற்றிக் கூறுவாம்.

க. பஃறுளியாற்றுத் தென்மதுரையில் நடைபெற்ற தமிழ்ச்சங்கம்

(உருவ எழுத்துக் காலம்)

1. காலம்: கி. மு. 30,000 முதல் கி. மு. 16,500 வரை 13,500 ஆண்டுகள்.

2. இடம்: பஃறுளியாற்றின் கரையில் இருந்த தென் மதுரை என்னும் நகரம்.

3. சங்கம் இரீஇய அரசர்: பாண்டியன் நெடியோன். இவனுடைய மறுபெயர்களாவன: முதலாம் நிலந்தரு திருவிற் பாண்டியன்; ஆழி வடிம் பலம்ப நின்ற பாண்டியன்; பாண்டியன் மா கீர்த்தி.

4. புலவர்: ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன் முதலியோர்.

5. நூல்:

6. பாடப்பட்டன:

7. பாடப்பட்டோர்: ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன் முதலியோர்.

8. கவி அரங்கேறிய அரசர்: ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன் முதலியோர்.

9. வரலாறு: பஃறுளி என்னும் யாறு பெருவள நாட்டுக்கும், ஒளிநாட்டுக்கும் இடையில் எல்லையாக மேருமலைத் தொடரினின்றும் உற்பத்தியாகிக் கீழ் நோக்கி ஓடிக்கொண்டு இருந்தது. இதனை:

"அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு (ஒளிநாட்டுக்கு) வடவெல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும், குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே........" என்று அடியார்க்குநல்லார் கூறுமாற்றான் அறிக.

Digitized by RMRL

பஃறுளி என்னும் ஆறுனது இயற்கை நதி அன்று; வெட்டப்பட்ட ஆறு.

“ நிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்.”

என்னும் மதுரைக் காஞ்சி அடிகளால், நெடியோன் என்ற முதலாம் நிலந்தரு திருவிற் பாண்டியன் இவ்வாற்றை மேரு மலைத் தொடரினின்றும் வெட்டிப் பெருவளநாட்டை வளப்படுத்தினுன் என்று அறிகிறோம். இவனே பஃறுளி ஆற்றங்கரையில் ஓர் அழகிய நகரத்தை உண்டாக்கி, அது ஏழ்மதுரை நாட்டுக்குத் தெற்கே இருந்ததால் ‘தென் மதுரை’ எனப் பெயரிட்டு, அதனை அரச இருக்கை யாக்கி, அங்கிருந்து ஒளிநாடு, பெருவளநாடு, குமரிநாடு, பாண்டிய நாடு முதலிய நாடுகளை ஆட்சிசெய்துவந்தான்.

தென்மதுரையின்கண் இவன் ஒரு தமிழ்ச் சங்கம் இரீஇ முத்தமிழையும் வளர்த்துவந்தான் என்று ‘குமரிக் கண்டம்’ என்னும் நூலாசிரியரும் கூறுவது காண்க.

முதலாம் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்ற ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியனின் வழிவந்த பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் என்னும் புலவர் பாடிய புறப்பாட்டில் குடுமியின் முன்னேனாகிய முந்நீர் விழவின் நெடியோனைப் பற்றிச் சில குறிப்புக்கள் உள. அக் குறிப்புக்களாலும் அவன் சங்கம் இரீஇ முத்தமிழையும் வளர்த்தான் என்று ஏற்படுகிறது.

“செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.” (புறம் - க)

என்பன புறப்பாட்டு அடிகளாகும்.

இவ்வடிகளால் விளங்குவது என்னவென்றால் முந்நீர் விழவின் நெடியோனை ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன் தன்னாட்டில் தனக்குக் கிடைத்த சிவந்த நீர்மையையுடைய மாற்று உயர்ந்த பசும் பொன்னாலாகிய நாணயங்களை வயிரியர்க்கு, அஃதாவது கூத்தர்—பாணர்—புலவர்களுக்கு, பஃறுளி ஆற்று மணலை வாரிக் கொடுப்பதுபோல பரிசு அளித்துவந்தான் என்பதே.

இவன் முத்தமிழையும் வளர்த்துவந்தான் என்பது கூத்தர்—பாணர்—புலவர் என்ற முத்தமிழ் வல்லாரைப் புரந்துவந்தமையால் அறிகிறோம். வயிரியர் என்பது முத்தமிழ் வல்லாரைக் குறிக்கும் ஒரு பழஞ்சொல்.

இவன் முத்தமிழ் வல்லார்க்குத் தரம் அறிந்து வாரிக் கொடுத்தவன் ஆதலால், இவனும் முத்தமிழும் வல்லனாய், சங்கத்தில் கவி அரங்கேறிய அரசனாய் இருந்தான் என்று அறிகிறோம். இவனே குமரியாற்றுக் கப்பால் முத்தங் கொழிக்கும் முதுநீர்க் கடற்கு விழவெடுத்தவனும் ஆவான்.

இவ்வரசன் ஆண்ட பெருவள நாட்டிலேதான் மேருமலை இருந்தது. அதற்கு 49 கொடுமுடிகள் (Peaks) இருந்தன என்று நூல்கள் கூறுகின்றன. மேருமலையின் ஒரு கொடுமுடிக்கு மணிமலை என்று பெயர். இம் மணிமலைப் பக்கம் இருந்தே பேராறு என்ற பெரிய ஆறு ஒன்று ஓடிக் கொண்டு இருந்தது. இப் பேராறு குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடையில் ஓடிய ஆறு ஆகும். இப் பேராறு வளம்படுத்திய நாடுதான் பெருவளநாடு என்பது. இதனை :

> " பேராற் றருகில் பிறங்கு மணிமலையில்
> சீராற்றும் செங்கோ திறற்செங்கோ."

என்ற 'தமிழ் விடு தூதின்' அடிகளால் அறியலாம்.

Digitized by RMRL

அம் மணிமலை அருகேதான் இரத்தினக் கனிகள் (Ruby mines) மிக்கு இருந்தன. மணி—ஒன்பது வகை அரதனக் கற்கள். மணிபடும் மலை: மணிமலை ஆயிற்று.

மேருவைச் சேர்ந்த இதர பாகங்களில் பொன்கனிகள் (Gold mines) மிக்கு இருந்தன. அதனாலேயே 'மேருவைச் சேர்ந்த காகமும் பொன்னும்' என்ற பழமொழியும் எழுந்தது.

இப் பொன்கனிகளில் சீனதேசத்து அவுணர்கள் (Mangolians) வேலை செய்துவந்தார்கள். அவர்கள் கும்பல் கும்பலாய்ப் பல ஆயிரம்பேர் அதிக ஆழமுள்ள கனிகளில் வேலைசெய்வதை நில மட்டத்திலிருந்து ஒருவன் பார்ப்பானேயாகில், அவர்கள் எல்லாம் எறும்புகள் மாதிரி தென்படுவார்கள். அதனால் அவர்களுக்குப் 'பொன் தோண்டி எறும்புகள்' என்று பெயர் அமைந்ததாக நூல்கள் கூறுகின்றன. சீனதேசத்துச் சரித்திரமும் இதற்குச் சான்று பகரும்.

ஆதலின், கி. மு. 30,000லேயே தமிழ் நாடானது நாகரிகத்திலும், மொழி வளர்ச்சியிலும், கனித் தொழிலும் (Mining Industry), முத்துக் குளித்தலிலும் (Pearl Industry), அரசியலிலும் சிறந்து விளங்கிற்று என அறிகிறோம்.

ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியனைப் பற்றி நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிர உரையில் 24,000 ஆண்டுகள் அரசு வீற்றிருந்ததாகக் கூறுவதாகப் பதிப்பித்துள்ளார்கள். "24,000 ஆண்டுகளின் முன் அரசாண்ட அப்பெயர் கொண்ட அரசனின் வழிவந்தவன்" ஆகக் கூறியதை, ஏட்டிலிருந்து படி எடுக்கும்போது தவறுதலாக எழுதி இருக்கவேண்டும்.

கி. மு. 16,000-ல் மகேந்திரமலைத் தமிழ்ச் சங்கம் இரீஇய திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் அடிகளோடு இருந்த பொதியமலை அகத்தியர், பார்வதி கலியாணச் சமயத்தில் கயிலையினின்றும் தென்னாடு போகும் போது,

"விடைகொடு போவான் ஒன்றை வேண்டினன் எருந் தேயம்
தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப ; அந்தநாட்டின்
இடைபயின் மனித்த ரெல்லாம் இன்தமிழ் ஆய்ந்து கேள்வி
உடையவர் என்ப; கேட்டார்க் குத்தரம் உரைத்தல்வேண்டும்."

என்று கூறியதை நோக்க, கி. மு. 16,000-க்கு முந்தியே தமிழ்நாட்டில் தமிழ் மொழியானது சீரும், சிறப்பும் எய்தி இருந்ததோடு மனிதர் எல்லாம் இன் தமிழ் ஆய்ந்து கேள்வி உடையவராய் இருந்தார் என்றும் அறிகிறோம்.

'மனித்தர் எல்லாம் இன்தமிழ் ஆய்ந்து கேள்வி உடையவர் என்ப' என்று அகத்தியரே பரமேச்சுரனிடத்தில் கூறுவதால், இனிய தமிழை ஆராயப் பல சங்கங்கள் தமிழ் நாட்டில் இருந்ததாகவும், அச் சங்கங்கள் மூலமாக எல்லா மனிதர்களும் நூல் அறிவும் கேள்வி அறிவும் பெற்றுச் சிறந்து விளங்கி இருந்தார்கள் என்றும் அறிகிறோம்.

ஆதலின், அகத்தியர் குறிப்பிட்ட சங்கங்கள் கி. மு. 16,000க்கு முந்தினவைகளே ஆகும். அத்தகைய சங்கங்களில் பஃறுளி யாற்றுத் தென்மதுரைத் தமிழ்ச் சங்கமும் ஒன்று எனத் தெரிகிறது.

இச் சங்கத்தைப்பற்றி, சுவாமி விபுலானந்தர் தாம் அரிதின் முயன்று வெளிப்படுத்திய யாழ்நூல் 31-ஆம் பக்கத்தில் கூறுவதாவது :—

"பழந்தமிழ் நாட்டுப் பஃறுளி ஆற்றங் கரைக்குச் செல்வோமாக. மிகமிகப் பழையகாலம். முல்லைநிலம். மரங்கள்

Digitized by RMRL

அடர்ந்த சோலையின் பாங்கர் ஒரு பசும் புற்றரை; புற்றரை யிலே, பசுக்களும் கன்றுகளும் மேய்கின்றன. கார்காலம். செடி கொடிகளிலே பூக்கள் நிரம்பி இருக்கின்றன. இடையன் ஒருவன் வருகின்றான். காலிலே செருப்பு அணிந்து இருக்கின்றான். உறுதியான உடல்; மயிரடர்ந்த தோட்கட்டு; பால்மணம் நாறுகின்ற தலை மயிர்; அரையிற் கட்டிய ஆடையின் ஒரு தலைப்பினைத் தோளிற் போட்டிருக் கிறான். பல நிறமாகிய கோட்டுப் பூக்களையும் கொடிப் பூக்களையும் கலம்பகமாகத் தொடுத்த மாலை யொன்று தோளிற் கிடக்கிறது. இடுப்பிலே ஒரு மூங்கிற் குழல் செருகப்பட்டிருக்கிறது. ஒரு கையிலே கோல்; மற்றொரு கையிலே வில்வடிவமான பொருள். ஒரு வில்லன்று; பல விற்கள் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கக் காண்கிறோம்.

நண்பகல் காலம் ஆகிறது. இடைச்சி ஒரு குடுவை யிலே பாலிட்டுக் காய்ச்சிய கூழ் கொண்டுவருகிறாள். இடையன் கூழினை உண்டு நீர் அருந்துகிறான். பின்பு கையிலே குழலை எடுக்கிறான். சில நாட்களுக்கு முன் அம் மூங்கிற் குழல் இடையனால் இசைக்கருவி யாக்கப்பட்டது. தீக்கடை கோலினாலே, புகையெழக் கைம்முயன்று தீயைக் கடைந்துகொண்டு, அக் கடைகோலி னுள்ள தீயினாலே மூங்கிலிலே துளையிட்டான். குழலிலே பாலைப்பண் வாசிக் கிறான். இடைச்சி கேட்டு மகிழ்கிறாள்.

அவள் போன பின்பு, வில்வடிவமான கருவியை எடுக் கிறான்; அஃது ஒரு வில்யாழ். அக் கருவியையும் இடையன் தானே செய்துகொண்டான். உள்ளே துளையுடைய குமிழ மரக்கொம்புகளை வில்லாக வளைத்து, மரல் நாரினாலே திரித்த கயிற்றினை நாணாகக் கட்டி இருக்கிறான். ஒரே அளவான ஏழு விற்கள் இருக்கின்றன. நாண்கள் மாத்திரம் தாழ்த்தி யும் உயர்த்தியும் கட்டப்பட்டனவாய், அளவு வேறுபட்

டிருக்கின்றன. இடையன் நரம்புகளைத் தெறித்து இசை ஒப்புமையினை ஆராய்கிறான்.

மாலைக்காலம் ஆய்விட்டது. குழலிலே முல்லைப்பண் வாசித்துக்கொண்டு, பசுக்களையும் கன்றுகளையும் ஓட்டிக் கொண்டு தன் குடிசைக்குச் செல்கிறான். உணவுக்குப் பின் தான் இசைகூட்டி வைத்த வில்யாழினை எடுத்து, இனிய குறிஞ்சிப்பண் வாசிக்கிறான். இடைச்சி கேட்டு மகிழ்கிறாள்.

இடையனுடைய வரன்முறை-நமது சொந்தக் கனவு அன்று. தலைச்சங்கத்துக்கு முன் நடந்த இந் நிகழ்ச்சியினைக் கடைச்சங்க காலத்துப் புலவராகிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் செவி வழியாகத் தெரிந்து, தாம் தொண்டைமான் இளந்திரையனைப் பாடிய பெரும்பாணாற்றுப்படையி னுள்ளே பொதிந்துவைத்துள்ளார். அவ்வாறு அவர் பொதிந்து வைத்துள்ள செய்யுட் பகுதியினைத் தருகின்றாம் :—

> ‘தொடுதோல் மரீஇய வடுவாழ் நோனடி
> விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை
> உறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்
> மேம்பால் உரைத்த ஓரி ஓங்குமிசைக்
> கோட்டவும் கொடியவும் விரைஇக் காட்ட
> பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
> ஒன்றமா உடுக்கைக் கூழார் இடையன்
> கன்றமர் நிரையொடு கானத் தல்கி
> அந்நுண் அவிர்புகை கமழக் கைம்முயன்று
> ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
> செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலின்
> இன்றீம் பாலை முனையிற் குமிழின்
> புழற் கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
> வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
> பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்
> புல்லார் வியன்புலம் போகி.’

Digitized by RMRL

பல்காற் பறவை என்றது தேன்வண்டினை. இடையன் இசைத்த குறிஞ்சி இசையினைக் கேட்ட வண்டுகள், அவ் விசை தமது சுற்றத்தின் இசையெனக் கருதிச் செவி கொடுத்துக் கேட்டன என்று புலவர் கூறுகின்றார்.

வண்டின் இமிர்தல், சேய்மையில் உள்ளோர் செவிப் படாது அண்மையில் உள்ளோருக்கு மாத்திரம் புலப்படு தல் போல, வில்யாழின் இசையும் மெல்லென்ற முரற்சி யாய் அண்மையிலுள்ளோருக்கு மாத்திரம் புலப்படுவது. இதற்குக் காரணம் என்னவெனில், உள்ளே துளையுடைய குமிழங் கொம்பு வில்யாழிலே பத்தர் ஆகவும், கோடாக வும் அமைந்து நின்றது. ஆதலின், ஒலி பல்குதற்கு இட மில்லாது போய்விட்டது. பத்தர் என்னும் உறுப்புத் தனி யாக அமைந்து, அளவில் பெரிதாகுமிடத்து ஒலி பல்கும். முதலிலே வில்யாழிற்குப் பயன்பட்ட குமிழங் கொம்பு இனிய ஓசை பிறத்தற்கு இடமாயிருத்தலைக் கண்ட இசைக் கருவியாளர்கள், பத்தர் செய்தற்கு அம் மரமே தகுதி உடையதெனக் கொண்டார்கள். மரம் பருத்த பின்பு கொம்பிலே இயல்பாக அமைந்த உட்டுளை மறைந்துவிடும். இம் மரத்தினை வேண்டிய கணக்குத் துண்டமாக அறுத்து எடுத்து, இலக்கணம் அமைந்த உருவாக்கி, உள்ளே குடைந்து வறுவாய் ஆக்கி, அவ் வறுவாயினைப் போர்வைத் தோலினால் மூடி, அத்தோல் இறுகும் வண்ணம் சுள்ளாணி களை முடுக்கிப் பத்தரினை அமைத்துக்கொண்டார்கள். இவ் வாறு அமைந்த பத்தர், ஒலியினை நன்றாகப் பல்கச் செய்தது.”

மேலே காட்டிய இவ்வரலாற்றால் கி. மு. 30,000-த்தி லேயே முத்தமிழும் எவ்வளவு சீர்பெற்று இருந்தன என் பதும், சாதாரணமான இடையனே இசைக்கருவி செய்ய வும், இசைபாடவும் வல்லனாயின் அக்காலத்து இசை

வாணர்கள் எவ்வளவு நன்றாய்க் கற்றிருப்பார்கள் என்பதும் கொள்ளக்கிடக்கின்றன. முதலாம் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பவன் தன் நாட்டில் இசையினையும் ஏனைய இயல் நாடகத்தையும் செவ்வனே ஆய்ந்து வளர்த்துவந்தான் என்று கொள்ளக்கிடக்கின்றது.

பாண்டியர்களுடைய ஆதிக்கம் பெருவள நாட்டில் கி. மு. 30,000 முதல் கி. மு. 16,500 வரை 13,500 ஆண்டுகள் நடைபெற்றது. பின் நிருதி நாட்டு (ஆப்பிரிக்கா) நிருதர்களால் (Negroes) தமிழ்நாடு கைப்பற்றப்பட்டு, 500 ஆண்டுகள் அல்லலில் மூழ்கி இருந்தது. இக்காலத்தைத் தான் திரிபுராதிகள் காலம் என்ப.

இனிச் சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் (18 அடி முதல் 22 அடி வரை உள்ள)

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி."

என்ற வரிகளில் கூறப்பட்டுள்ள **நிலந்தரு திருவிற் பாண்டியனும்,**

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வவ்வலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்பட
புலியொடு வில் நீக்கிப் புகழ்பொறித்த **கிளர்கெண்டை**
வலியினான் வணக்கிய **வாடாச்சீர்த் தென்னவன்."**
(கலித். ௧0௪.)

என்னும் பாடலில் கூறப்பட்டுள்ள **நிலந்தரு திருவிற் பாண்டியனும்,** ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியனே என்று ஐயுறுவார் பலர். அதனைச் சிறிது ஈண்டு விளக்குவாம்:

வடிவேல் எறிந்த வான் பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்

Digitized by RMRL

கடல் கொள்ள, கொண்டபின், கடல்கொண்ட நாட்டுக்கு ஈடுசெய்ய, வடதிசை சென்று கங்கைநதி பாயும் நாட்டையும், இமயமலை நாட்டையும் பெற்றுத் தன்னரசுக்கு உட்படுத்தித் தென்றிசையையும் ஆண்ட தென்னவன் இரண்டாம் நிலந்தரு திருவிற் பாண்டியன் ஆவான். என்னெனின், குன்றம் எறிந்த குமரவேள் சூரபன்மனோடு பொருது, வடிவேல் எறிந்த ஞான்றுதான் பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்து மேருமலையையும், குமரிக் கோட்டையும் கொடுங்கடல் விழுங்கியது.

குமரவேள் வடிவேல் எறிந்து சூரனை வென்றது கி. மு. 14,058-இல் ஆகும். ஆதலின், கி. மு. 30,000-இல் இருந்த முதலாம் நிலந்தரு திருவிற் பாண்டியனுக்கும், கங்கைநதி பாயும் நாட்டையும் இமயத்தையும் கொண்ட இரண்டாம் நிலந்தரு திருவிற் பாண்டியனுக்கும், 15,942 ஆண்டுகள் இடையில் உள்ளன.

இனி, மேலே கூறிய "மலிதிரை ஊர்ந்து" என்ற கலித்தொகைச் செய்யுட்கு, "அங்ஙனமாகிய நிலக் குறைக்குச் சோழநாட்டிலே முத்தூர்க் கூற்றமும், சேர நாட்டிலே குண்டூர்க் கூற்றமும் என்னும் இவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்" என்று கூறிய உரையாசிரியர் கூற்றை நோக்க, ஈண்டுக் கூறப்பட்ட பாண்டியன் வடதிசைக் கங்கையும் இமயமுங்கொண்ட நிலந்தரு திருவிற் பாண்டியன் வழிவந்த அப் பெயர் கொண்ட பாண்டியன் என்று அறிகின்றோம். இவனை நான்காம் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்று கூறுப.

அதங்கோட்டாசான் முன்னிலையில் தொல்காப்பியம் புலப்படுத்தவன் மூன்றாம் நிலந்தரு திருவிற் பாண்டியன் ஆவான்.

கலித்தொகை ௧௦௪-ஆவது செய்யுளால் குறிக்கப்பட்ட கடல்கோள் மிகச் சிறியது. குண்டூர்—முத்தூர்க் கூற்றங்களின் அளவே கடலாற் கொள்ளப்பட்டது ஆகும்.

ஆனால், "வடிவேல் எறிந்த...." என்ற சிலப்பதிகார அடிகளால் குறிக்கப்பட்ட கடல்கோளோ மிகப் பெரியது. அதனால் கொள்ளப்பட்ட தமிழ்நாடு கங்கை பாயும் நாடும், இமயமலை நாடும் சேர்ந்த பரப்பையுடைய அளவாகும்.

ஆதலின், இந் நால்வரையும் ஒன்றுபடுத்திக் கூறும் கூற்றுப் பொருந்தாது. இந் நால்வரும் வெவ்வேறு காலத்தவர் ஆவார்கள். ஆனால் ஒரே குடியில் வந்தவர்கள்.

Digitized by RMRL

உ. மகேந்திரமலைத் தமிழ்ச்சங்கம்

(உருவ எழுத்துக் காலம்)

1. காலம்: கி. மு. 16,000 முதல் கி. மு. 14,550 வரை 1450 ஆண்டுகள்.

2. இடம்: குமரிக் கண்டத்து, குமரிநாட்டு, ஏழ் குன்ற நாட்டின் மகேந்திர மலை.

3. சங்கம் இரீஇய அரசர்: இறையனார் என்னும் திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் அடிகள். இவருக்கு மேருவரம்பன்—பரமேச்சுரன் என்ற பட்டப் பெயர்கள் உண்டு.

4. புலவர்:
   (1) திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் அடிகள் என்ற இறையனார்.
   (2) பொதியமலை அகத்தியர் I. முதலியோர்.

5. நூல்: (1) மகேச சூத்திரம் என்னும் பேரிலக்கணம்.
   (2) களவியல் என்னும் ஐந்திணை அகநூல்.

6. பாடப்பட்டன:
   (1) அறம்—பொருள்—இன்பம்—வீடு என்னும் நான்மறைகள்.
   (2) ஆகமங்கள் ஒன்பது.
   (3) அங்க நூல்கள் ஆறு.
   (4) ஒழுக்க நூல்கள் பதினெட்டு.
   (5) மகேச சூத்திரம்.
   (6) களவியல் என்னும் ஐந்திணை அகநூல் முதலியன.

7. பாடப்பட்டோர்: திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் அடிகள் என்ற இறையனார்.

8. கவி அரங்கேறிய அரசர் :

திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான்.

9. வரலாறு : திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் காலத்தில் இருந்த தமிழ்நாட்டின் பரப்பை முதலில் அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது.

விந்தியமலைக்கு வடக்கே இருந்த தமிழ்நாடானது சிந்து நாடு, கங்கை நாடு, இமய நாடு என்று மூன்று பெரும் பிரிவுகளாவும், விந்திய மலைக்கும் குமரி ஆற்றுக்கும் இடையில் உள்ள தமிழ் நாடானது துண்டீர நாடு, எருமை நாடு, குறும்பர் நாடு, கொங்கர் நாடு, மறவர் நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, சேர நாடு என எட்டுப் பிரிவுகளாவும், குமரியாற்றுக்கும் கன்னி யாற்றுக்கும் இடையில் இருந்த தமிழ் நாடானது குமரி நாடு, பெருவள நாடு, ஒளி நாடு (தென்பாலிமுகம்) என மூன்று பெரும் பிரிவுகளாக வும் பிரிக்கப்பட்டிருந்தன.

மேலே கூறப்பட்ட ஒவ்வொரு நாடும் பல சிறு கூற்றங்களாகவும் பகுக்கப்பட்டிருந்தது. அவைகளில் குமரி நாடானது :

(1) ஏழ் மதுரை நாடு (2) ஏழ் தெங்க நாடு
(3) ஏழ் குறும்பனை நாடு (4) ஏழ் முன்பாலை நாடு
(5) ஏழ் பின்பாலை நாடு (6) ஏழ் குன்ற நாடு
(7) ஏழ் குணகாரை நாடு

என்று 49 சிறு நாடுகளாகப் பகுக்கப்பட்டு இருந்தது.

இரண்டு கோடி ஆண்டுகளுக்கு முன் விந்திய மலைக்கும் வானவர் நாட்டிற்கும் (Tibet) இடையில் கடல் இருந்

Digitized by RMRL

தது. அந்த இடத்தில் இமயமலை கி. மு. 20,000,000-இல் தான் தோன்றியது என்று ஞாலநூல் வல்லார் கணக்கிட்டுக் கூறுகிறார்கள்.

இமயமலை மேலே எழுந்து பல ஆயிர ஆண்டுகளுக்குப்பின், குடிஇருக்க வசதிகள் ஏற்பட்ட பின், ஒளியர்களும், சேர—சோழ—பாண்டியர்களும் மாறி மாறி இமயம் சென்று, அந்த நாட்டில் மக்களைக் குடியேற்றி, நாட்டை வளம்படுத்தினார்கள். அப்போது, சிந்து, பிரமபுத்திரா என்ற இரண்டு ஆறுகளுமே ஓடிக்கொண்டு இருந்தன. இவை யிரண்டும் இயற்கை யாறுகள். கங்கையாறு செயற்கை ஆறு—சோழர்களால் வெட்டப்பட்ட ஆறு.

புதிதாய் ஏற்பட்ட வடநாடானது சோழர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்த ஞான்று, "ஆறு தோண்டாத அரசன் அரசனல்லன்" என்ற பழமொழிக்கு இணங்க, அழகுநந்தன் என்ற சோழ அரசன் தன் பெயரால் (Aleknanda) என்ற ஓர் ஆற்றை முதன்முதல் வெட்டினான். அவனுடைய பரம்பரையில் வந்த சோழன் பகீரேர்ச்செம்பியன் (பகுரதன்—பகிரதன்) கங்கை ஆற்றை வெட்டினான். அலெக்நந்தா என்பது இப்போது கங்கையாற்றின் துணையாறாய் இருக்கிறது. இந்தச் சோழனால் நாடு வளம் பெற்றது.

பகீரேர்ச் செம்பியனுடைய மூன்றாம் பாட்டனாகிய சகரன் என்பவன்தான் தொடுகடலாகிய வங்காளக் குடாக் கடலைத் தோண்டினான். இதைக் குறித்துத் தொல்காப்பியம்-பொருள் - உரையில், "சகரர் வேள்விக் குதிரை நாடித் தொட்ட கடலகத்துப்பட்டுக் குமரியாறு பனை நாட்டோடு கெடுவதற்கு முன்பு" என்று கூறப்பட்டுள்ளது காண்க.

வங்காளக் குடாக்கடலுக்கு இதனாலே தொடுகடல் என்றும், சாகரம் என்றும் காரணப் பெயர்கள் ஏற்பட்டன.

சகரனாலே தோண்டப்பட்டது சாகரம். இப்போது சாகரம் என்னும் பெயர் எல்லாச் சமுத்திரங்களுக்கும் பொதுவாக இட்டு வழங்கப்படுகிறது.

இனி, பெருவளநாட்டைப் பற்றியும், ஒளிநாட்டைப் பற்றியும் சிறிது தெரிந்துகொள்ள வேண்டியது முக்கியமானது.

உலகத்தின் நடுவரையும் (Equator), அச்சுவரையும் (Axis) சேரும் இடத்திலேதான் மேருமலை இருந்தது. அது தெற்கே $23\frac{1}{2}^{\circ}$ பாகை வரையும் நீண்டு, உயர்ந்து, பல அடுக்குகளை உடையதாய் இருந்தது. இமயமலைக்கு இப்போது 13-கொடுமுடிகள் இருப்பது போல, மேருமலைக்கு 49-கொடுமுடிகள் இருந்தன. மகேந்திரம்—மணிமலை—குமரி—கொல்லம் முதலியன, 49-கொடுமுடிகளில் முக்கியமானவை.

இம்மேருமலைத் தொடரினின்றுமே குமரியாறு—பேராறு—பஃறுளியாறு—கன்னியாறு முதலிய ஆறுகள் தோன்றிக் கிழக்கு முகமாக ஓடி, குமரிநாடு—பெருவள நாடு—ஒளிநாடுகளை வளம்படுத்தின.

8°-பாகையிலிருந்து 2°-பாகை வரையுமே குமரிநாடு எட்டியிருந்தது. குமரிநாட்டின் தென்பாகம் ஏழ்குணகாரை நாடு ஆகும்.

ஏழ்குணகாரை நாட்டிலிருந்து $23\frac{1}{2}^{\circ}$ பாகைவரை, அஃதாவது, தென் அயனவரை வரையும் பெருவளநாடு பரவி இருந்தது.

குமரியாறு குமரிநாட்டிலும், பேராறும் பஃறுளியாறும் பெருவளநாட்டிலும் ஓடிக்கொண்டிருந்தன.

$23\frac{1}{2}^{\circ}$ பாகையிலிருந்து, அஃதாவது, தென் அயன வரையிலிருந்து, தென்சமுத்திரம் (Antarctic) வரை

Digitized by RMRL

ஒளிநாடு பரவி இருந்தது. கன்னியாறு ஒளிநாட்டில் ஓடிக் கொண்டிருந்தது. இது தமிழ் நாட்டின் கடைசி ஆறு ஆனதால் திருமூலர் "ஈறான கன்னி" என்றார்.

தென் அயனவரை (Tropic of Caprieorn) தாண்டிச் சூரியனுடைய ஓட்டம் இன்மையால், ஒளிநாடு ஒளிமேகங் களால் (Aurora Borialis) தான் வெளிச்சத்தைப் பெற்று வந்தது.

ஒளிநாட்டில் உள்ளவர்களுக்கு நாளானது உலகத் தின் நடுவரைப் பக்கம் உள்ளவர்களுடைய நாள் போன்ற தன்று.

மிக நீடித்தது. ஆறுமாதம் பகலும், ஆறுமாதம் இரவும் ஆக இருக்கும். நடுவரைப் பக்கம் உள்ளவர்களு டைய ஆண்டு ஒன்று, ஒளிநாட்டார்க்கு ஒரு நாள் ஆகும்.

"ஒளியராவார் பிறமண்டலங்களை அரசாளுதற்கு உரிய வேளாளர்" என்று கலித்தொகை உரையில் நச்சினார்க்கினி யர் கூறுதலால் அறியலாம். ஒளிநாட்டு வேளாளர்க்கு இடபக்கொடி உரித்து. அவர்கள் மூன்று கண்களை உடை யவர்கள். மூன்று காலங்களையும் உணரும் ஆற்றல் வாய்ந் தவர்கள். மாயா மலம் இல்லாதவர்கள்.

[1]இப்போது ஜப்பான் நாட்டில் அரசனையே தெய்வமாக வணங்குவதுபோல, அக்காலத்தில் தமிழ்நாட்டில் அரசனையே தெய்வமாக வணங்கி வந்தார்கள். கிரீஸ் தேசத்து ஓமர் என்னும் கவி எழுதிய நூலிலும், ஓம்ஸ்வர்த் எழுதிய சரித்திர நூலிலும் மேற்கூறிய விவரங்களைக் காணலாம்.

1. இரண்டாவது உலக உயுத்தத்துக்கு அப்புறம், இரோஷிமா, நாகசாக்கி நகரங்கள் அணுகுண்டினால் நாசமாக்கப்பட்ட பின், ஜப்பான் அமெரிக்கரிடம் சரணாகதி யடைந்தது.

ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன் காலமாகிய கி. மு. 30,000-க்கு முந்தியே ஒளியரில் ஒரு பிரிவார் ஒளிநாட்டினின்றும் வடக்கே இமயம் சென்று, கயிலையை [1]அரச இருக்கையாகக்கொண்டு, வடநாடு முழுதும் ஆட்சி புரிந்துவந்தார்கள்.

மறைஞ்சதரை (Mohenjo Daro), அரப்பா (Harappa) நாகரீகங்கள் எல்லாம் அக்காலத்தில் ஏற்பட்டவையே.

ஒளியரில் ஒரு பிரிவார் வடக்கே செல்லுவதற்கு முந்தியே சேர—சோழ—பாண்டியர்கள் மாறி மாறி அவ்வடநாட்டை ஆட்சிபுரிந்துவந்தார்கள்.

கி. மு. 30,000-ல் நெடியோன் என்னும் பாண்டியன் குமரிநாடு — பெருவளநாடு — ஒளிநாடு முதலியவைகளைக் கைப்பற்றி, பஃறுளி என்னும் ஆற்றை வெட்டி, நாட்டை வளம்படுத்தி, ஆட்சி புரிந்துவந்தான். நெடியோன் முதல் அவன் பரம்பரையார் ஆட்சி குமரிக்கண்டத்தில் 13,500 ஆண்டுகள் நடைபெற்றது.

கி. மு. 16,500-ல் பாண்டியர்களுடைய ஆட்சி பெருவளநாட்டில் குன்றவே, நிருதி நாட்டு (Africa) நிருதர்கள் (Black Negroes) குமரிக்கண்டத்தைக் கைப்பற்றி, பாண்டியர்களையும் சேர—சோழர்களையும்—ஒளியர்களையும் அடக்கி ஆண்டுவந்தார்கள்.

சேர—சோழ—பாண்டியர்களால் நிருதர்களை ஒழிக்க முடியவில்லை. நிருதர்கள் பொன், வெள்ளி, இரும்பு முதலிய உலோகங்களால் மூன்று பெரும் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு, முப்புரத்தவர் எனப் பெயர் பெற்று, தமிழ் நாட்டை 500 ஆண்டுகள் ஆண்டு வந்தார்கள்.

1. இமயத்தின் 13-கொடுமுடிகளில் ஒன்று.

Digitized by RMRL

நிருதர் பரம்பரையில் கடைசியாக அரசாண்டவர்கள் திரிபுராதிகள் என்று கூறப்படுபவரான உடுக்கண்ணன் (தாரகாக்கன்), மரைக்கண்ணன் (கமலாக்கன்), அறிவுடை மாலி (வித்தியுன்மாலி) என்பவர் ஆவர்.

தங்களால் வெற்றிபெற முடியாமை கண்டு தமிழ் நாட்டு அரசர்கள் எல்லாம், கயிலை சென்று, பரமேச்சுர னிடம் முறையிட, அவர் தமக்குச் சமானமான அகத்தி யரைச் சேனைகளுடன் அனுப்பினார். அகத்தியர் புறப்படு முன் பரமேச்சுரனிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை எல்லாம் கற்றுக்கொண்டு புறப்பட்டார். "விடைகொடு போவான் ஒன்றை........" என்ற பாசுரத்தில் இச்சரிதம் கூறப்பட்டிருத்தல் காண்க.

அகத்தியர் சேனைகளுடன் புறப்பட்டுக் கயிலையினின் றும் வருவதை அறிந்து, முப்புரத்தவர் தங்கள் சேனைகளை யும் வரும் சேனைகளை எதிர்க்க அனுப்பினார்கள். இருவர் சேனைகளும் விந்தியமலையில் கைகலந்தன. அந்தப் போரில் அகத்தியரே வெற்றிபெற்றார். அதனாலே அகத்தியருக்கு "விந்தம் அடக்கிய வித்தகர்" எனப் பெயரும் வாய்த்தது.

பிறகு, அகத்தியர் நிருதர் சேனைகளை எதிர்த்து, கிரவுஞ்சம் முதலிய பல சண்டைகளில் வெற்றி பெற்றார். கிரவுஞ்சகிரிச் சண்டையைப்பற்றிக் கந்தர் புராணம், தாரகன் வதைப் படலம், 3-ஆம் செய்யுளில் குறிக்கப்பட்டு உள்ளது. கடைசியாக அகத்தியர் பொதியமலை வரையும் சென்று நாட்டைக் கைப்பற்றித் தமிழர் ஆட்சியை நிறு வினார். அதற்கப்புறம் போகமுடியாமல், அகத்தியர் பொதிய மலையிலேயே தங்கிவிட்டார்.

பின், சின்னாட்களுக்கெல்லாம், பரமேச்சுரன் பெரும் சேனைகளுடன் கயிலையினின்றும் திரிபுரம் நோக்கி வருவது

சேட்டு, அகத்தியர் பொதியமலையினின்றும் எதிர்கொண்டு சென்று, திருவேற்காடு என்னும் இடத்தில் பரமேச்சுரனைச் சந்தித்து, போர் நிலையினைப்பற்றிப் பேசினார்.

பின் கூவம் சென்று, ஆங்கு, பரமேச்சுரன் போரினைத் தாமே தலைமை தாங்கி நடாத்துதற்கு விற்கோலம் புனைந்து, தேர் ஏறி, தெற்கு நோக்கிச்சென்றார். கூவம் என்னும் திருவிடத்திற்கு இன்றும் திருவிற் கோலம் என்னும் பெயர் அமைந்திருப்பதானது இவ்வரலாற்றை நினைவு உறுத்துகிறது.

பரமேச்சுரன் சேனைகளுடன் திரு அச்சிறுபாக்கம் என்னும் இடத்தை அடைந்த போழ்து, தேரின் அச்சு முறிய, ஆங்கு நின்று, தேரினைச் சரிப்படுத்திக்கொண்டு, சேனைகள் புடைசூழச் செல்லும் அளவில், திரிபுராதிகள் சேனைகள் திருவதிகை என்னும் இடத்தில் பரமேச்சுரன் சேனைகளை எதிர்க்க, இரு சேனைகளும் கைகலந்தன. அங்கே நடந்த மும்முரமான போரில் பரமேச்சுரன் வெற்றி பெற்று, தெற்கே முப்புரம் வரையும் சென்று, போரிட்டு, மூன்று பெரும் கோட்டைகளையும் தகர்த்து எரியூட்டி, நாசம் செய்து, நாட்டைத் திரிபுராதிகள் கையினின்றும் மீட்டார். தோல்வியுற்ற மூன்று நிருதர்களும் சரணம் அடைய அவர்களுக்குப் பரமேச்சுரன் அபயம் நல்கி, மகேந்திரமலையை அரச இருக்கையாகச் செய்து வளம் பெருக நாட்டை ஆண்டு வந்தார்.

அப்போதுதான் மகேந்திர மலையில் தமிழ்ச் சங்கம் ஒன்று நிறீஇ, மகேச சூத்திரம், களவியல் என்னும் நூல்களை யாத்து, அகத்தியர் முதலிய பல புலவர்களைச் சேர்த்து, முத்தமிழையும் வளர்த்துவந்தார்.

Digitized by RMRL

அத் தமிழ்க் கழகத்தில்தான் பரமேச்சுரனுக்கு மேரு மலை நாட்டை நிருதர் ஆட்சியினின்றும் மீட்டதால் "மேருவரம்பன்" என்ற பட்டத்தையும், திரிபுரங்களை எரித்ததால் "திரிபுரம் எரித்த விரிசடைப்பெருமான்" என்ற பட்டத்தையும் வழங்கினர்கள். அவருடைய இயற் பெயர் இறையனர். ஆதலின், அவர் செய்த களவியல் என்னும் நூல் "இறையனர் களவியல்" என்னும் பெயரைப் பெற்றது.

திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் கயிலையில் இருந்த பொழுது, ஆலின்கீழ் ஒரு நால்வருக்கு உரைத்த அறம் முதல் நான்கு மறைகளையும், காரணம் முதல் ஒன்பது ஆகமங்களையும், மறையங்க நூல்கள் ஆறினையும், ஒழுக்க நூல்கள் பதினெட்டினையும் மகேந்திர மலையில் மறுபடியும் பெருவளநாடு முதலிய ஏனைய நாடுகள் உய்யும் பொருட்டு வெளியிட்டு அருளினர். இந்த நிகழ்ச்சியைத்தான்,

"மன்னு மாமலை மகேந்திர மதனில்முன்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்."

என்று மாணிக்கவாசகர் கூறலானர்.

அப்பர் சுவாமிகளும் "அறம் பொருள் இன்பம் வீடு ஆறங்க வேதம் தெரிந்தானை" என்று பாடியுள்ளார்.

இப் பண்டாய நான்மறைகளைக் குறித்து ஆரியர் நூற்களிலும் கூறப்பட்டு இருப்பதைக் காண்க:—

ஐதரேய பிராமணம் என்னும் ஆரியர் நூலில், 7 - 18 சுலோகங்களில் "விசுவாமித்திர மரபினரான காதினர்க்கு ஆரிய வேதங்களின் வேருன, தெய்வத்தன்மை பொருந்திய வேறு வேதங்கள் இருந்தன," என்று கூறப்பட்டுள்ளது. இவ் விசுவாமித்திர மரபினர்க்குரிய தெய்வீக வேதமே அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள்

இயல்புகளையும், சிவபிரானையும், அவன் முனைத்து விளங்கும் முத்தீ வழிபாடுகளையும் உணர்த்தும் பண்டைத் தமிழ் நான்மறை ஆதலும் தானே பெறப்படும். என்று "மாணிக்க வாசகர் காலம்" என்ற நூலில் 521-ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது காண்க.

விசுவாமித்திர மரபினர் தமிழ் அரசவகுப்பினர் ஆவர். வடநாட்டில் 'பாஞ்சாலம்' என்று கூறப்படும் ஒரு பகுதியை ஆண்டவர் ஆவர். ஆரியர்கள் கங்கை நதி பாயும் நாட்டைக் கவர்ந்தபோது, ஆரிய மதத்தைத் தழுவிக்கொண்டு, ஆரியரோடு சேர்ந்து கொண்டவர் விசுவாமித்திர மரபினர்.

மருணீக்கியார் என்ற அப்பர் சுவாமிகள் சைவத்தினின்றும் சமண் மதம் தழுவியபோது, சிறப்புச் செய்யப் பெற்று, அம் மதத்துக்கு முதல் முனிவர் என்ற குறிப்பைக் காட்டும் "தருமசேனர்" என்னும் பட்டத்தை அடைந்தது போல, விசுவாமித்திரரும் ஆரிய மதத்தைத் தழுவிய ஞான்று அம் மதத்தில் அவர் "பிரமரிஷி" என்ற பட்டத்தைப் பெற்றார் என்று அறிகிறோம்.

ஆதலின், மகேந்திரமலைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் நான்மறைகளும், தமிழ் ஒன்பது ஆகமங்களும், தமிழ் ஆறு அங்க நூல்களும், இன்னும் பல நூல்களும் வெளியிடப் பட்டன என்று தெரிகிறது.

தொல்காப்பியப் பாயிர உரையில், நச்சினார்க்கினியர் "நான்கு கூறுமாய், மறைந்த பொருளுமாய் உடைமையால் நான்மறை என்றார். அவை தயித்திரியமும், பௌடிகமும், தலவகாரமும், சாமமுமாம். இனி, இருக்கு, யசுர்வும், சாமமும், அதர்வணமும் என்பாருமுளர். அது பொருந்தாது, இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாசர் சில் வாழ்நாட் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறுகச் செய்தார் ஆதலின்."

Digitized by RMRL

என்று கூறுவதால் தமிழ் வேதங்கள் வேறு, ஆரிய வேதங்கள் வேறு என்பது பெற்றும்.

மேலும், இம் மகேந்திரமலைத் தமிழ்ச் சங்கமானது, ஆரியர்கள் இந் நாட்டிற்கு வருவதற்கு 7,000 ஆண்டுகள் முன்னரே நிறுவப்பட்டது. ஆதலால், அச் சங்கத்தில் வெளியிடப்பட்ட வேத ஆகமங்கள் எல்லாம் தமிழாகவே இருந்தன.

௩. பொதியமலைத் தமிழ்ச்சங்கம்

இச் சங்கம் உருவ எழுத்துக் காலத்தில் ஆரம்பிக்கப் பட்டு, கோல் எழுத்து, வட்ட எழுத்து, சதுர எழுத்துக் காலம் வரை நடைபெற்றது.

1. **காலம்:** கி. மு, 16,000 to........

2. **இடம்:** பொதியமலை—பாவநாசம்.

3. **சங்கம் இரீஇயவர்:** பொதியமலை அகத்தியர் I. திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமானுக்குச் சமானமானவர். பரமேச்சுரருடைய ஐம்பெருங் குழுவில் தலைமை தாங்கியவர்.

4. **புலவர்:** பொதிகைமலை அகத்தியர் I; அவர் மாணக்கர் பலர்; பாண்டிய அரசர்களில் பலர்; (இப் பொதியமலை அகத்தியர் மகேந்திரமலைத் தமிழ்ச் சங்கத்திலும் அங்கத்தினராய் இருந்தார்.)

5. **நூல்:** மகேச சூத்திரம்—களவியல்—அகத்தியம்.

6. **பாடப்பட்டன:** அகத்தியம் முதலியன.

7. **பாடப்பட்டோர்:** திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் அடிகள் என்கிற இறையனார்.

8. **கவி அரங்கேறியவர்:** பொதியமலை அகத்தியர் I.

9. **வரலாறு:** திரிபுராதிகளுடைய கொடுங்கோன்மைக்கு அஞ்சி, தமிழ்நாட்டு அரசர்களும், தமிழக் குடிகளும் கயிலை சென்று, இறையனாரிடம் முறையிட, அவர் தம்முடைய உற்ற நண்பரும், ஐம்பெருங் குழுவின் அங்கத்தினருமான அகத்தியரை விளித்து, சில சேனைகளுடன் அனுப்பி, நிருதர்களை அடக்கும்படி ஏவ, அவரும் நிருதர்களுடன் விந்தம்—கிர

Digitized by RMRL

வுஞ்சம் முதலிய இடங்களில் மலைந்து, சண்டை செய்து வெற்றிபெற்று, பொதிகை மலை வரை சென்று, நாட்டை மீட்டுச் சீர்ப் படுத்தினார்.

பொதிகைக்குத் தென்பால் அவரால் போக முடிய வில்லை. அதனாலே தான் நிலையாகப் பொதிகையிலேயே பாசறை அமைத்துக் கொண்டு, பரமேச்சுரன் வரும்வரை நாட்டை ஆண்டு வந்தார். பரமேச்சுரன் அகத்தியரை அனுப்பிய செய்தியை,

"நடுவு நில்லாது இவ்வுலகம் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென்ன, ஈசன்
நடுவுள அங்கி அகத்தியநீ போய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே."

என்ற தமிழ் மூவாயிரச் செய்யுளால் அறியலாம்.

நாடு வளம் பெறுதற்கு முதலில் மொழி வளம்பெற வேண்டுமெனக் கருதி, பொதிகையில் ஒரு தமிழ்ச்சங்கம் நிறீஇ, அகத்தியம் என்னும் பேரிலக்கண நூலை யாத்து, முத்தமிழையும் ஆய்ந்து வளர்த்துவந்தார்.

பின், பரமேச்சுரன் சேனைகளுடன் கயிலையினின்றும் வருவதைக் கேள்விப்பட்டு, எதிர்சென்று, திருவேற்காடு என்னும் இடத்தில் சந்தித்துப் பின், கூவம் சென்று, திரிபுர நிருதர்களை வெல்லக்கூடிய வழிகளை யெல்லாம் தீர்மானித்த பின், இருவரும் புறப்பட்டு, போர்க் கோலத்துடன் செல்ல, திருவதிகையில் நிருதர்கள் கி. மு. 16,000-ஆம் ஆண்டில் எதிர்க்க, அங்கு நடந்த சண்டையில் வெற்றிபெற்று, முப்புரத்தை நோக்கிச் சென்று, முப்புரத்தையும் தீக் கொளுவி, சரண் அடைந்த முப்புரத்து அரசர்களுக்கும் அபயம் நல்கி, நாட்டைத் தமிழர் ஆட்சிக்குக் கொண்டுவந்தார்கள். இதனை :

"மூவெயில் செற்ற ஞான்று உய்ந்த
மூவரில் இருவர்நின் திருக்கோயிலின் வாய்தல்
காவ லாளர்கள் என்றேவிய பின்னை
ஒருவன் நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
மணிமு ழாமு ழக்க அருள் செய்த
தேவ தேவநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே."

என்ற சுந்தரர் தேவாரத்தால் அறியலாம்.

இருவர் :—உடுக்கண்ணன் (தாரகாக்கன்)
மரைக்கண்ணன் (கமலாக்கன்)

ஒருவன் : அறிவுடைமாலி (வித்யுன்மாலி)

திரிபுர நிருதர்களிடமிருந்து நாட்டை மீட்டபின், நாட்டில் அமைதி ஏற்பட்டதால், பரமேச்சுரன் மகேந்திர மலையை அரச இருக்கையாக்கி, நாட்டைத் தாமே ஆண்டு வந்தார். அப்போதுதான் அவர் மகேந்திர மலையில் ஓர் தமிழ்ச் சங்கம் இரீஇ, மகேச ரூந்திரம் என்னும் பெரிய ஐவகை இலக்கண நூலையும் யாத்து, பொதியமலை அகத்தியரையும் அதில் அங்கத்தினராக இருக்கச் செய்து முத்தமிழையும் ஆய்ந்து வந்தார்.

அகத்தியர் மகேந்திரமலை தமிழ்ச் சங்கத்தில் அங்கத்தினராய் இருந்த போதிலும், பொதியமலையில் தாம் நிறீஇய தமிழ்ச் சங்கத்தையும் வளர்த்து வந்தார். சேர—சோழ—பாண்டிய அரசர்களும், அரச குடும்பத்தாரும், அந் நாடுகளில் உள்ள ஏனைய அறிஞர்களும் அப்பொதிகை மலைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து, தமிழ் மொழியை வளர்த்து வந்தார்கள். மூன்று நாடுகளுக்கும் பொதுவான மலையானதால் அம் மலைக்குப் பொது+இல்=பொதியில் என்றும் அம் மலையில் ஏற்படுத்தப்பட்ட சங்கத்துக்கு

Digitized by RMRL

பொதிய மலைத் தமிழ்ச் சங்கம் என்றும் பெயர்கள் உண்டாயின.

இச் சங்கமானது திரிபுராதிகள் காலமாகிய கி. மு. 16,000-ல் ஆரம்பிக்கப்பட்டு, சூரபன்மன் காலத்திலும் இராம—இராவணர் காலத்திலும், பாரத காலத்திலும், அதற்குப் பிற்பட்டுச் சில காலங்களிலும் நடந்து வந்ததாக இதிகாசங்களாலும், புராணங்களாலும், கல்வெட்டுக்களாலும், சாசனங்களாலும் அறிகிறோம்.

தலை—இடை—கடைச் சங்கங்கள் வேறு, இச் சங்கம் வேறு.

கம்ப ராமாயணம் நாட விட்ட படலத்தில்,

"தென் தமிழ் நாட்டகன் பொதியில்
திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற்பீரேல்."

என்று கூறப்பட்டுள்ளதை நோக்க, இராமாயண காலத்தில் கபாடபுரத்தில் இடைச்சங்கம் நடைபெற்று வந்த போழ்தே, பொதியமலையில் அகத்தியர் சீடர் பரம்பரையில் வந்து, அகத்தியர் பெயர்கொண்ட ஒருவரால் தமிழ்ச்சங்கம் நடைபெற்று வந்தது என்றும், அச் சங்கத்தின் புகழானது வடநாட்டிலும் பரவி இருந்ததென்றும் அறிகிறோம்.

வான்மீகி இராமாயணத்தில் பொதிகைமலை அகத்தியரைப் பற்றியும், அவர் நிறீஇய தமிழ்ச் சங்கத்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. அது வருமாறு :

வான்மீகம், ஆரணியகாண்டம் 11-12 சுலோகங்களில் விந்திய மலைக்குத் தென்பால் பஞ்சவடியை அடுத்து (Nasik) இருந்த ஓர் அகத்தியர் ஆசிரமத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

வான்மீகம்—கிட்கிந்தாகாண்டம் 15-16 சுலோகங்களில், தென் கடல் ஓரத்தில் மலய மலையில் (பொதிகை

மலை) உச்சியிலே ஆதித்தனுக்குச் சமானமான மிகுந்த ஒளியையுடைய முனிசிரேட்டரான அகத்தியர் இருக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது.

இன்னும் அந்த வான்மீகத்திலேயே, கோசல நாட்டில் வேத சுருதி என்ற கங்கையின் உபநதிக் கரையில் ஒரு அகத்தியர் ஆசிரமம் இயற்றித் தவம் புரிந்து வந்ததாகவும்,

இலங்கைத் தீவின் தெற்கேயுள்ள குஞ்சரமலையில் ஒரு அகத்தியர் ஆசிரமம் அமைத்துத் தவம் இயற்றி வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆதலின், அகத்தியர் என்னும் பெயர்கொண்ட முனிவர்களும், அறிஞர்கள் பலரும் அக்காலத்தில் இருந்தனர் என்றும், அதற்குப் பிற்காலத்திலும் அப் பெயர் கொண்டவர் பலர் இருந்தனர் என்றும் அறிகிறோம்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த எருமை நாட்டிற்கு அரசனாகிய சுக்ரீவன் தன் வானர வீரர்களுக்கு, "மலய மலையில் அகத்தியருடைய தமிழ்ச்சங்கம் இருக்கிறது. அங்கே சென்றால், அத் தமிழ் மயக்கத்தால் அங்கேயே நின்று விடுவீர்கள். ஆதலால், ஆண்டுச் செல்லாது, விலகி மகேந்திரம் செல்லுங்கள்," என்று கூறியுள்ளதாக இராமாயணத்தில் வருவது சிந்திக்கத்தக்கது.

பாரத காலத்திலும் இத் தமிழ்ச் சங்கத்தைப்பற்றிக் கேள்விப்படுகிறோம். ஆதலின், பாண்டியர்களால் தென் மதுரை, கபாடபுரம், கூடல் முதலிய ஊர்களில் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கங்களுக்கும் இதற்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

இச் சங்கம் எப்போது இறுதி உற்றது என்பது இனி வரும் ஆராய்ச்சியால் அறியத்தக்கது.

Digitized by RMRL

௬. மணிமலைத் தமிழ்ச்சங்கம்

(உருவ எழுத்துக்காலம்)

1. காலம்: கி. மு. 14550 முதல் கி. மு. 14490 வரை அறுபது ஆண்டுகள்.

2. இடம்: மணிமலை. (இஃது மேருமலைத் தொடரின் 49 கொடுமுடிகளில் ஒன்று. ஏழ்குன்ற நாட்டு மகேந்திரமலைக்கும் தெற்கே இருந்தது. இம் மலை பெருவள நாட்டைச் சேர்ந்தது.)

3. சங்கம் இரீஇயவர்: திரிபுரம் எரித்த பரமேச்சுரன் குடிவழியில் வந்த ஒளிச்செங்கோ என்னும் பேர் அரசன்.

4. புலவர்: (1) சக்கரன் (சங்கத் தலைவன்)
(2) பேராற்று நெடுந்துறையன்
(3) இடைகழிச் செங்கோடன்
(4) தனியூர்ச் சேந்தன்
(5) பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் முத்தூர அகத்தியன் முதலியோர்.

5. நூல்: (1) மகேசசூத்திரம் (2) களவியல்
(3) அகத்தியம் (4) பேராற்று நெடுந்துறையன் பெருநூல்
(5) இடைகழிச் செங்கோடன் இயல்நூல்.

6. பாடப்பட்டன: (1) பேராற்று நெடுத்துறையன் பெருநூல் (2) இடைகழிச் செங்கோடன் இயனூல் (3) தனியூர்ச் சேந்தனால் பாடப்பட்ட செங்கோன் தரைச்செலவு.

7. பாடப்பட்டோர்: ஒளிச்செங்கோ

8. **கவியரங் கேறிய அரசர்:** ஒளிச்செங்கோ

9. **வரலாறு:** இச் சங்கமானது ஒளிநாட்டு வேள்குல அரசர் குடிவழியில் வந்த **ஒளிச் செங்கோ** என்பவனால் கி. மு. 14550-இல் நிறுவப்பட்டு அறுபது ஆண்டுகள் நடைபெற்றது.

தமிழ் நாட்டை ஆண்ட ஒளிநாட்டு வேள் குல அரசர்களில் இவனே கடைசியானவன். இவன் பட்டத்துக்கு வந்ததும் அரச இருக்கையை மகேந்திர மலையினின்றும் மாற்றி மணிமலையில் ஏற்பாடு செய்தான். இதனை:

"பேராற் றருகில் பிறங்கு **மணிமலையில்**
சீராற்றும் **செங்கோ** திறற்செங்கோ—நேராற்றும்
பேர்அவை யிலேநூற் பெருமக்கள் சூழ்ந்தேத்தப்
பாராசு செய்ததமிழ்ப் பைந்தேவி." (தமிழ்விடு தூது)

என்னும் அடிகளால் அறியலாம்.

இவ்வரசனைப் பற்றித் **தனியூர்ச் சேந்தன்** என்னும் புலவன், இவன் வானவர் நாடாகிய திபேத்து—சீனம்—கடாரம் முதலியவைகளை வென்று அடிப்படுத்தியதைக் குறித்துச் "**செங்கோன் தரைச் செலவு**" என்ற நூலில் பாடியுள்ளார். இந்நூல் முழுவதும் "**தாப்புலிப்பா**" என்னும் பாவினத்தால் பாடப்பட்டுள்ளது.

இப்போது இருக்கும் தொல்காப்பியத்திலாவது, அதற்குப்பின் வந்த நூல்களிலாவது, தாப்புலிப்பா இனத்தைப் பற்றிக் கூறப்படவே இல்லை. **இஃது ஒன்றே இந்நூலானது தொல்காப்பியத்துக்கு முற்பட்ட நூல் என்று தெரிவிக்கப் போதுமானது.**

இன்னும் இந்நூலின்கண் செங்கோவால் நிறுவப்பட்டு, சக்கரன் என்னும் புலவன் தலைமையில் நடத்தப்பட்ட தமிழ்ச்சங்கத்துக்கு நூல் பேராற்று நெடுந்துறையன் பெரு

Digitized by RMRL

நூலும், இடைகழிச் செங்கோடன் இயனூலும் என்று கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்திலும் அதற்குப்பின் வந்த நூல்களிலும் காணப்படாத புணர்ச்சி விதிகள் பெருநூலிலும், இயல்நூலிலும் காணப்படுகின்றன.

நீட்டொலிப் புணர்ச்சி (தீர்க்க சந்தி) எடுத்தொலிப் புணர்ச்சி (குணசந்தி), குவித்தொலிப் புணர்ச்சி (விருத்தி சந்தி) என்ற புணர்ச்சி விதிகள் அவ்விரு நூலிலும் கூறப்பட்டுள்ளன.

ஆதலின், தொல்காப்பியர் காலத்துக்குச் சற்று முன் தான், இப் புணர்ச்சி விதிகளை வடமொழியாளர் எடுத்துத் தங்களுடைய மொழிக்கு இலக்கணம் வகுத்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இவ்வரசன் மிகுந்த திறமை வாய்ந்தவன் என்றும், இவன் பெயரைக் கேட்ட ஏனைய அரசர்கள் இடியேறு கேட்ட அரவம் போல நடுநடுங்குவார்கள் என்றும் அடியில் காட்டிய செங்கோன் தரைச் செலவுப் பாட்டால் அறிகிறோம் :—

"பேராறும் வழிக்கழியும் பிற்படுக்கும் அதன் முன்னே
வாராரும் கழலடிக்கீழ் வைத்திடா மணித்தலைகள்
மாண்ட மாண்ட......" (செங்கோன் தரைச்செலவு)

இவ்வரசன் நிறுவிய தமிழ்ச் சங்கத்திற்குச் **சக்கரன்** என்னும் புலவன் தலைமை தாங்கினான் என்பது :—

"தமிழ்த் தலைமை தலைக்கொண்டான்
சக்கரன் தக்கார் குழுவில்
சிமிழ்ப் பித்தான் ஏனைமொழிச்
சிறுகண்கள் அவன் தருக்கச்
செப்புவேன் திறத்தினே."

என்ற செய்யுளால் அறியலாம்.

செங்கோ தமிழ்ச்சங்கம் இரீஇத் தமிழை ஆய்ந்தான் என்பது:—

"செங்கோவே ஒளிச் செம்மல்
திருக்கோவே மணிக்கோடு
தங்கு பெருவள நாட்டில்
தமிழிருந்து புறங் காக்கும்
தமிழ் நாடியாங்கே."

என்ற செய்யுளால் அறியலாம். மேலே கூறப்பட்ட செய்யுட்கள் எல்லாம் தாப்புலிப்பா இனத்தைச் சேர்ந்தனவே.

செங்கோவின் அரசு கி. மு. 14490-இல் முடிவு பெறவே, அவனுக்கு அப்புறம் நாட்டைச் செம்மையாய் ஆளவும், சீனம்-சீசம்-கடாரம்-கிருதிநாடு முதலிய தேயங்களின் அரசர்களை நண்பராகக் கொள்ளவோ, அல்லது, அடக்கி ஆளவோ, ஒளிநாட்டு ஒளியர்குடிவழியிலாவது, சேர-சோழ-பாண்டியர் குடிவழியிலாவது ஆள் இல்லாமற் போகவே, செங்கோவால் அடக்கி ஆளப்பட்ட நாடுகள் எல்லாம் தன்னாட்சி பெற்றன. சீன தேசத்தார் செங்கோவால் நசுக்கப்பட்டவர்கள் ஆனதால், செங்கோவின் ஆட்சி முடிந்ததும், தமிழ்நாடு சரியானபடி இல்லாததால் தமிழ்நாட்டின் மீது சீனர்கள் படையெடுத்து வந்து நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

மங்கோலிய (அவுணர்) வகுப்பைச் சேர்ந்த சீனதேசத்தார் ஆட்சி தமிழ்நாட்டில் கி. மு. 14490-முதல் கி. மு. 14058-வரை 432 ஆண்டுகள் நடைபெற்று வந்தது. சீன தேசத்து அவுணர்களுடைய ஆட்சி தமிழ்நாட்டில் மிகக் கடுமையாக இருந்தது. அவுணர் ஆட்சியின் கடைசி அரசர்கள் சூரபதுமன்—சிங்கமுகன்—தாருகன் என்பவர்கள். இவர்கள் மூன்றுபேரும் உடன்பிறந்தவர்கள். பானுகோபன்

Digitized by RMRL

என்பவன் சூரபதுமனுடைய பிள்ளை. இவர்களைப்பற்றிக் கந்தபுராணம் விரிவாய்ப் பேசுகின்றது. ஆண்டுக் கண்டு கொள்க.

கந்த புராணத்தில் தேவர்கள் என்று பேசப்படுவோர் தமிழர்களே.

உருவ எழுத்து வரலாறு

தமிழ்மொழியானது முதன் முதல் உருவ எழுத்தை உடையதாய் இருந்தது. உருவெழுத்துக்குப் படவெழுத்து, சித்திர வெழுத்து என்றும் பெயர்.

தமிழ்மொழியில் உருவ எழுத்துக் காலம் ஒன்று இருந்தது என்பதைக் குறிக்க, யாப்பருங்கல விருத்தி உரையில், ஓர் ஆசிரியனுக்குத் தெரிந்திருக்க வேண்டிய எழுத்து வகைகளைக் கூறுமிடத்து உரையாசிரியர் பின்வரும் சூத்திரங்களை மேற்கோள்களாகக் காட்டுகிறார். அந்தச் சூத்திரங்கள் எந்த நூலினின்றும் எடுக்கப்பட்டவையோ தெரியவில்லை. உரையாசிரியரும் கூறவில்லை. ஆதலின் இச் சூத்திரங்கள் எல்லாம் ஆழிவடிம்பலம்பநின்ற பாண்டியன் காலத்துக்கு முற்பட்ட இலக்கண நூல்களில் கண்டவைகளே யாகும். அவையாவன :—

எழுத்து : "உருவே, உணர்வே, ஒளியே, தன்மை என
இருவகை எழுத்தும் ஈரிரண்டாகும்,"

உருவு : "காணப்பட்ட உருவ மெல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினைபோல
எழுதப் படுவது உருவெழுத் தாகும்,"

உணர்வு : "கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை
உண்டென்று உணர்த்துவது உணர்வெழுத்
தாகும்,"

ஒலி: "இசைப்படு புள்ளின் எழாஅல் போலச்
செவிப்புல னாவது ஒலியெழுத் தாகும்,"

தன்மை: "முதற்காரணமும் துணைக்காரணமும், துணைக் காரணத்தொடு தொடரிய உணர்வும், அவற் றொடு புணர்ந்த அகத்தெழு வளியின், மிடற் றுப் பிறந்திசைப்பது தன்மை எழுத்தே."

எழுத்து என்னும் சொல் தமிழ்மொழியில் வழங்கப் படுவதை நோக்கின், படவெழுத்துக்கள் பயிலப்பட்டு வந்த தனாலேயே அவ்வெழுத்துக்களுக்கு எழுத்து என்றே பெயர் அமைந்தது.

எழுத்து—சித்திரம்—ஓவியம்

ஆழிவடிம்பலம்பநின்ற பாண்டியனின் தங்கக் கனி களிலும், இரத்தினக் கனிகளிலும் சீன தேசத்தார் வேலை செய்து வந்தார்கள் என்று முன்னமே கூறினும், அக் காலத் தில்தான் சீனம், எகுபதியம் முதலிய மொழிகளுக்குத் தமிழ் உருவ எழுத்துக்களைப் பார்த்து உருவ எழுத்துக்களை அமைத்துக்கொண்டார்கள். அதற்குமுன் அம்மொழி களுக்கு எழுத்துக்கள் கிடையா. அம் மொழிகளில் இன் றும் உருவ எழுத்துக்களே நடைமுறையில் இருக்கின்றன.

கி. மு. பத்து இலக்கத்துக்கும், கி. மு. எட்டு இலக்கத் துக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழர்கள் சீயம்—சாவ கம் — சுமேரியா — பாபிலோனியா — அசிரியா — பாலத் தீனம்—எகுபதியம் முதலிய நாடுகளில் குடியேறித், தங்கள் நாகரிகத்தைப் பரப்பிவந்தார்கள். தமிழர்களுடைய உருவ எழுத்துக்களும் அந் நாடுகளில் பரவலாயின.

சுமேரியா—அக்கேடியா — பாபிலோனியா—முதலிய நாடுகளில் உருவ எழுத்துக்களே ஆப்பெழுத்துக்களாக மாறி வழங்கப்பட்டன.

Digitized by RMRL

ஆப்பெழுத்து (Cuniform characters)

இப்போது சீன மொழிக்கு 420 எழுத்துக்கள் இருக்கின்றன. இதுதான் தற்காலம் உலகத்தில் உள்ள மொழிகளுள் அதிக எழுத்துக்களை உடைய மொழி. இதனைக் கூர்ந்து நோக்குமிடத்துத் தமிழுக்கும் உருவ எழுத்துக் காலத்தில் மிக்க எழுத்துக்கள் இருந்திருக்க வேண்டும். இத்தனை என்று கணக்கிடுவதற்குத் தகுந்த ஆதாரம் கிடைக்கவில்லை.

ரு. குன்றம் எறிந்த குமரவேள் தமிழ்ச்சங்கம்

(கோல் எழுத்துக் காலம்)

1. காலம்: கி. மு. 14058 முதல் கி. மு. 14004 வரை 54 ஆண்டுகள்.

2. இடம்: திருச்செந்தூர் (இந் நகருக்குத் திருச் சீரலைவாய் என்றும், அலைநகர் என்றும் பெயர்)

3. சங்கம் இரீஇய அரசர்: குன்றம் எறிந்த குமரவேள்

4. புலவர்:
   (1) குன்றம் எறிந்த குமரவேள் (தலைவர்)
   (2) வாதாபி அகத்தியர்
   (3) புலத்தியர் I
   (4) சனகர் II
   (5) சனற் குமாரர் II

   முதலியோர்.

5. நூல்: (1) குமரம் (2) முருகன் அகப்பொருள் விருத்தி
   (3) மகேசம் (4) களவியல் என்னும் ஐந்திணை அகநூல்
   (5) நெடுந்துறையன் பெருநூல்
   (6) செங்கோடன் இயனூல்
   (7) (வாதாபி) அகத்தியம்

   முதலியன.

6. பாடப்பட்டன: (1) குமரம்
   (2) முருகன் அகப்பொருள் விருத்தி
   (3) (வாதாபி) அகத்தியம்

   முதலியன.

7. பாடப்பட்டோர்: குன்றம் எறிந்த குமரவேள்

8. கவி அரங்கேறிய அரசர்: குன்றம் எறிந்த குமரவேள்

Digitized by RMRL

9. வரலாறு: தமிழ்நாட்டின்மேல் முதன் முதல் படை எடுத்தவர் நிருதி நாட்டு (Africa) நிருதர்கள் (Africa Negroes) இவர்களுடைய ஆட்சி தமிழ் நாட்டில் கி மு. 16,500 முதல் கி. மு. 16,500 வரை 500 ஆண்டுகள் நடைபெற்றது.

கி. மு. 16,000-இல் திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் நிருதர்களாகிய திரிபுர இராக்கதர்களை வென்று, நாட்டை மீட்டு, தமிழர் ஆட்சியை நிறுவினர். நாடும் கி. மு. 14,490 வரை தமிழரிடம் இருந்தது.

கி. மு. 14,490-இல் தமிழ் நாடு இரண்டாம் தடவை அன்னியர் ஆட்சிக்கு உட்பட்டது.

இரண்டாம் தடவை படை எடுத்து வந்து நாட்டைக் கைப்பற்றியவர்கள் சீன தேசத்து அவுணர்கள். இவர்களுடைய ஆட்சியில் தமிழ்நாடு நானூற்றி முப்பத்திரண்டு ஆண்டுகள் துன்பம் உற்று இருந்தது. கடைசியாக ஆண்ட சீன தேசத்து அவுண அரசர்களாகிய சூரபதுமன்—சிங்க முகன்—தாருகன்—பானுகோபன் முதலியோர்களைக் கி. மு. 14058-இல் நம் செந்தில் மேய வள்ளி மணாளர்—குன்றம் எறிந்த குமரவேள் வென்று, நாட்டை மீட்டு, தமிழர் ஆட்சியை மறுபடியும் நிறுவினர்.

நாட்டை மீட்டதோடு நில்லாமல் நாடு வளம்பெற, மொழி வளம்பெற வேண்டும் என்று, திருச்செந்தூரிலேயே தமிழ்ச் சங்கம் ஒன்று நிறீஇ, முத்தமிழையும் வளர்த்து வந்தார்.

குமரம் என்னும் பேரிலக்கண நூலை வகுத்து, ஐந்திலக்கணங்களையும், அகத்தியர், புலத்தியர் I, சனகர் II, சனற்குமாரர் II, நால்வருக்கும் போதித்தார்.

திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமானிடம் ஆலின் கீழ் அறம் நான்கும் கேட்ட சனகர்—சனற் குமாரர் வேறு. குமரவேளிடம் உபதேசம் பெற்றவர்கள் அவர்கள் பரம்பரையில் வந்தவர்கள் ஆவார்கள். வாதாபி அகத்தியரும் பொதியமலை அகத்தியரின் மாணாக்கர் பரம்பரையில் வந்தவர். இருவரும் ஒருவர் என்று மயங்கற்க.

திருச்செந்தூரில் குமரவேள் முத்தமிழையும் சங்கம் இரீஇ ஆய்ந்துவந்தார் என்பது :

"முத்தமிழை ஆயும் வரிசைக்கார" என்று திருச்செந்தூர்த் திருப்புகழில் அருணகிரியார் கூறி இருப்பதால் அறியக்கிடக்கின்றது. குமரவேள் முத்தமிழும் வல்லவர் என்பதனைத் திருப்புகழில் பல இடங்களிலும் "முத்தமிழோனே" என்று கூறப்பட்டுள்ளதை நோக்க விளங்கும்.

குமரவேளிடம் உபதேசம் கேட்ட அகத்தியர் பொதியமலை அகத்தியரின் வழிவந்தவர் என்பதனை :

"சிவனை நிகர் பொதியவரை முனிவன் அகமகிழ
இருசெவி குளிர இனிய தமிழ்—பகர்வோன்."

என்ற திருச்செந்தூர்த் திருப்புகழால் அறியலாம்.

குமரவேள் நால்வருக்கும் (சனகர்—சனற் குமாரர்—அகத்தியர்—புலத்தியர்) முத்தமிழ் இலக்கண இலக்கியங்களையும், தமிழ் வேத ஆகமங்களையும் போதித்தார் என்பது :

"சனகர்க்கும் அகத்திய புலத்திய சனற் குமாரர்க்கும்
—விபத்தியில் ஞான
படலத்துறு லக்கணலக்கியத் தமிழ்த் திரயமத்தில்
அகப்பொருள் விருத்தியினை பழுதற்றுணர்
வித்தக சற்—குரு நாதா."

என்ற பழனித் திருப்புகழாலும் ;

Digitized by RMRL

"அருமறை தமிழ் நூலடைவே
தெரிந்துரைக்கும் - புலவோனே."

என்ற சுவாமிமலைத் திருப்புகழாலும்;

"அறம் நாலைப்—புகல்வோனே."

என்ற அவிநாசித் திருப்புகழாலும் அறியக்கிடக்கின்றது.

குமரவேள் முத்தமிழ்ப் பேரிலக்கண நூலாகிய "குமரம்" என்ற நூலையும், "முருகன் அகப்பொருள் விருத்தி" என்ற அகநூலையும் யாத்து உதவியது மேற் காட்டிய பழனித் திருப்புகழால் அறியலாம்.

திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் மகேசம் என்ற பேரிலக்கண நூலையும், களவியல் என்ற அகநூலையும் யாத்து அருளினது போல், குன்றமெறிந்த குமரவேளும் குமரம் என்ற பேரிலக்கண நூலையும், அகப்பொருள் விருத்தி என்ற அகநூலையும் யாத்து அருளினர்.

மகேசம்-களவியல் - அகத்தியம் - பெருநூல் - இயனூல் என்ற இலக்கணங்கள் எல்லாம் தமிழ் உருவ எழுத்தாக இருந்த காலத்தில் யாக்கப்பட்டன.

ஆனால், கி. மு. 14490 முதல் கி. மு. 14058 வரை நடைபெற்ற அவுணர் ஆட்சியில் தமிழ் வளங்குன்றி எவ்வளவோ மாறுதல்களை அடைந்தது. உருவ எழுத்தாக இருந்த தமிழ்மொழி கோல் எழுத்தாக மாறிவிட்டது. அதற்கு இணங்கவே, குன்றம் எறிந்த குமரவேள் முன்னோர் இலக்கணங்களைத் தழுவியும், கோல் எழுத்துக் காலத்துக்கு ஏற்றபடியும், புதியன புகுத்து, குமரம் என்ற பேரிலக்கண நூலை வகுத்தார். அதனையே அவர் தம் மாணவர்களுக்குப் போதித்தார். கோல் எழுத்துக் காலத்தில் தமிழ்மொழிக்குப் பதினறு உயிர்களும் முப்பத்தைந்து

மெய்களும் ஆக ஐம்பத்தொரு அக்கரங்கள் இருந்தன என்பது நூல்களாற் புலனும்.

"வழுதியர் தமிழின் ஒரு பொருள் அதனை
வழிபட மொழியும்—குமரேசா."

என்ற குன்றுதோருடல் திருப்புகழைக் கூர்ந்து நோக்குமிடத்து, குமரவேள் காலத்துக்குப் பன்னூறாயிர ஆண்டுகள் முன்பு ஆழிவடிம்பலம்பநின்ற பாண்டியனாலும், அவன் முன்னோர்களாலும், அவனுக்குப் பின் கி. மு. 14490 வரை வழி வழி வந்த பாண்டியர்களாலும், வளர்க்கப்பட்ட அகப்பொருள் புறப்பொருள் நூல்களில், அகப்பொருள் நூல்களைத் தழுவி "அகப்பொருள் விருத்தி" என்னும் நூலையும், புறப்பொருள் நூல்களைத் தழுவி "பொருள் நூல்" (அர்த்த சாத்திரம்) என்னும் நூலையும் யாத்துத் தமிழ் உலகிற்கு வழங்கினர் என்று போதருகின்றது.

குன்றம் எறிந்த குமரவேள் சூரபன்மன் முதலாய அவுணர்களைத் தன் வேற்படையால் வென்ற காலத்தில், ஒரு பெரிய கடல்கோள் ஏற்பட்டு, பஃறுளியாறும் பன்மலை அடுக்கும், பெருவள நாடும், ஒளி நாடும், பெருவள நாட்டைச் சேர்ந்த மேருமலைத் தொடரும், அதனைச் சேர்ந்த கொடுமுடிகளில் பலவும், கடலால் விழுங்கப்பட்டன என்பது பின்வரும் பாசுரங்களால் வெளியாம் :

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்து
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள."

(சிலப் - காடு - ௨0 - ௨௨)

"சேடன் மேருவும் சூரனும் தாருகனும் வீழ
......விடும்—அங்கைவேலா."

"நேமிச் சூரொடு மேருத்தாள் எழ." (திருச்செந்தூர்த் திருப்புகழ்)

Digitized by RMRL

"மேரு கிரிதலை மண்டு தூள்எழ வேலைஉருவிய—வயலூரா."
(விராலிமலை)

"பாதாள சேடனுடல் ஆயிர பணா மகுட மாமேரோ
டேழேழ ஒதுகிரி சூரநடல் பாழாக தாணிவிணி லேற
புவி வாழவிடு—சுடர் வேலா." (திருமாகாளம்)

"கலக அசுரர் கிளைமாள மேருகிரி தவிடுபட உதிர
ஓலவாரி அலைகதற வரி அரவம் வாய் விடா."
(திருவிடை மருதூர்)

இங்கே கூறப்பட்ட கடல்கோள் ஏற்பட்டது கி. மு. 14058-இல். இதனையே உரையாசிரியர்கள் ஆதியூழி என்று கூறுப. ஆதியூழி என்பதும் முதலூழி என்பதும் ஒன்றே.

இம் முதலூழியைப்பற்றி அடியார்க்கு நல்லார் சிலம்பு 8-1-இல் "நெடியோன் குன்றமும் தொடியோள் பவ்வமும்" என்ற அடிகட்கு,

"அக்காலத்து, அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும், குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக்காவதவாறும், இவற்றின் நீர்மலிவானென்ன மலிந்த ஏழ்தெங்கநாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன்பாலை நாடும், ஏழ் பின்பாலை நாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ் குணகாரை நாடும், ஏழ் குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன்மலை நாடும், காடும், நதியும், பதியும், தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின் காறும், கடல் கொண்டொழிதலால் குமரியாகிய பவ்வம் என்றார் என்று உணர்க. இஃது என்னை பெறுமாறு எனின், வடிவேல் எறிந்த........(சிலம்பு 11-18 & 20) என்பதனானும், கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த இறையனார் அகப்பொருள் உரையானும், உரையாசிரியரா கிய இளம்பூரண அடிகள் முகவுரையானும் பிறவாற்றானும்

பெறுதும்" என்று கூறியுள்ளதை உற்று நோக்குமிடத்து மேலே கூறியவை விளங்கும். குன்றம் எறிந்த குமரவேள் என்பவர் ஒளிநாட்டு வேளாளர் பரம்பரையைச் சேர்ந்தவர். திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமான் வழி வந்தவர். இவர் முன்னோர்கள் ஆழிவடிம்பலம்பநின்ற பாண்டியன் காலத்துக்கு முந்தியே, அஃதாவது, கி. மு. 30,000-க்கு முந்தியே, வடக்கே சென்று, விந்திய மலைக்கு வடக்கேயுள்ள நாட்டையும், இமயமலை நாட்டையும் கைப்பற்றி, திருக்கயிலாயத்தை (Mount Kailas) அரசிருக்கையாகச் செய்து, ஆண்டிருந்து ஆண்டுவந்தார்கள். சேர—சோழ—பாண்டியர் என்னும் மூவேந்தரும் விந்திய மலைக்கும் தென்பாலி முகத்துக்கும் இடைப்பட்ட நாட்டை ஆண்டு வந்தார்கள். அப்படி ஆண்டுவருங் காலத்தில்தான் முதன் முதல் நிருதிநாட்டு நிருதர்களாலும், இரண்டாவது சீன தேசத்து அவுணர்களாலும் படை எடுப்புக்கள் ஏற்பட்டு, முந்தியது திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமானாலும், பிந்தியது குன்றம் எறிந்த குமரவேளாலும் தவிர்க்கப் பட்டன.

குன்றம் எறிந்த குமரவேளுக்கும் சூரபதுமன் முதலிய அவுணர்களுக்கும் நடந்த சண்டையில் முக்கிய உதவியாய் இருந்தவர்கள் கருரின்கண் அரசாண்ட முசுகுந்தச் சோழனும், கடார தேயத்து அரசனாகிய இந்திரனும் ஆவர்.

போர் நடந்தபோது சீன தேசத்திலிருந்து அவுணன் சூரபதுமனுக்கு உதவிப்படைகள் வராமல் இருக்க வேண்டி, குமர வேள் முசுகுந்தனையும் இந்திரனையும் கடாரம் வழியாகச் சீன தேசத்துக்குச் சேனைகளுடன் அனுப்பி, அக்காலத்தில் சீனாவில் அரசுபுரிந்த வலன் என்னும் அவுணனைத் தாக்கும்படி ஏற்பாடு செய்தார். முசுகுந்தனும்

Digitized by RMRL

வலனை வென்று வாகை சூடினன். முசுகுந்தனால் வலன் என்னும் அவுணன் கொல்லப்பட்டது கி. மு. 14058 ஆகும்.

தமிழ்நாட்டில் அவுணர் ஆட்சி நானூற்று முப்பத்திரண்டு ஆண்டுகள் நடைபெற்று இருக்க, கந்த புராணம் 108 சதுர்யுகம் என்று கூறுவ தென்னை? என்றாற் கூறுதும் :—

வியாசர் காலமாகிய பாரத காலத்துக்கு முந்திச் சதுர் யுக வரையறை கிடையாது. வியாசர் சதுர் யுகங்களை வகுத்த தற்கு முன் யுகம் என்பது ஓர் ஆண்டு என்ற பொருளில் வழங்கப்பட்டது. இன்றும் தெலுங்க நாட்டில் யுகாதி என்று ஆண்டுப் பிறப்பைக் கூறுவதும், யுகாதிப் பண்டிகை என்று ஆண்டு ஆரம்ப விழாவைக் கொண்டாடுவதும் இதனைத் தெளிவுபடுத்தும்.

கலியுகம்,	4,32,000	ஆண்டுகள்	என்றும்,
துவாபரயுகம்,	8,64,000	,,	,,
திரேதாயுகம்,	12,96,000	,,	,,
கிரேதாயுகம்,	17,28,000	,,	,,

வியாசர் வகுத்தார்.

கலியுகத்தை விட துவாபர யுகம் (தோ—துவா—இரண்டு) இரண்டு மடங்கு அதிக ஆண்டுகள் உள்ள தென்றும், திரேதாயுகம் (திரே—திரி—மூன்று) மூன்று மடங்கு கலியுகத்தைவிட அதிக ஆண்டுகள் உள்ளது என்றும், கிரேதாயுகம் கலியுகத்தை விட நான்கு மடங்கு ஆண்டுகள் உள்ள தென்றும் வகுத்த முறையே யுகக் கட்டுப் பாட்டினை நன்கு விளக்கும்.

இப்போது நாம் வழங்கும் அறுபது ஆண்டுப் பெயர் களும் கி. பி. 426-இல் ஓர் ஆரிய அரசனால் ஏற்படுத்தப் பட்டவை. இப் பெயர்கள் ஏற்பட்டு இற்றைக்கு (1948-க்கு)

1522 ஆண்டுகள் ஆகின்றன. கி. பி. 426-க்கு முன் அறுபது ஆண்டுப் பெயர்கள் கிடையா. ஆனல் அந்தந்த நாட்டுப் பேர் அரசர்கள் பெயரால் இன்ன அரசனுடைய ஆட்சியில் இத்தனையாவது ஆண்டு என்று கூறிவந்தார்களே ஒழிய வேறின்று.

சாலிவாகன சகம் கி. பி. 78-இல் ஏற்பட்ட ஞான்று அறுபதாண்டுப் பெயர்களும் ஏற்பட்டன என்று கூறு வாரும் உண்டு. எப்படி ஆனாலும் அப் பெயர்கள் தொன்று தொட்டவை அல்ல.

ஆதலின், யுகம் என்னும் சொல்லுக்கு உண்மைப் பொருள் ஆண்டு என்பதே.

இப்போது, "108 சதுர்யுகம்" என்னும் தொடர் மொழிக்குப் பொருள் காண்போமாக. 108 சதுர் யுகம் என்பதனை "சதுர் 108 யுகம்" அஃதாவது, நான்கு 108 யுகம்" என்று கொண்டால், 4 × 108 = 432 ஆண்டுகள் என்றே பொருள் படுவதை நோக்கலாம். ஆதலின், இதுவே சரித்திர வரம்புக்கும், ஏனைய ஆராய்ச்சிகளுக்கும் இயைபாக உள்ளது.

ஆதலின், புராணக் கூற்றுப் பொய்யன்று. புராணங் களில் கூறப்பட்ட சரித்திர பாகங்களையும், கலைநூற் கருத் துக்களையும், பிரித்துத் தெரிந்துகொள்ள முயற்சி செய்வோ மானல் முரண்பாடு நீங்கும். அவ்வாறு தெரிந்துகொள்ள முடியாதவர்களே புராணங்கள் எல்லாம் குப்பைகள் என் றும், அவைகளில் உண்மை என்பது மருந்துக்கும் இல்லையென்றும் வாய் கூசாது கூறுவர்.

கம்பர் 5000-த்தை அறுபதினாயிரம் என்று கூறியது போல், புராணிகரும் நான்கு 108 யுகத்தை 108 சதுர்யுகம் என்று கூறியுள்ளார்.

Digitized by RMRL

கோல் எழுத்து வரலாறு

தமிழ்மொழியானது உருவ எழுத்தாயிருந்த நிலை மாறிக் கோல் எழுத்தாக ஏற்படுவதற்குப் பன்னூறாயிரம் ஆண்டு கள் ஆயின.

உருவ எழுத்துக் காலத்தில் தமிழ் மொழியினின்றும் பிரிந்த எருபதியம்-சீயம்-சீனம்-கடாரம் முதலிய மொழிகள் இன்றைக்கும் உருவ எழுத்துக்களாலேயே இயங்குகின்றன.

சீன தேசத்து அவுணர்களின் படைஎடுப்பினால் தமிழ் நாடு வளங்குன்றி, மொழி வளர்ச்சி பெறாமல், பலவித அல்லல்களுக்கு உட்பட்டதை நோக்கி, குன்றமெறிந்த குமரவேள் தம்முடைய கருணையினால் அவுணரை அடக்கி, வென்று, தமிழ் நாட்டைத் தமிழர்களிடம் ஒப்புவித்து, மொழிவளம் கருதித் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவி, மொழியைச் சீர்படுத்துவான் புக்கு, உருவ எழுத்துக் காலத்தில் பொருள்களையும் கருத்துக்களையும் குறிக்க இருந்த ஏராளமான எழுத்துக்களையும் குறியீடுகளையும் மாற்றி, ஒலிகளுக்குத் தக்க கீற்றுக்களை (கீற்று—கோடு—கோல்) உண்டாக்கி, வரிவடிவாகிய நெடுங்கணக்கைச் சீர் செய்தார். உருவங்களை எழுதுவதைவிட, கீற்றுக்களை வரைவது எளிதாயிருந்தபடியால் எல்லோரும் அதனைக் கைக் கொண்டார்கள்.

இம்மாதிரி, தமிழ்மொழியானது கோல் எழுத்தாய் (Pitmans Short hand like) இருந்த காலத்தில்தான் மராடம் - கூர்ச்சரம் - ஒட்டிரம் - சிந்தியம் - அரவம் (Arab) முதலிய மொழிகள் பிரிந்தன. அம்மொழிகள் எல்லாம் இன்றும் கோல்எழுத்துக்களாலேயே நடைபெற்று வரு கின்றன. இக் கோல் எழுத்துக் காலத்தின் பிற்பகுதியில் தான் ஆரியர் வருகை.

ஆரியர்கள் சிந்து-கங்கைச் சமவெளிகளில் குடியேறிய ஞான்று, தமிழ், மராடம், சிந்தி முதலிய மொழிகளின் எழுத்துக்களைப் பார்த்துத் தம்முடைய ஆரிய மொழிக்கும் எழுத்துக்களைக் கற்பித்துக்கொண்டார்கள். அதுவரை ஆரிய மொழி எழுத்து இல்லாமல் பேச்சு வழக்கிலேயே இருந்துவந்தது. அப்படி அவர்கள் தங்கள் மொழிக்கு ஏற்படுத்திக்கொண்ட எழுத்துக்களைத்தான் நாகரம் என்று கூறுகிறார்கள். இருக்கு என்று சொல்லப்படும் அவர்களுடைய வேதமும் அதுவரை எழுதப்படாமல் மனப்பாடம் செய்யப்பட்டுவந்தது. பிற்பட்டுத்தான் நாகர எழுத்துக்களில் இருக்குவேதம் எழுதப்பட்டது. அந்த இருக்கு வேதமே பாரத காலத்தில் இருந்த வியாசரால் இருக்கு—யசுர்—சாமம் என மூன்றாகச் செய்யப்பட்டது.

இன்றைக்கும் உருவ எழுத்தாயுள்ள சீன மொழியில் 420 எழுத்துக்கள் உள்ளன. இவ்வளவு எழுத்துக்களையும் நினைவில் பதிப்பது என்பது எளிதான காரியமன்று.

தமிழ் மொழிக்குக் கோல் எழுத்துக் காலத்தில் அத்துன்பம் நீக்கப்பட்டது. 420 எழுத்துக்களுக்கு மேல் இருந்த நெடுங்கணக்கு (51 ஆக) ஐம்பத்தொன்றாகக் குறுக்கப்பட்டது. மொழி வளர்ச்சி கருதி, குன்றமெறிந்த குமரவேள் தமிழ் நாட்டில் 54 ஆண்டுகள் இருந்து, தமிழ்ச் சங்கத்தில் தலைமை தாங்கி, இலக்கண நூல்கள், இலக்கிய நூல்கள், அகப்பொருள் விருத்தி முதலியவைகளை யாத்து, முனிவர்களுக்கும், அறிஞர்களுக்கும் அறிவுறுத்தி, தமிழ் நாட்டைக் காய்சின வழுதி என்னும் அரசன் கையில் ஒப்புவித்து, தமிழ்மொழியையும் புரக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டுப் பின் தாம் தம் இருப்பிடமாகிய கயிலை சென்றார்.

Digitized by RMRL

சூரபன்மன் போர் முடிந்ததும் குமரவேளுக்கும் கடார தேசத்து அரசன் மகள் தெய்வயானைக்கும் திருமணம் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றது. பின் சின்னாட் கெல்லாம் குமரவேள் இரண்டாம் மனைவியாக வள்ளிமலை அரசன் மகள் வள்ளியம்மையைத் திருமணம் செய்துகொண்டார்

குன்றம் எறிந்த குமரவேள் அவுணரை வெல்லுவதற்கு அமைத்த பாசறைகள் ஆறினையும் ஆறு படைவீடுகளாக இன்றும் நாம் கொண்டாடி வருகிறோம். அவுணருக்கும் குமரவேளுக்கும் நடந்த சண்டை ஐப்பசி மாதம் அமாவாசை கழிந்த மறுநாள் முதல் ஆறு நாள் நடந்தது. அந்நாட்களை இன்றும் நாம் நினைவு கூர்ந்து கந்தர் சட்டி உற்சவமாகக் கொண்டாடி நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

> " எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்பது தமிழ்வேதமாதலால், அதனைக் கடைப் பிடித்து ஒழுகுகின்றார்கள் தமிழர்கள். இது மாதிரியே திரிபுரம் எரித்த செய்தியையும் ஊர்கடோறு முள்ள சிவன் கோவில்களில் தேர்த்திருவிழாவாகக் கொண்டாடுகிறோம். திரிபுரச் சண்டை பத்து நாள் நடந்ததால் பத்து நாள் உற்சவம் கொண்டாடுகிறோம். இம்மாதிரி வெற்றி விழாக்களுக்கு எல்லாம் சரித்திரம் மறக்கப்பட்டுப் போகவே, விழாக்கள் வேடிக்கை விழாக்களாக மாறிவிட்டன. இவ்விழாக்களின் சரித்திரம் மறந்துபோகாமல் இருக்கும்படி ஏற்பாடு செய்துள்ளார்கள் தமிழ் நாட்டு ஆன்றோர்கள் என்பது உற்று நோக்குவோர்க்கு விளங்கும்.

தமிழ் மொழிக்குக் கோல் எழுத்துக் காலத்தில் 51 அக்கரங்கள் இருந்தன என்று மேலே கூறினோம். அஃதா

வது, உயிர் எழுத்துக்கள் 16-ம், மெய்யெழுத்துக்கள் 35-ம் ஆக 51 எழுத்துக்கள். இவ்வெண் தமிழ்மொழி வட்டெழுத்தாக மாறின காலத்திலும் 51 ஆகவே நடை பெற்று வந்தது. வட்டெழுத்துக் காலத்தில் இருந்த திருமூலர்,

"ஓதும் எழுத்தொடு உயிர்க்கலை மூவைந்து
ஆதி எழுத்தவை ஐம்பத்தோ டொன்றென்பர்
சோதி எழுத்தின் நிலையிரு மூன்றுள
நாத எழுத்திட்டு நாடிக் கொள்ளீரே."

"விந்துவி லும்சுழிநாதம் எழுந்திட
பந்தத் தலைவி பதினறு கலையதாக்
கந்தர வாகரம் காலுடம் பாயினள்
அந்தமு மின்றியே ஐம்பத்தொன் றாயதே."

"அகாரம் முதலாக ஐம்பத் தொன்றாகி
உகாரம் முதலாக ஓங்கி உதித்து
மகாரம் இறுதியாய் மாய்ந்து மாய்ந்தேறி
நகாரம் முதலாகும் நந்திதன் நாமமே." (திருமூலர்)

என்று தாம் பாடிய தமிழ் மூவாயிரத்தில் தமிழ் மொழிக்கு 51 எழுத்துக்கள் உண்டு என்றும், வட்டெழுத்துக் காலத்தில் இருந்த 51 எழுத்துக்களும் "ஆதி எழுத்து", அஃதாவது, வட்டெழுத்துக் காலத்துக்கு முந்தி கோல் எழுத்துக் காலத்தில் இருந்துவந்தவை என்றும் தெளிவாகக் கூறியுள்ளார். கோல் எழுத்துக் காலத்தில் ஏற்பட்ட இலக்கணங்களிலும் வட்டெழுத்துக் காலத்தில் ஏற்பட்ட இலக்கணங்களிலும் உருவஎழுத்துக் காலத்தில் இயற்றப் பட்ட பெருநூல்—இயனூல்—என்ற இலக்கணங்களில் கண்ட நீட்டொலிப் புணர்ச்சி—எடுத்தொலிப் புணர்ச்சி—குவித்தொலிப் புணர்ச்சி முதலிய புணர்ச்சி விதிகள் எடுத்து ஆளப்பட்டன. அப் புணர்ச்சி விதிகளைக் கோல்

Digitized by RMRL

எழுத்துக் காலத்திலும் குமரவேள் தாம் இயற்றிய "குமரம்" என்ற பேரிலக்கணத்தில் ஆண்டுள்ளார், அவ்வாட்சி வட்டெழுத்துக் காலத்திலும் தொடர்ந்து வந்து, தமிழ்மொழி சதுர எழுத்தாக மாறின காலத்தில்தொடர்வு அற்றது.

---

௯. தலைச்சங்கம்

(கோல் எழுத்துக் காலம்)

1. காலம்: 14004 B. C. முதல் 9564 B. C. வரை 4440 ஆண்டுகள்.

2. இடம்: குமரியாற்றங்கரையில் இருந்த தென் மதுரை.

3. சங்கம் இரீஇய அரசர்: காய்சின வழுதி முதல் முதலாம் கடுங்கோன் வரை எண்பத்தொன்பது (89) பாண்டியர்கள்.

4. புலவர்: இத் தலைச்சங்கத்தின் உறுப்பாளர் எண் 549. இச் சங்கத்தில் ஆதிமுதல் இறுதிவரையில் கலந்து கொண்ட புலவர்கள் 4449 பேர். இவர்களில் பேர் தெரிந்தவர்கள்:

   (1) இறையனார் II: (இவர் களவியல் செய்த இறையனார் I குடியில் வந்தவர். ஒளி நாட்டு வேளாள அரச பரம்பரையினர்.)

   (2) குன்றம் எறிந்த குமரவேள்: (இவரும் ஒளி நாட்டு வேளாளர் பரம்பரையைச் சேர்ந்தவரே. இவர் இச் சங்கத்தைக் காய்சினவழுதி கையில் ஒப்புவித்து விட்டு, கயிலைக்குச் சென்றுவிட்ட போதிலும் சங்கத்தில் அங்கத்தினராய் இருந்து வந்தார்.)

   (3) நிதியின் கிழவர்: (இவரைக் குபேரன் என்றும் சொல்லுப. இவர் நேபாள தேசத்து அரச பரம்பரையினர். இக் குபேரன் இராவணன் காலத்தில்

Digitized by RMRL

இருந்த குபேரன் அல்லர். இராவணன் காலத்தில் இருந்தவர் அரக்கர் குடி வழியைச் சேர்ந்தவர்.)

(4) முரிஞ்சியூர் முடிநாகராயர் I : (இவர் ஈழ நாட்டு முரிஞ்சிப்பதியில் அரசாண்ட முடிநாகர் பரம்பரையில் வந்தவர். நாக அரையர் என்பது நாகராயர் என்று மருவி வழங்குகிறது.) முடிநாகர் என்பது தமிழ்நாட்டில் ஏற்பட்ட பதினெண் மக்கட் பிரிவுகளில் ஒன்று)

(5) வாதாபி அகத்தியர் : (இவ் வகத்தியர் பொதியமலை அகத்தியரினின்றும் வேறானவர். இவர் வாதாபி (மாயாவி) (Badami) என்னும் இடத்தில் குமரவேள் சார்பில் இருந்துகொண்டு அரக்கர் தலைவர்களாகிய மாயாவி-வில் வலன் என்பவரைக் கொன்றவர். குமரவேளிடம் உபதேசம் பெற்றவர். இவர்தாம் முதன்முதல் சங்கத்தலைவராய் இருந்தவர்.)

5. நூல் : (1) வாதாபி அகத்தியம், (2) குமரம், (3) முருகன் அகப்பொருள் விருத்தி, (4) மகேசம், (5) களவியல், (6) பெருநூல், (7) இயனூல், (8) பொதியமலை அகத்தியர் I செய்த அகத்தியம் முதலியன.

6. பாடப்பட்டன : (1) வாதாபி அகத்தியம், (2) பெரும் பரிபாடல், (3) முதுநாரை, (4) முதுகுருகு, (5) கதிபெறச் செய்யும் களரியாவிரை முதலியன.

7. பாடப்பட்டோர் : (1) குன்றம் எறிந்த குமரவேள், (2) காய்சின வழுதி என்ற இரண்டாம் நிலந்தருதிருவிற் பாண்டியன் முதலிய எழுவர் பாண்டியர்கள், (3) வாதாபி அகத்தியர் முதலியோர்.

8. கவிஅரங்கேறிய அரசர் : காய்சின வழுதி முதலிய எழுவர் பாண்டியர்.

9. வரலாறு : இச் சங்கம் 'தலைச்சங்கம்' எனப் பெயர் பெறும். என்னெனின், நிருதர்-ஒளியர்-அவுணர்-ஆட்சிக்குப் பின் முதன் முதலாகப் பாண்டியர் ஆட்சி நிறுவப்பட்டுத் தமிழ்ச்சங்கம் தோற்றியதாதலின் அப் பெயரைப் பெற்றது என்க.

இச் சங்கம் நிறீஇய முதல்அரசன் ஆழி வடிம்பலம்ப நின்ற பாண்டியனின் வழிவந்தவன் ஆவான். காய்சின வழுதி என்னும் இயற்பெயருடன் இரண்டாம் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்னும் பட்டத்தையும் வகித்தவன். இவன் பட்டத்துக்கு வருவதற்கு ஐம்பத்துநான்கு ஆண்டுகள் முன்னர், தமிழ்நாட்டின் பெரும்பகுதி வடிவேல் எறிந்த வான்பகை பொருது கடல்கொள்ள, கடலால் கொள்ளப்பட்ட நாட்டிற்கு ஈடுசெய்ய நாடுவேண்டும் எனக் குன்றம் எறிந்த குமரவேளை வேண்டிக்கொள்ள, அவர் வடநாட்டில் தம் ஆட்சியின்கீழிருந்த கங்கைநதி பாயும் நாட்டையும் இமயமலை நாட்டையும் (நேபாளம்-பூத்தானம்) (Bhutan) கொடுத்து, தென்றிசை நகரமாகிய குமரியாற்றங்கரைத் தென்மதுரையிலிருந்தே ஆட்சி செய்யும்படி அருள் செய்தார். இச் செய்தியினையே :

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்து

Digitized by RMRL

குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி.''

என்று சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் ஆசிரியர் இளங்கோ அடிகள் கூறுவாராயினர். இதற்கு உரை ஆசிரியர் அடியார்க்கு நல்லார் கூறும் உரை நனி மெச்சத் தகுந்தது. இளங்கோ அடிகளின் உள்ளம் தெரிந்து உரை கூறியுள்ளார். நான் மேலே கூறிய கருத்தே அவ் விருவர்க்கும் பொருந்துவதாகும்.

இனி, "தொடியோள் பவ்வம்" என்ற சிலப்பதிகாரத் தொடருக்கு அடியார்க்கு நல்லார் கூறும் உரையை நோக்குமிடத்து, கி. மு. 14,058-இல் ஏற்பட்ட ஆதியூழியில் (—கடல் கோளில்), குமரியாறும் அவ்வாற்றங் கரையில் இருந்த ஊர்களும் அழியவில்லை என்று தெரிகிறது. என்னெனின், பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடையிலுள்ள நிலப்பகுதி என்கிறார். அதனால், குமரியாறு அழியவில்லை என்று ஏற்படுகிறது. இன்னும், "நட.நீர்க்குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல்கொண் டொழிதலால்'' என்று உரை கூறுகிறார். ஆதலால், தெளிந்த நீரையுடைய அகன்ற பரப்பையுடைய குமரியாறும், அது உற்பத்தியாகும் மேருமலையின் வடபெருங் கோடும் அழியவில்லை என்று ஏற்படுகிறது.

குமரியாற்றங்கரைத் தென்மதுரை என்பது ஏழ்மதுரை நாட்டில் உள்ள ஓர் ஊர். அவ்வூரைத் தவிர்த்து ஏனை ஊர்களே ஆதியூழியில் அழிந்தனவாகும். இப்போது இருக்கும் குமரிக் கோவிலுக்குத் தென்பாகத்தில் சிறிது தொலைவில்தான் குமரியாறு ஓடிக்கொண்டு இருந்தது.

குமரிக் கோடும்—குமரியாறும—தலைச்சங்கம் இருந்த தென்மதுரையும் கி. மு. 9564-இல் ஏற்பட்ட கடல் கோளா

லேயே அழிவுற்றன. இதனை உரையாசிரியர்கள் இரண்டாம் ஊழி (—கடல்கோள்) என்பர்.

ஆதியூழியில் குமரிநாடு அழிவுற்றபோது. ஏழ்தெங்க நாட்டின் ஒருபகுதி நக்கவாரத்தீவு (Nicobar Island) என்னும் பெயருடன் அழியாமல் இன்றும் இருக்கிறது. நக்கவாரத்தீவில் உள்ள தேங்காய் ஓடு மிகமிகப் பெரியது. இப்போது பரதேசிகள் கையில் கொண்டிருக்கும் கப்பரையை நோக்க, ஏழ்தெங்கநாடு எவ்வளவு வளப்பம் பொருந்தியது என்பது தெளிவாம். கப்பரை என்னும் தமிழ்ப்பதமே கொப்பரா (Copra) என்று மருவி பிற மொழிகளில் வழங்குகிறது.

ஏழ்குறும்பனை நாட்டின் பகுதிகளை (அழியாதன) இன்னும் திருநெல்வேலிக் கோட்டத்தில் கடற்கரை ஓரங்களில் காணலாம்.

புறநானூற்றில் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப்பற்றிப் பாடின முரிஞ்சியூர் முடிநாகராயர் தலைச் சங்க காலத்தவர் அல்லர். இவர் இடைச்சங்கத்துக்கும் கடைச்சங்கத்துக்கும் இடைப்பட்டுத் திருப்பரங்குன்றத்து அருகில் இருந்த தென்மதுரையில் நடந்த தமிழ்ச் சங்கத்தில் இருந்தவர் ஆவர். ஆதலின், இவரை இரண்டாம் முரிஞ்சியூர் முடிநாகராயர் என்று கூறுவதே பொருத்தம்.

சில புலவர்கள் இரண்டாமவரை முதலாமவராக நினைத்துத் தலைச்சங்கம் பாரதகாலத்துக்குப் பின் நடைபெற்றது என்று கூறி வழுக்கி வீழ்வாராயினர். அவரெல்லாம் தமிழுக்குத் தொன்மை அளிப்பதில் அழுக்காறு கொண்டு உண்மைக்கு மாறுபாடாகக் கூறுபவரே.

இப்போது நம் கைக்கு எட்டியிருக்கும் பரிபாடல் தலைச்சங்கத்துப் புலவர் பாடிய பெரும்பரிபாடல் அன்று. இந்தப் பரிபாடல் இடைச்சங்க காலத்தில் பாடப்பட்டது.

Digitized by RMRL

முதுநாரை—முதுகுருகு முதலியன இசை நூல்கள். அவைகளும் கிடைக்கவில்லை.

கதிபெறச் செய்யும் களரியாவிரை என்னும் நூல் ஆன்மாக்கள் ஞானமார்க்கத்தை அறிந்து வீடுபேறு அடையப் பாடிய ஞானநூல் என்று தெரிகிறது. அதுவும் அகப்படவில்லை.

தலைச்சங்க நூல்கள் நமக்குக் கிட்டாததற்குக் காரணம் தலைச்சங்கத்து இறுதிக்காலத்தில், அஃதாவது, கி. மு. 9564-இல் ஏற்பட்ட இரண்டாம் பிரளயமே.

ஊழி

இனி, உரையாசிரியர்கள் கூறும் தலையூழி அல்லது ஆதியூழி, இடையூழி, கடையூழி, என்பவைகளைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.

"யுக முடிவுடன் மடங்கல் ஊழியாம்" என்பது பிங் கலந்தை. இதனை வைத்துக்கொண்டு, சில புலவர்கள் ஊழி என்பதற்கு யுகமுடிவு என்று பொருள் கொண்டு, 'ஆதி யூழியின் அந்தத்தே" என்ற தொடருக்கு, 'திரேதா யுகத் தின் இறுதியில்' என்று பொருள் கூறுகிறார்கள். அப்படிப் பொருள் கொள்வது சரித்திர முரணாகும். காலவாராய்ச்சி ஒத்து வருவதில்லை.

மடங்கல் என்ற சொல்லுக்குப் பிரளயம் என்ற பொருள் உண்டு. ஆதலின், ஊழி என்னுஞ் சொல்லை உரை யாசிரியர்கள் பிரளயம் என்ற பொருளில் வழங்கி உள்ளார் கள் என்று கொள்ளவேண்டும்.

ஏழு மேகங்களும் திரண்டு, உருண்டு, குமுறி, இடை யறாது மழையைச் சொரிய, கடல்கள் ஆரவாரித்து, ஓங்கி, எழுந்து, புரண்டு, பெருகி, நாடுகளைத் தன்வாய் மடுத்து

அழிப்பதே ஊழியாகும். அதனையே பிரளயம் என்று கூறுப.

தலையூழி கி. மு. 14058-லும், இடையூழி கி. மு. 9564-லும், கடையூழி கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும், அஃதாவது, கி. பி. 145-லும் ஏற்பட்டன.

தலைச்சங்கத்தைக் குறித்துப் பாடிய பாடல் வருமாறு:

"வேங்கடம் குமரி தீம்புனற் பவ்வத்து
இந்நான் கெல்லையின் இருந்தமிழ் பயின்ற
செந்நாப் புலவர் செய்திநீண் டுரைப்பின்
ஆடகக் குடுமி மாடக் கூடலின்
முன்னர்ச் சங்கக் கன்மாப் பலகையில்
திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்,
மன்றல் மராஅத்தார் குன்றெறி இளஞ்சேய்,
திண்டிறற் புலமைக் குண்டிகைக் குறுமுனி,
பதிமுடி நாகன், நிதியின் கிழவன்,
இனையர் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன் பதின்மர்;
அனையர் நாலுன் காயிர நூற்றொடு
நாற்பத்தொன் பதின்மர் பார்க்கிற்செந் தமிழோர்
புரிந்தன செய்யுள் பெரும்பரி பாடலும்,
முதுமை அடுத்த நாரையும், குருகும்,
கதியுறச் செய்த களரியா விரையும்,
ஆங்கவர் இருந்ததும் அத்தொகை யாகும்;
ஈங்கிவர் தம்மை இரீஇயபாண் டியர்கள்
காய்சின வழுதிமுதல் கடுங்கோன் ஈறு
எசிலா வகை எண்பத்தொன் பதின்மர்;
கவியரங் கேறினோர் எழுவ ராகும்;
மகத்துவ முடைய அகத்தியர் இலக்கணம்."

தலைச்சங்கத்துக்கு முதன்முதல் தலைவராக இருந்தவர் வாதாபி அகத்தியர். இவருக்குப் பின், வேறு தலைவர்களும் இருந்தனர். சங்கம் நடைபெற்ற காலமாகிய 4440-ஆண்டுகளும் ஒருவரே தலைவராக இருந்தார் என்று

Digitized by RMRL

சொல்லமுடியாது. மேலே காட்டிய பாடலில் தலைச்சங்கம் கூடலில் நடைபெற்றதாகக் கூறுவது தவறுதலை உடைத்து. குமரியாற்றுத் தென்மதுரைக்கும், கூடல் என்ற தென் மதுரைக்கும் வேறுபாடு காணாத புலவரால் பாடப்பட்டு இருக்கிறது.

இடைச் சங்கத்துக்கு கி. மு. 6805 முதல் கி. மு. 6000-வரை தலைவர்களாய் இருந்தவர்கள் இன்னாரென்று விளங்கவில்லை. கி. மு. 6000-இல் தான் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் தலைவரானார். அவருக்குப் பின்னும் பல பேர் தலைவர்களாய் இருந்திருக்கிறார்கள்.

கடைச் சங்கத்துக்குத் தலைவர் நக்கீரர் என்றால், அவர் கடைச்சங்கத்தில் கடைசியாகச் சங்கம் முடிவடையுங் காலத்தில் இருந்தவரே ஒழிய வேறின்று. அவருக்கு முன்னரே பல புலவர்கள் சங்கத் தலைவர்களாய் இருந் தார்கள்.

தலைச் சங்கத்து முதற் றலைவருக்கு **வாதாபி அகத்தியர்** என்று பெயர் கூறுவானேன் என்றால், அவருக்கு முன் செங்கோனின் காலத்தில் நடந்த சங்கத்தில் **மூத்தூர் அகத்தியர்** என்பவர் ஒருவரும், மகேந்திரமலைத் தமிழ்ச் சங்கத்தில் **பொதியமலை அகத்தியர்** என்பவர் ஒருவரும், தலைவர்களாய் இருந்தபடியால், அவர்களினின்றும் இவரை வேறு பிரித்து அறிந்துகொள்ளவே வாதாபி அகத்தியர் என்றது.

வாதாபி என்ற அடை அவருக்கு எப்படி ஏற்பட் டது என்றால், சூரபதுமனின் தங்கையாகிய அசமுகியின் மைந்தர்களான **மாயாபி—இல்வலன்** என்னும் அவுணர் கள் தண்டகநாட்டில் வாதாபியை (Badami) இருக்கை யாக் கொண்டு, **எருமைநாடு, ஆந்திரநாடு, தண்டகநாடு** இவை

களை ஆட்சி புரிந்து வந்தார்கள். மாயாவியின் தலைநகர் அவன் பெயரால் மாயாவி—வாதாபி என்று அழைக்கப்பட்டது என்பது சிலருடைய கருத்து.

குன்றமெறிந்த குமரவேளால் அனுப்பப்பட்டு, அந்நாடு சென்ற அகத்தியர், அவர்களுடைய மாயையை உணர்ந்து, அவர்கள் பொது மக்களுக்குச் செய்துவரும் கொடுமையை அறிந்து, போர் தொடுத்து, வாதாபியிலேயே (Badami) கி. மு. 14058-இல் அவ்விருவரையும் கொன்று துன்பத்தை ஒழித்தார். ஆதலின், அவருக்கு வாதாபி அகத்தியர் என்று பெயர்.

சிவனடியார்களுடைய வீரத்துக்கு வாதாபி அகத்தியர் ஓர் எடுத்துக்காட்டு. அக்காலத்தில் அடியார்கள் அரசியலில் சம்பந்தப்பட்டு, அரசர்களுக்கு உதவி புரிந்துள்ளார்கள். அந்த வாதாபியிலேயே கி.பி. 642-இல் இரண்டாம் புலிகேசியைக் கொன்று வாகை சூடின பரஞ்சோதி என்கிற சிறுத்தொண்டநாயனரைப் பாருங்கள். அவருடைய வீரம் அவருடைய அடியார் பத்திக்குச் சமானமாகும். அவர் மாதிரியே கோட்புலிநாயனர், கலிப்பகை நாயனர் முதலிய பலரையும் கூறலாம். பொதியமலை அகத்தியரும் வீரத்திலும் அடியார் பத்தியிலும் சிறந்தவரே. கி. மு. 6000-இல் அவர் வழியில் வந்த ஒரு அகத்தியர் இராவணனைக் கந்தருவத்தால் பிணித்து, அவன் தென் தமிழ் நாட்டில் இயங்கா வண்ணம் செய்தார். ஆதலின், அக்காலத்தில் அரசியலில் ஈடுபட்டும், சிவனுக்கும் சிவனடியார்க்கும் அடியராம் தன்மையை அவர்கள் எல்லாம் விட்டவர்கள் அல்லர். வீரத்தோடு அடியார்களிடத்தில் அன்பும், சிவத்தை மறவாத நெறியும் உடையவர்களே உண்மையான வீரர்கள்.

Digitized by RMRL

வாதாபி அகத்தியரிடத்து வீரத்தன்மையும், சிவநெறியும், அடியார்களிடத்தில் அன்பும் இருந்ததோடு, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்ப் பயிற்சியும், அவைகளில் ஆழ்ந்த ஆராய்ச்சியும் இருந்தன. அதனாலேயே அவரைப் பாண்டியர்களால் நிறுவப்பட்ட தலைச்சங்கத்துக்குத் தலைவராக ஏற்பாடு செய்தார்கள்.

கி. மு. 9564-இல் ஏற்பட்ட இரண்டாம் பிரளயத்தால் தமிழ்நாடு நிலைகுலைந்து, தலைச் சங்கமும் முடிவு உற்றது. தலைச்சங்கம் இருந்த குமரியாற்றுத் தென்மதுரையும் கடல் கொண்டு ஒழிந்தது. தலைச்சங்கத்தின் கடைசி அரசனை பாண்டியன் முதலாம் கடுங்கோன் என்பவனும் பிரளயத்தில் இறந்துபட்டான். நாடு அரசன் இன்றியும், அரச இருக்கை இன்றியும் தத்தளித்தது.

அச்சமயத்தில்தான் தக்கனின் மூதாதைகளான அரக்கர்கள் (Red Indians from America) தமிழ் நாட்டைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கினார்கள். அரக்கர்களுடைய ஆட்சி கி. மு. 9564 முதல் கி. மு. 7500 வரை தமிழ்நாடு முழுவதும் பரவி இருந்தத்.

கி. மு. 7500-இல் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியன் அரக்கர்களிடமிருந்து, தமிழ் நாட்டில் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிப் பாண்டியர் ஆட்சியை நிறுவினான். அரக்கர் ஆட்சியில் மற்றப் பாகங்கள் இருந்தன. அரக்கர் பரம்பரையினரான சோமுகன்-தக்கன்-தக்கனுடைய பேரப்பிள்ளைகளான இரணியன்-இரணியாக்கன், இரணியாக்கனுடைய குமாரன் அந்தகாசுரன்-இரணியன் குமாரன் பிரகலாதன் - அனுகிலாதன்-சங்கிலாதன்-இலாதன் - விரோசனன் - மாபலி - சர்ச்சன்-சகுனி - பூதந்தநாபன் - காலநாபன் - மகாநாபன் - மகாவாகு - புலத்தியன்

(குன்றம் எறிந்த குமரவேள் மாணாக்கன் அல்லன்)-கார்த்த வீரியார்ச்சுனன் - புலத்தியன் பேரன்மாரான இராவணன் - கும்பகருணன் - விபீடணன் - குபேரன்-மது-வாலசிங்கன் - சிசுபாலன்-தந்தவக்கிரன்-சராசந்தன் முதலியோர் இமயம் முதல் குமரிவரையுள்ள தமிழ்நாட்டைப் பங்கிட்டு ஆண்ட வர்கள் ஆவார்கள். திருமாலின் ஒன்பது அவதாரங்கள் என்று நாம் இப்போது கூறுகின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் இவ்வரக்கர் ஆட்சியை ஒழிக்கவே நிகழ்ந்தன என்பது தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் விரிவாகக் கூறப்படும். ஆண்டுக் கண்டுகொள்க.

அடியார்க்குநல்லார் முதற் சங்க காலத்தை முதலூழி இறுதி என்று கொள்வர். "முதலூழி இறுதிக்கண் தென் மதுரை அகத்து இருந்த தலைச்சங்கத்து" (சிலம்பு—8) என்பது காண்க. ஆதலின், இவ் வரிக்கு முதலூழிக்கு அப்புறம் ஏற்பட்ட தலைச்சங்கம் என்பதே பொருளாகும்.

அவரே, சிலப்பதிகாரம் உரைப்பாயிரத்தில், "இரண் டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்து" என்று கூறுவதால், இடைச்சங்கம் இரண்டாம் ஊழி ஏற்பட்ட பின் நிறுவப்பட்டதென்றே பொருளாகும்.

முதலூழி கி. மு. 14058-லும், இரண்டாம் ஊழி கி. மு. 9564-லும் ஏற்பட்டன என்பது உரையாசிரியர் கூற்றுக்கு முரண்பட்டது அன்று.

Digitized by RMRL

எ. முதுகுடுமித் தமிழ்ச்சங்கம்

(வட்ட எழுத்துக் காலம்)

1. காலம்: **7500** B. C. முதல், **6900** B. C. வரை அறுநூறு (600) ஆண்டுகள்.

2. இடம்: கொற்கை, மாறோகமண்டலத்தில் உள்ள ஒரு கடற்றுறைப் பட்டினம்.

3. சங்கம் இரீஇய அரசர்: பல்யாகசாலை, முதுகுடுமிப் பெருவழுதி, (இவனுக்குப் "பரமேச்சுரன்" என்ற பட்டம் உண்டென்று வேள்விக்குடிச் சாசனம் கூறுகின்றது)

4. புலவர்:

வரிசை எண்	சமாஜ எண்	பெயர்	ஆதாரம் பக்கம்	ஆதாரம் பாட்டுஎண்	பாட்டு மொத்தம்
1		இந்திரனர்	தமிழ் ஐந்திர நூல்		
2	145	காரிகிழார்	531	1066	1
3	286	நெடும்பல்லியத்தனர்	859	1497	1
4	287	நெடும்பல்லியத்தை (பெண்)	860	1498—9	2
5	289	நெட்டிமையார்	861	1561—3	3
6		பரத முனிவர் (ஆரியர்)		பரதம்	
7		புரோகித அகத்தியர் I (ஆரியர்)		கூத்தநூல்	

N. B: பரத முனிவர் செய்த 'பரதம்' என்னும் தமிழ்நூலையும், அகத்தியர் செய்த கூத்து நூலையும் முதனூலாகக் கொண்டு இசைநுணுக்கம் என்னும் வழிநூலைச் சிகண்டியார் செய்தார். சிகண்டியார் இடைச்சங்கப் புலவர் ஆவர்.

5. **நூல்:** ஐந்திணை அகநூல் (களவியம்), குமரம், அகப்பொருள் விருத்தி, ஐந்திரம், பரதம், கூத்து நூல்.

6. **பாடப்பட்டன:** ஐந்திரம் — பரதம்—கூத்து நூல் முதலியன.

7. **பாடப்பட்டோர்:** பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி முதலியோர்.

8. **கவி அரங்கேறிய அரசர்:**

9. **வரலாறு:** தலைச்சங்கம் அழிந்த பின் சுமார் 2060 ஆண்டுகள் நாடானது தமிழ்ச் சங்கம் இன்றி, தமிழ் அரசர்கள் இன்றி, தமிழ்மொழி வளர்ச்சி குன்றி இருந்தது. சேர-சோழ-பாண்டியர்கள் ஒற்றுமை இன்றி, வலிகுன்றி இருந்தார்கள்.

இவ்வாறு நாடு குழம்பி இருந்த காலத்தில்தான், கி. மு. 9560-இல், அரக்கர்கள் கடல் வழியாகத் தமிழ்நாடு புகுந்து, எளிதாக நாட்டைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கினர்கள்.

அரக்கர்கள் விந்தியமலைக்குத் தெற்கே உள்ள தமிழ் நாட்டைக் கைப்பற்றி ஆண்டுகொண்டு இருந்தபோது, கி. மு. 9000-இல் ஆரியர்கள் காக்கேசியாப் பக்கம் இருந்து வந்து சிந்துநதி தீரத்தில் குடியேறினர்கள். ஆண்டு இருந்த தமிழ் அரச குடும்பங்களும் ஒற்றுமையின்றி இருந்ததால், புதியராய் வந்த ஆரியர்களுக்கு அடங்கி வாழ்ந்துவந்தார்கள். ஆரியர்கள் தமிழ்அரசர்களோடு மலைந்து வெகு விரைவில் பிரமாவர்த்தத்தையும், ஆரியாவர்த்தத்தையும் நிலைநாட்டிக் கொண்டார்கள். அவ்விரண்டிற்கும் 'இந்துஸ்தானம்' என்று பாரசீகர்கள் பெயரிட்டார்கள். 'இந்து' என்பது பாரசீகப் பதம். ஆரியர்கள் 'இந்துஸ்தானத்தை' நிறுவப் பல தமிழ்அரசர்களே உதவியாய் இருந்தார்கள். பல

Digitized by RMRL

தமிழ்அரசர்களும், பல சிறந்த தமிழ்க் குடும்பங்களும் ஆரிய மதத்தைத் தழுவிக்கொண்டார்கள்.

"மாணிக்கவாசகர் காலம்" என்ற ஆராய்ச்சி நூலில் பக்கம் 495-இல் அடியில் வருமாறு கூறப்பட்டுள்ளது:—

"இருக்குவேதத்தில் (I—108—8) கூறப்பட்டுள்ள யதுக்கள்-துருவாசர்கள் - துருகியர்கள் - அனுக்கள் - பூருக்கள் என்பவர் தமிழ்க் குடியினர். பரதர், விசுவாமித்திர குடியினர்-பக்தர்-பலானர்-அலினர்-சிவர்-விஷாநியர் முதலிய குடியினரும் தமிழரே. இவர்களில் பூருக்கள் என்னும் தமிழ்க் குடியினரே ஆரியரோடு கலந்துகொண்டு தம்மவர்க்கு இரண்டகம் செய்துவந்தார்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

"வேதகாலத்து இந்தியா" (Vedic India) என்னும் நூலில் பக்கம் 298-314-இல் ஆரியர் தென்தமிழ்நாடு புகுந்தது படை எடுப்பினுல் அன்று எனவும், தமிழ் அரசர்களையும், தமிழ் வள்ளல்களையும் தம்முடைய சூழ்ச்சியில் உட்படுத்து, வேள்வி முதலிய ஆடம்பர வாழ்க்கையினுல் தென்னுட்டில் நிலைத்துவிட்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது, கருத்தூன்றி நோக்கத்தகுந்தது. ஆரியர் சூழ்ச்சிக்குத் தமிழரிலேயே சில வகுப்பார் உதவியாய் நின்றமையும் அந்த நூலில் எடுத்துக்காட்டப்பட்டு இருக்கிறது.

மேலே கூறப்பட்ட, ஆரியர் சூழ்ச்சியில் அகப்பட்ட அரசர்களில் ஒருவன் முதுகுடுமிப் பெருவழுதி ஆவன். இவன் ஆரியர்களுடைய உதவியையும், ஏனைய தமிழ் அரசர்களுடைய உதவியையும் பெற்று, 2060 ஆண்டுகள் நடந்த அரக்கர் ஆட்சியில் வெறுப்புக்கொண்ட குடிகளுடைய உதவியையும் பெற்று, கி. மு. 7500-இல் அரக்கரிடமிருந்து தென்னுட்டைக் கைப்பற்றிப் பாண்டியர் ஆட்சியை நிறுவினுன்.

கொற்கையம் துறையை அரசிருக்கையாகச் செய்தான்; தனக்குச் சண்டையில் உதவி செய்தவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்தான்.

ஆரியர்கள் தனக்குச் செய்த உதவிக்குப் பதிலாக அவர்களைத் தென்னாட்டில் குடியேறும்படி செய்து, அவர்கள் விரும்பியவாறே, பல நூறு யாகங்களைச் செய்தான். யாகங்களைச் செய்ததோடு நில்லாமல் பல ஊர்களையும் கொடையாக வழங்கினான். அவனுக்கு அதனால் "பல் யாக சாலை" என்ற பட்டம் ஆரியர்களால் கொடுக்கப்பட்டது.

முதுகுடுமி யானைப் படையை மிகுதியாக உடையவன். அக் காலத்தில் யானைப்படைதான் சிறந்தது; இக் காலத்தில் உள்ள 'தாங்கிகள்' (Tanks) போல. அதனாலன்றோ, "யானையுடைய படைகாண்டல் முன் இனிது" என்ற மொழியும் எழுந்தது.

முதுகுடுமிப் பெருவழுதியைப் பற்றிய சாசனப் பகுதி வருமாறு:—

பராந்தகன் நெடுஞ்சடையனால் கொடுக்கப்பட்ட
வேள்விக்குடிச் சாசனப் பகுதி

'கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாஅம் தவிர்த்து,
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதிஎனும் பாண்டியாதிராசனால்,
நாகமா மலர்ச்சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும்
பாகனூர்க் கூற்றமெனும் பழனக் கிடக்கை நீர்நாட்டு,
சொற்கணாளர் சொலப்பட்ட சுருதிமார்க்கம் பிழையாத
கொற்கைகிழான் நற்கொற்றன் கொண்டவேள்வி முற்றுவிக்க,
கேள்வி அந்தணாளன் முன்புநின்று வேள்விக்குடி என்றப்பதியைச்
சீரோடு திருவளரச் செய்தார்வேந்தன் அப்பொழுதே
நீரோடு அட்டிக்கொடுத்தமையால் நீடுபுத்தி துய்த்தபின்
மேனாள்நின் குரவரால் பான்முறையின் வழுவாமை
மாகந்தோய் மலர்ச்சோலைப் பாகனூர்க் கூற்றத்துப்படுவது

ஆள்வதானை அடல்வேந்தே வேள்விக்குடியெனும் பெயருடையது
ஒல்காவேற் றானையொடு ஓதவேலி உடன்காத்த
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி எனும் பரமேச்சுரனால்
வேள்விக்குடி எனப்பட்டது வேள்வியிற் றரப்பட்டதனை
துளக்கமில்லாக் கடற்றானையாய் களப்பிரனால் இறக்கப்பட்டது."

களப்பிரர் ஆட்சி பாண்டிநாட்டில் கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 6-ஆம் நூற்றாண்டுவரை நடைபெற்றுவந்தது. களப்பிரர் என்போர் வடவர். அமண் மதத்தைத் தழுவியவர். சிவமதத்தை வெறுத்தவர். தமிழரைப் பலவிதத்திலும் துன்புறுத்தியவர். முதுகுடுமி காலம் முதல் அனுபவித்துவந்த வேள்விக்குடியை ஆரியர்களிடம் இருந்து பிடுங்கினவர்கள். அந்தச் செய்தியைத் தான் "களப்பிரனால் இறக்கப்பட்டது" என்று சாசனம் கூறுகிறது. கி. பி. ஆறும் நூற்றாண்டின் தொடக்கத்தில், அஃதாவது கி. பி. 520-இல் சிவனருளால் மதுரையில் மூர்த்தி நாயனாரும், தொண்டைமண்டலத்துக் களந்தைக் கோனாகிய, களப்பாள கோத்திரத்தைச் சேர்ந்த கூற்றுவ நாயனாரும் சேர்ந்து களப்பிரரை விரட்டி அடித்துத் தென்னாட்டைக் கைப்பற்றித் தமிழர் ஆட்சியை நிறுவினார்கள்.

மூர்த்திநாயனார் கி. பி. 520-முதல் கி. பி. 575-வரை மதுரையில் அரசாண்டார். மூர்த்திநாயனாருக்குப் பின் இரண்டாம் கடுங்கோன் என்கிற பாண்டிய அதிராசன் பட்டத்துக்கு வந்து கி. பி. 575-முதல் கி. பி. 600-வரை அரசாண்டான்.

இரண்டாங் கடுங்கோனும், காஞ்சியில் அரசுபுரிந்த பல்லவ சிம்ம விட்டுணுவும் கி. பி. 575-இல் கருநட அரசனை (களப்பிர அரசன்)ப் புறங்கண்டார்கள். கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் மேலைச்சளுக்கிய முதலாம் விக்கிரமாதித்தனும், அவனுடைய பேரன் விசயாதித்தனும் கருநடரோடு (களப்

பிரர்) சண்டையிட்டு அவர்கள் மறுபடியும் தென்னாடு புகாதவாறு தடுத்தார்கள்.

களப்பிரரால் பிடுங்கப்பட்ட வேள்விக்குடியை மறுபடியும் இரண்டாம் முறை ஆரியர்களுக்கு வழங்கியவன் **பராந்தகன் நெடுஞ்சடையன்** என்னும் பாண்டியன். அவன் பாண்டிநாட்டை கி. பி. 785-முதல் கி. பி. 790-வரை அரசாண்டவன். இவன் பல்யாகசாலை முதுகுடுமியின் பரம்பரையில் வந்தவன் என்று சாசனப் பகுதியால் அறிகிறோம்.

வேள்விக்குடியை முதன்முதல் ஆரியர்க்கு ஈந்த அருந்திறல் முதுகுடுமி என்பான், பஃறுளி என்னும் ஆற்றை வெட்டி, பெருவள நாட்டை வளம்படுத்திய ஆழி வடிம்பலம்பநின்ற **பாண்டியன் நெடியோன்** என்பவனுடைய வழிவந்தவன் என்பது,

"எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."

என்னும் புறப்பாட்டால் தெரிகிறது.

"பல்சாலை முதுகுடுமி
**தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்**
நிலந்தரு திருவின் நெடியோன் போல."

(759—மதுரைக்காஞ்சி)

என்னும் மதுரைக்காஞ்சி அடிகளால், இவன் முத்தமிழும் கைவந்த, ஆன்றவிந் தடங்கிய நல்ல புலவர்களைக்கொண்டு, கொற்கையம்பதியில் தமிழ்ச்சங்கம் என்று சொல்லும்படியான புலவர் கூட்டத்தைக் கூட்டி, அப் புலவர்களைப்

Digitized by RMRL

புரந்து, முத்தமிழையும் ஆய்ந்து, அதனால் உண்டாகும் பேரின்பத்தை, ஆழிவடிம்பலம்பநின்ற பாண்டியன்போல, துய்த்துவந்தான் என்று அறிகிறோம்.

இவனைப் பற்றிப் புறநானூற்றில் ஐந்து பாடல்கள் காரிகிழார் - நெட்டிமையார் - நெடும்பல்லியத்தனார் என்னும் புலவர்கள் பாடியுள்ளார்கள். வடநாட்டிலிருந்து ஆரியர்கள் தென்னாட்டிற்கு இவன் காலமாகிய கி. மு. 7500-இல் இருந்தே வருவதற்கு ஆரம்பித்துச் சிறுகச் சிறுகப் பெரு வாரியாய் வந்துசேர்ந்தார்கள் என்று தெரிகிறது.

இம் முதுகுடுமி தமிழ்ப் புலவர்களை ஆதரித்துத் தமிழ் மொழியை வளரச்செய்தது போலவே, ஆரியப் புலவர்களை யும் ஆதரித்துவந்தான். இவன் காலம் முதல் ஓர் ஆரிய அகத்தியரைப் புரோகிதராகப் பாண்டியர்கள் அமர்த்திக் கொண்டார்கள். அதற்குமுன் தமிழ்நாட்டில் தமிழ்ப் புரோகிதர்களைத் தவிர வேறு புரோகிதர்கள் இலர். தமிழ் நாட்டில் புரோகிதர்களாக இருந்துவருபவர்கள் தமிழ் நாட்டுப் பரம்பரைச் சைவர்களாகிய தேசிகர்கள் ஆவார்கள்.

முதுகுடுமியின் பரம்பரையார் கி. மு. 7500-முதல் கி. மு. 6900-வரை அறுநூறு ஆண்டுகள் தமிழ்நாட்டை ஆண்டுவந்தார்கள்.

கி. மு. 6900 இல் மறுபடியும் தமிழ்நாடு அரக்கர் ஆட்சிக்கு உள்பட்டது. அரக்கர் ஆட்சி கி. மு. 6805-வரை 95-ஆண்டுகள் நடைபெற்றது.

கி. மு. 6805-இல் வெண்டேர்ச் செழியன் என்னும் பாண்டியன் அரக்கர்களைத் தொலைத்து மறுபடியும் தமிழர் ஆட்சியை நிறுவினான்.

அ. இடைச்சங்கம்

(வட்டெழுத்துக் காலம் 6805 B. C. முதல் 6000 B. C. வரை. சதுர எழுத்துக்காலம் 6000 B. C. முதல் நடைபெற்று வருகிறது.)

1. **காலம் :** கி. மு. 6805-முதல் கி. மு. 3105-வரை மூவாயிரத்து எழுநூறு (3700) ஆண்டுகள்.

2. **இடம் :** பொருநை (தாம்பிரபரணி) ஆற்றின் முகத்துவாரத்தில் இருந்த கபாடபுரம்.

3. **சங்கம் இரீஇய அரசர் :**

வெண்டேர்ச் செழியன் முதல் முதலாம் முடத்திருமாறன் ஈறாக எழுபத்தொன்பது பாண்டியர்கள். (சில புத்தகங்களில் ஐம்பத்தொன்பது பாண்டியர்கள் என்று காணப்படுகிறது. அது ஏட்டுப் பிழையாகும். சில சுவடிகளில் எழுபத்தொன்பது என்று காணப்படுகிறது. இதுவே ஆராய்ச்சிக்கு ஒத்து வருவதால் எழுபத்தொன்பது என்றே கொள்ளப்பட்டது.)

(1) வெண்டேர்ச் செழியன் (6805 B. C. — 6730 B. C.)

(2) அநாகுல பாண்டியன்.

(3) அநாகுல பாண்டியன் மகன் சாரகுமாரன் (இசை நுணுக்கம் இவனுக்காகப் பாடப்பட்டது.)

(4) மூன்றாம் நிலந்தரு திருவிற் பாண்டியன் (6000 B. C.) (தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயவன்.)

(5) பாண்டியன் செம்பூட்சேய்.

Digitized by RMRL

(6) முதலாம் முடத்திருமாறன் (3160-3105 B. C.) முதலியோர்.

N. B.:—(a) நிலந்தருதிருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினன். அக்காலத்து அவர் நாட்டுக் குமரியின் வடபெருங் கோட்டின்காறும் கடல்கொண்டது (சிலப்—வேனில்—உரை.)

மொத்த எண் 3700
கூட்ட எண் 59

4. புலவர்: இடைச் சங்கப் புலவர்கள்.

(From 6805 B. C. to 3105 B. C.)

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம் பக்கம்	ஆதாரம் பாட்டுஎண்	பாட்டு மொத்தம்
1		அமர முனிவன் அகத்தியன் (பொதியில்)	அகத்தியம்		
2		அவிநயன்	அவிநயம்		
3		அறிவனார்	பஞ்சமரபு		
4		ஆதிவாயிலார்	பரதசேனாபதீயம்		
5		ஆரிய அதங்கோட்டாசான்			
6		,, இறையனார் III			
7		,, உலோபாமுத்திரை அகத்தியர் (விதர்ப்பநாடு)	அகத்தியம்		இவை இரண்டும் அவர்கள் காலத்திலேயே வழங்கப்படாமல் ஒழிந்தன.
8		,, மேற்படியார் மாணவர் தொல்காப்பியர்	தொல்காப்பியம்		
9		,, கவுதமனார் I			
10		,, நாரதர்	பஞ்சபாரதீயம்		
11		,, புரோகித அகத்தியர் II	அகத்தியம்		
12	410	,, மார்க்கண்டனார்	1248	2153	1
13		,, வாமனனார்	வாமனநூல்		
14		,, வான்மீகனார்	1295	2227	1

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டுஎண்	
15		இயாமளேந்திரர்		இந்திரகாளியம்	
16		இருந்தையூர் கருங்கோழி மோசியார்			
17	40	இளங் கீரந்தையார்	130	244	1
18		ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர்		தொல்காப்பியம்	
19		கழாரம்பனார்		பேரிசைச் சூத்திரம்	
20		காப்பியக்குடித் தொல்காப்பியர்			
21	161	கீரந்தையார்	555	1104	1
22		சிகண்டியார்		இசை நுணுக்கம்	
23		சிறுபாண்டரங்கனார்		இசை நூல்	
24		செம்பூட்சேய் (பாண்டியன்)		கூற்றியல்	
25		திரையன் மாறனார் (சோழன்)			
26		தூராலிங்கனார்		தூராலிங்கம்	
27		துவரைக் கோமான் கண்ணன் (அரக்கன்)			
28		நத்தத்தனார்		நத்தத்தம்	
29	304	பனம்பாரனார்	922	1611	1
30		பூதபுராண நூலாசிரியர்		பூதபுராணம்	
31		பெருங்காக்கை பாடினியார் (பெண்)		காக்கைபாடினியம்	
32		மதுரை ஆசிரியன் மாறனார்			
33		மாயேச்சுரன் (சமணர்)		மயேச்சுரயாப்பு	
34		மாபுராண நூலாசிரியர்		மாபுராணம்	
35	409	மாயேண்டனார்	1247	2152	1
36		வாய்ப்பியனார்		வாய்ப்பியம்	
37		வையாபிகனார்		வையாபிகம்	
38		வெள்ளூர்க் காப்பியனார் முதலியோர்			

Digitized by RMRL

5. நூல்: (1) வாதாபி அகத்தியம் (2) தொல்காப்பியம்
(3) மாபுராணம் (4) பூத புராணம்
(5) இசை நுணுக்கம் முதலியன.

6. பாடப்பட்டன: (1) பெருங்கலி, (2) குருகு, (3) வெண்டாளி, (4) வியாழமாலை, (5) மாபுராணம், (6) பூத புராணம், (7) இசை நுணுக்கம், (8) தொல்காப்பியம், (9) பன்னிருபடலம் (இது வெண்பாமாலையின் முதல் நூலாகும்) முதலியன.

7. பாடப்பட்டோர்: வெண்டேர்ச்செழியன் முதல் முதலாம் முடத்திருமாறன் ஈறாக 73 பேர்.

8. கவிஅரங்கேறிய அரசர்: ஐவர் பாண்டியர்.
இவர்களில் பெயர் தெரிந்தவர்கள்:
(1) தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇய மூன்றாம் நிலந்தரு திருவிற் பாண்டியன்.
(2) செம்பூட் சேய் (பாண்டியன்)

9. வரலாறு: இச் சங்கத்தைக் குறித்து அகவற்பா வருமாறு:

“வடுவறு காட்சி நடுவட் சங்கத்து
அகத்தியர், தொல்காப் பியத்தமிழ் முனிவர்,
இருந்தை யூரிற் கருங்கோழி மோசியார்,
எள்ளாப் புலமை வெள்ளூர்க் காப்பியன்,
இறவா இசையிற் சிறுபாண் டரங்கன்,
தேசிக மதுரை ஆசிரியன் மாறன்,
தவரொப் பாய துவரைக் கோமான்
தேருங் கவிபுனை கீரந்தை யாரிவர்
ஒன்பதோ டடுத்த ஐம்பதின்ம ராகும்;
தவலருங் கேள்வித் தன்மையர் உள்ளிட்(டு)
இவர்மூ வாயிரத் தெழுநூற் றுவரே;
வையகம் பரவச் செய்த செய்யுளும்

இருங்கலி கடிந்த பெருங்கலித் தொகையொடு,
குருகு, வெண்டாளி, தெருள்வியாழ மாலை,
அந்நாள் இலக்கணம் அகத்தியம், அதனொடு
பின்னாட் செய்த பிறங்குதொல் காப்பியம்,
மதிநலங் கவின்ற மாஅ புராணம்,
புதுநலங் கனிந்த பூத புராணம்,
வல்லிதி னுணர்ந்த நல்இசை நுணுக்கமும்,
தாவாக் காலம் தமிழ்பயின் றதுவும்
மூவா யிரத்தோ(டு) எழுநூற் றியாண்டு
பரீஇய சங்கம் இரீஇயபாண் டியர்கள்
வெண்டேர்ச் செழியன் முதலா விறல்கெழு
திண்டேர்க் கொற்ற முடத்திரு மாறன்
முரசுடைத் தானை மூவா வந்தம்
முழுதும் ஆண்டவர் எழுபத்தொன் பதின்மர்
இவ்வகை அரசரிற் கவியரங் கேறினர்
ஐவகை அரசர்; ஆயிடைச் சங்கம்
விண்ணகம் பரவும் மேதகு சீர்த்திக்
கண்ணகன் பரப்பில் கபாடபுரம் என்ப.”

இடைச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது, சேர-சோழ-பாண்டிய-எருமை நாடுகளைத் தவிர ஏனைய வடநாடுகளில் பெரும்பகுதி அரக்கர் கையிலேயே இருந்தன. அரக்கர் ஆட்சி வடக்கே கங்கையாறுவரை எட்டி இருந்தது.

கங்கை யாற்றுக்கும் விந்திய மலைக்கும் நடுவிலுள்ள நாடு “தாடகை நாடு”. தாடகை என்பாள் மாரீசனுடைய தாயார்; இராவணனுடைய பாட்டியார். இராவணனுக்கு மாரீசன் தாய்மாமன். மாரீசன் மூதாதையாகிய பூதந்தநாபன் கையில் இருந்தது நாடு.

விந்திய மலைக்குத் தென்பக்கமுள்ள தண்டகநாடு இராவணனுடைய மைத்துனன் (தங்கை சூர்ப்பனகையின் கணவன்) முன்னோர் கையில் இருந்தது.

Digitized by RMRL

பொதிய மலைக்கும் தண்டக நாட்டுக்கும் இடைப்பட்ட நாடுகள்தாம் எருமை நாடும் சேர-சோழ-பாண்டியநாடுகளும்.

பொதிய மலைக்குத் தெற்கே குமரிநாட்டில் எஞ்சியிருந்த நிலப்பகுதிகள் எல்லாம் இராவணனுடைய பாட்டன் புலத்தியன் வசம் இருந்தது.

சேர-சோழ-பாண்டிய-எருமை நாடுகளிலும். இந்துத்தானம் என்ற ஆரியர் நாட்டிலும் அரக்கர்களுடைய தொல்லை இருந்துகொண்டே இருந்தன.

அரக்கர்களுடைய தொல்லைகளைத் தொலைப்பதற்காகவே தமிழ்நாட்டு மன்னர்களும் ஆரியநாட்டுத் தலைவர்களும் ஒன்று கூடினர். இவர்கள் நேர்சண்டைகளாலும், சூழ்ச்சிகளாலும் அரக்கரைத் தொலைத்துவந்தார்கள்.

மச்சம் - கூர்மம் - வராகம் - நரசிம்மம் - வாமனம் - பரசுராமம் - கோதண்டராமம்-பலராமம் - கண்ணன் என்ற ஒன்பது அவதாரங்களும் அரக்கர்களைத் தொலைப்பதற்காகவே ஏற்பட்டவை. புராணங்களில் உள்ள இவ்வொன்பது கடவுட் பிறப்புக்களின் வரலாற்றுப் பகுதியை உற்று நோக்கினல் மேற்சொன்ன பொருள் வெளியாகும்.

அரக்கனுகிய சோமுகனைத் தொலைக்க மச்ச அவதாரமும், எல்லா அரக்கர்களையும் ஒருங்கே தொலைக்கக் கூர்ம அவதாரமும், இரணியாக்கனைத் தொலைக்க வராக அவதாரமும், இரணியனைத் தொலைக்க நரசிம்மாவதாரமும், மாபலியைத் தொலைக்க வாமன அவதாரமும், கார்த்தவீரியார்ச்சுனன் முதலிய பல அரக்கர்களைத் தொலைக்கப் பரசுராம அவதாரமும், இராவணனைத் தொலைக்க கோதண்டராம அவதாரமும், சிசுபாலன், தந்தவக்கிரனைத் தொலைக்கப் பலராம அவதாரமும், கம்சனைத் தொலைக்கக் கண்ணன் அவ

தாரமும் ஏற்பட்டன. அவதார வரலாறுகளையும் அவைகளின் சூழ்ச்சித் திறனையும் விரிவாய்த் தமிழ்நாட்டுச் சரித்திரம் வெளிவரும்போது காணலாம்.

ஆரியர்கள் இந்துத்தானத்தில் இருக்கும்பொழுது இரு குலத்தினராகப் பிரிந்தார்கள். ஒன்று சூரியகுலம்; இன்னொன்று சந்திரகுலம். அவ்விரு குலங்களின் வரலாறுகளை ஆரிய நூல்களாகிய இதிகாசங்களிலும், பதினெண் புராணங்களிலும் பார்க்கும்போது சூரியகுலத்தில் 121 தலைமுறையினரும், சந்திரகுலத்தில் 92 தலைமுறையினரும் கலியுகம் தொடங்கிய பின் ஆயிரம் ஆண்டுகள் அரசாண்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆகவே, ஆரியர் ஆட்சியின் முடிவு கலி ஆயிரம். அஃதாவது, கி. மு. **2102.** கலி பிறந்தது கி. மு. **3102** என்பது முடிவு.

தக்காணத்துக் காலடகி சில்லா அகோல்[1] என்னும் இடத்தில் உள்ள மலையில் உள்ள கல்வெட்டில், அக்கோவில் மேலைச்சளுக்கிய குடும்பத்தைச் சேர்ந்த இரண்டாம் புலிகேசி மன்னனால் மாபாரதம் முடிந்து 3735 ஆண்டுகளின் பின்னும், சகம் ஆரம்பித்து 556 ஆண்டுகளின் பின்னும் கட்டப்பட்டது என்று பொறிக்கட்டிருக்கிறது. இக் கணக்கின் படிக்கும், சித்தாந்த சிரோமணி[2] என்ற வான

1. An inscription in a Jain Temple on a hill near *Ahole* in Kaladagi Dt., Deccan, says that the temple, built by Pulikesi II of the Chalukiya family, was erected 3735 years after the war of Mahabarata and 556 years after the Saka Era. Thus proving that the great work took place 3735-556=3179 years before the Saka Era. In other words 3179+1866=5045, we get exactly 3102 B. C. at the end of Mahabarata i. e. the beginning of Kali Yuga.

2. Siddanta Siromani an astronomical work concludes with the above account.

Digitized by RMRL

நூலின் படிக்கும், அக்பர் காலத்தில் எழுதப்பட்ட "அயனி அக்பரி"[1]யில் விக்கிரமாதித்தன் உதிஷ்டிர சகம் 3044-இல் அரசுகட்டில் ஏறினன் என்று கூறியுள்ள கணக்குப்படிக்கும் மாபாரதம் முடிவும் கலியுக ஆரம்பமும் 3102 B. C. என்று ஏற்படுகிறது காண்க.

நம்முடைய நூல்களைப் பார்த்துக் கால வரையறைகளைச் சரிவர உணரக் கீழ்வரும் காலப் பாகுபாடுகளை ஒவ்வொருவரும் மனத்தில் கொள்ளவும்:—

1943 **A. D.** க்கு

கலியுகம்	5045
ஆங்கில ஆண்டு	1943
சாலிவாகன சகம்	1866
விக்கிரமாதித்திய சகம்	1999—2000
மகம்மதிய ஆண்டு	1362—63
பசலி	1352—53
கொல்லம் ஆண்டு	1118—1119
திருவள்ளுவர் ஆண்டு	1907
உதிஷ்டிரர் (அறவோன் மகன்) ஆண்டு	5043
எபிரேய சகம்	5074

(Jewish Year began on 1—10. 3131 B. C.

உலகப் படைப்பு	195,58,85,045
மானவ சகம் (மனித உற்பத்தி)	1,86,18,784

---

1. The author of *Ayeeni-Akbari* says thus. Vikrama Aditya ascended the thorne in the 3044 th year of Yudishtra Era. Vikrama Aditya Era begins from 56 B. C. Hence, 1943+56+3044=5043 i.e. Yudishtra Era begins from (5043—1943) =3100 B. C. i.e. in the Second Year of Kali Yuga when Yudishtra attained swargam.

இவைகள் மனத்தில் இருந்தால் கால வரையறைகளை நாம் சரிவர உணரலாம்.

உலகப் படைப்புக் கணக்கு நிலநூல் (Geology) படிக்கும் சரியாய் இருக்கிறது.

ஆரிய சூரியகுல பரம்பரையில் 121 தலைமுறைகளும், சந்திரகுல பரம்பரையில் 92 தலைமுறைகளும் இருப்பதற்குக் காரணம், சந்திரகுல அரசர்கள் சூரியகுலத்து அரசர்களைவிடச் சிறிது நீண்ட ஆயுளை உடையவர்களாய் இருந்ததே.

கலி ஆயிரத்தில் ஆரியர் ஆட்சி முடிவுபெற்றது என்று அவர்களுடைய நூல்களே கூறுகின்றன. நாம் அதனையே ஒப்புக்கொள்ளுவோம்.

ஒரு தலைமுறைக்குச் சராசரி 50 ஆண்டுகள் வீதம் கணக்குப் போடுவோமானால், 121 தலைமுறைகளுக்கும் 6050 ஆண்டுகள் ஆகின்றன. கலியுக ஆண்டு 1943 கி. பி. க்கு 5045 ஆகிறது. இதில் ஆயிர ஆண்டுகளைக் கழித்தால் மிச்சம் 4045. ஆகவே, 6050+4045=10095. 10095—1943=8152 B. C. ஆகிறது காண்க. ஆதலின், ஆரியர் காக்கேசியாப் பக்கம் இருந்து இந்தியாவிற்கு வந்தது சுமார் 9000 B. C. என்று கொள்ளுவது பொருத்தம். என்னெனின், அவர்கள் வந்து குடியேறி, நாடுகளைக் கைப்பற்றி அரசாட்சி ஆரம்பிக்க (9000—8152)=848 ஆண்டுகள் வேண்டும்.

இது விஷயமாய் சவகர்லால் நேரு தம் குமாரி "இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள்" என்னும் நூலில் பக்கம் 165 முதல் 178 வரை ஆரியர் வருகையைப்பற்றிக் கூறியிருப்பது எண்ணத்தக்கது:—

Digitized by RMRL

"மத்திய ஆசியாவில் ஆரியர்கள் சனத்தொகை ஏராளமாய் இருந்திருக்கவேண்டும். அங்கே எல்லாருக்கும் போதிய உணவுப்பொருள்கள் கிடைப்பது அரிதானமையால் அவர்கள் எல்லாம் வேறு தேசங்களில் பரவினர். அவர்களில் பெருந்தொகையினர் பாரசீகத்துக்கும், யவன தேசத்துக்கும், மற்றும் பல மேற்குத் திசை நாடுகளுக்கும் சென்றனர். காஷ்மீர தேசத்தையும் அதைச் சுற்றிலும் உள்ள மலைகளையும் கடந்து அவர்களின் கூட்டம் திரள் திரளாக இந்தியாவிற்குள் நுழைந்தது. ஆரியர்கள் தைரியமும் பலமும் படைத்திருந்தனர். தங்களுக்கு எதிர்ப்பட்ட திராவிடர்களைத் தங்கள் முன் ஓடும்படி சண்டையிட்டுத் துரத்தினர். வடமேற்கிலிருந்து ஆரியர்களின் கூட்டங்கள், கடலின் அலைபோன்று, ஒன்றன்பின் ஒன்றாக இந்தியாவிற்குள் நுழைந்திருக்கவேண்டும்.

முதல் முதல் திராவிடர்கள் ஆரியர்களை முன்னேறவிடாமல் தடுத்திருக்கலாம். ஆயினும், படைபடையாய் ஆரியர்களின் கூட்டம் அடுத்தடுத்து வந்ததால், அவர்களைத் தடுக்கத் திராவிடர்களால் முடியாமற் போய்விட்டது. வெகு நாட்கள் வரையிலும் ஆரியர்கள் வடக்கே பஞ்சாபிலும், ஆப்கனிஸ்தானிலும் தங்கி இருந்தனர். மெள்ள மெள்ள நாம் இப்போது இருக்கும் ஐக்கிய மாகாணத்திற்குத் தெற்கு நோக்கி வந்தார்கள். இவ்விதமாக அவர்கள் நாளடைவில் மத்திய இந்தியா முழுதும் பரவி, விந்திய மலைப் பிரதேசம் வரையில் ஆக்கிரமித்துக்கொண்டார்கள். விந்தியமலைப் பிரதேசம் காடு அடர்ந்ததாய் இருந்ததால், அதைத் தாண்டித் தெற்கே அவர்களால் செல்ல முடியவில்லை. ஆகவே, வெகு காலம் வரையிலும் ஆரியர்கள் விந்திய மலைக்கு வடக்கிலேயே வசித்துவந்தனர். இக்காரணத்தால்தான் இன்றைக்கும் தென்னிந்தியாவில் திரா

விடர்கள் வசித்துவருகின்றனர். இந்தக் காலதத்தில்தான் ஆரியர்கள் இருக்குவேதத்தை இயற்றி இருக்கவேண்டும். பிறகு மற்ற வேதங்கள் புராணங்கள் எழுதப்பட்டன. இவற்றிற்கு நெடுங்காலத்துக்குப் பிறகுதான் இராமாயணமும், மகா பாரதமும் உண்டாயின.

ஆரியர்கள் பஞ்சாபிலும், ஆப்கனித்தானிலும் வசித்து வந்த காலத்தில் அதைப் "'பிரமாவர்த்தம்' என்று அழைத்தார்கள். ....ஆரியர்கள் ஏறக்குறைய ஐந்து, அல்லது, ஆறு ஆயிரம் ஆண்டுகளுக்கு நெடுங்காலத்துக்கு முன்னதாகவே இந்தியாவுக்கு வந்திருக்கவேண்டும்............ அவர்கள் வந்தால் திரும்பிப்போவது என்பது இல்லை. அவர்கள் இந்தியாவிலேயே குடியேறிச் சண்டையிட்டுச் சாவதற்கும் தயாராக வந்தார்கள்.

இதிகாச காலத்தில் ஆரியர்கள் விந்திய மலைக்கு வடக்கே வடஇந்தியா முழுதும் பரவி இருந்தனர். இந்தப் பரந்த இடத்தைத்தான் ஆரியாவர்த்தம் என்று வழங்கினர்கள்."

இடைச்சங்கமானது இராமாயண காலத்துக்கு எண்ணூறு ஆண்டுகள் முன் வெண்டேர்ச் செழியன் என்னும் பாண்டியனால் பொருநை ஆற்றின் (தாம்பிரபரணி) முகத்துவாரத்தில் புதிதாய்க் கட்டப்பட்ட கபாடபுரம் என்னும் நகரில் ஆரம்பிக்கப்பட்டது. கொற்கை என்னும் நகரம் சிறந்த வியாபாரத் தலமாக இருந்ததே ஒழிய, தமிழ்மொழி வளர்ச்சிக்கு அவ்வளவு உகந்ததாய் இல்லை. ஆதலின் முதுகுடுமி காலம் முதல் வெண்டேர்ச் செழியன் காலம் வரை வேறு தகுந்த சிறந்த ஊர் இன்மையால் அங்கேயே சங்கம் நடைபெற்றுவந்தது.

Digitized by RMRL

இடைச்சங்க காலத்தின் பிற்பகுதியில் பாண்டியரில் ஒரு பிரிவார் பூழியிலும், இன்னொரு பிரிவார் மணலூரிலும் இருந்து சில பகுதிகளை ஆண்டுவந்ததாகத் தெரிகிறது. ஆரிய நூல்களாகிய இராமாயணத்திலும் மாபாரதத்திலும் கபாடபுரத்து இரண்டாம் சங்கத்தைப்பற்றிப் பேசப்பட்டுள்ளது.

இராம இராவணப் போர் நடந்தது கி. மு. 6000-இல். மாபாரதச் சண்டை நடந்தது கி. மு. 3105-இல். வான்மீகியார் இராமாயணத்தில் கிட்கிந்தா காண்டத்தில் சுக்கிரீவன் தன் சேனைகளை விளித்து, சீதையைத் தேடவிட்டபோது, தென்னாட்டில் பல இடங்களைப் பற்றிச் சொன்னபின், "வானரர்களே! மலய மலைக்கு அப்பால் பொன்மயமானதும், முத்து, மணிகளால் அலங்கரிக்கப்பட்டதும், திவ்விய மானதும், தகுதியோடு கூடியதுமாகிய பாண்டியர்கள் கபாடத்தைப் பார்ப்பீர்கள்," என்று கூறுகின்றான், (கிட்—43—13). இதனால் இராமாயண காலத்தில் கபாடபுரம் சிறந்த நிலையில் பாண்டியர் தலைநகராக விளங்கிற்று எனத் தெரிகிறது.

கபாடபுரத்தில் குளிக்கப்பட்ட முத்து, வேறு இடங்களில் எடுக்கப்பட்ட முத்தைவிடச் சிறந்ததாய் இருந்ததால், மிகவும் சிறந்த முத்துக்குக் கபாடம் என்றே பெயர் அமைந்து, உரோமாபுரி, பாபிலோனியா, எகுபதியம் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது.

கபாடபுரத் தமிழ்ச்சங்கத்தில் பல ஆரியர்கள் சேர்ந்து, படித்து, தமிழ்ப் புலவர்களாய்த் தேறி, அச் சங்கத்திலேயே உறுப்பினராகவும் இருந்தார்கள். வான்மீகனாரும், மார்க்கண்டேயரும், உலோபா முத்திரை-அகத்தியரும், துவரைக்கோமான் கண்ணன் முதலியோரும் அன்னவர்களே. இவர்களுள் சில

ருடைய பாடல்கள் பல சங்க இலக்கியங்களில் காணப்படு கின்றன.

"அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற தொல்—புறத்—19 சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் "இனித் தமிழ்ச் செய்யுட்கண்ணும் இறையனாரும், அகத்திய னாரும், மார்க்கண்டேயனாரும், வான்மீகனாரும், கவுதமனாரும் போல் வார் செய்தன தலையாய ஓத்து எனவும், அகத்தியம் தொல் காப்பியம் முதலிய தமிழ்நூல்கள் இடையாய ஓத்து எனவும், இவை எல்லாம் இலக்கணம் எனவும் கூறுதலால், அகத்தியனார் இலக்கணம் செய்தற்கு முன்னரே தமிழில் தலையாய ஒத்தாக இலக்கியம் செய்தார் உண்டென்று உணரக்கிடத்தல் காண்க," எனக் கூறுகிறார். மேலே கூறப் பட்ட இறையனார் உள்ளிட்ட அனைவரும் ஆரியப் புலவர்கள் ஆவார்கள்.

தலைச்சங்கத்திலும் இறையனார், அகத்தியனார் என்ற பெயருடைய புலவர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் ஆரியர்கள் அல்லர். கடைச்சங்க காலத்திலும் இறையனார், அகத்தியனார் என்ற பெயருடைய புலவர்கள் இருந்தார்கள். ஆகையால், எல்லோரையும் ஒருவராக எண்ணுதல் கூடாது.

கவுதமனார் என்னும் புலவர் ஒருவர் திருப்பரங்குன் றத்துத் தென்மதுரைச் சங்கத்தில் இரண்டாம் முரஞ்சியூர் முடிநாக அரையருடன் புலவராகத் திகழ்ந்தார். அவரை இரண்டாம் கவுதமனாராகக் கொள்ளவேண்டும். என்னெ னின், கவுதமனார் தருமபுத்திரரைப் பற்றியும், இரண்டாம் முடி நாக அரையர் பாண்டவர் கவுரவர் சேனைகளுக்குப் பாரதப் போரில் பெருஞ்சோறு கொடுத்த உதியன் சேரலாதனைப் பற்றியும் பாடியுள்ளதால் என்க. இவர்கள் பாரதப் போரைப்பற்றிப் பாடி இருப்பதால், பாரத காலத்துக்குப் பிற்பட்டவர்களே. இடைச்சங்க காலத்தவர்கள் அல்லர்.

Digitized by RMRL

இடைச்சங்க முடிவு

இடைச்சங்கம் கி. மு. 3105-இல் முடிவு பெற்றது. அச் சங்கம் முடிவடைந்தது துவரைக் கோமான் கண்ணனால் என்று வியாசபாரதம் கூறுகிறது என்று இராகவ அய்யங்கார் தம் "தமிழ் வரலாறு" என்னும் நூலில் பக்கம் 36-இல் கூறுகிறார். அது வருமாறு :

"கேசவனாலே, அரசனான தன் பிதாவும் யுத்தத்தில் கொல்லப்பட்டு, பின் பாண்டியர்களுடைய கபாடபுரமும் பிளக்கப்பட்டு, உறவினர்களும் தங்கள் தங்கள் ஸ்தானத்தைவிட்டு ஓடிப்போன சமயத்தில், பீஷ்மர் இடத்திருந்தும், அவ்வாறே துரோணர் இடத்திருந்தும், பரசுராமர் இடத்திருந்தும் (இவர் இராமாயண காலத்துப் பரசுராமருடைய வழிவந்தவர்), கிருபாசாரி இடமிருந்தும், அஸ்திரங்களைப் பெற்று, அந்த அஸ்திரங்களாலே உருக்குமி, கர்னன், அர்ச்சுனன், அச்சுதன் இவர்களோடு ஒப்புமையைப் பெற்று, துவாரகையை நாசம் பண்ணுவதற்கும், பூமி முழுதையும் ஜெயிப்பதற்கும், விரும்பினவனும், கற்றறிந்தவர்களான சிநேகிதர்களாலே நன்மையைக் கருதி, அவ்வித முயற்சியிலிருந்து தடுக்கப்பட்டு, தொடர்ச்சியாய் வைரத்தை விட்டுத் தன் இராஜ்யத்தை ஆண்டுவருகிறவனும், பலசாலியுமான சாகரத்துவஜ பாண்டியன் சந்திர கிரணங்கள் போன்ற நிறமுள்ளவைகளும், வைடூரியம் இழைத்த விரிப்புக்களால் மூடப்பட்டவைகளும் ஆன குதிரைகளோடு, பராக்கிரமம் என்கிற பொருளைக் கைப்பற்றித் திவ்வியமான தனுசை நாண் ஒலி செய்துகொண்டு துரோணரை எதிர்த்துவந்தான். பித்தளைபோன்ற நிறமுடைய குதிரைகள் பாண்டியன்பின் தொடர்ந்து வருகின்ற 1,40,000 சிறந்த தேர் ஆளிகளைத் தாங்கின."

அதே புத்தகத்தில் பக்கம் 60-இல்:—“கபாடபுரம் ஆகிய நல்நகரை அழித்துச்சென்ற கண்ணபிரானைச் சினந்து, அவன் உள்ள துவாரகையை அழித்தற்குப் படை எடுத்துப் புறப்பட்ட பப்புருவாகனன் என்னும் பாண்டியனை, அவனைச் சூழ இருந்த நல் அறிஞர் தடுத்தலால் படை எடாது நின்றனன்,” என்று கூறப்பட்டுள்ளது.

ஆதலின், இடைச்சங்கமும் கபாடபுரமும் அழிந்தது கடல்கோளால் அன்று, கண்ணனால் என்று தெளிவாகத் தெரிகிறது. துவரைக் கண்ணன் அப்படிச் செய்ததற்குக் காரணம் பழைமையான குலவிரோதமே ஆகும். கண்ணன் அரக்கர்வழி வந்தவன். கம்சனுடைய தங்கை பிள்ளை. கம்சன் சராசந்தனுடைய மருமகன். அரக்கருக்கும் பாண்டியருக்கும் கி. மு. 7500-இல் முதுகுடுமிப் பெருவழுதி காலம் முதற்கொண்டே பகை இருந்துகொண்டிருந்தது என்பது சரித்திரத்தில் கண்ட உண்மை. துவாரகை உள்ள மேற்குக் கடற்கரைக்கு “ஒகமண்டலம்” என்று பெயர். கொற்கை உள்ள கிழக் கடற்கரைக்கு “மாரேகமண்டலம்” என்று பெயர். மாரேக மண்டலம் என்றால் ஒக மண்டலத்துக்கு மாறுபட்ட மண்டலம் என்பதாம். ஆதலின், அப்பெயரே இரு மண்டலங்களுக்கும் உள்ள பகைமையை வெளிப்படுத்தும்.

குறிப்பு: ‘தமிழ் வரலாறு’ பக்கம் 223-இல் அடியில் வருமாறு திரு. இராகவய்யங்கார் அவர்கள் கூறுகிறார்:

“இசை நுணுக்கம் செய்தவர் தேவ இருடியாகிய குறுமுனிவர் மாணாக்கர் பன்னிருவரில் சிகண்டி என்னும் அருந்தவ முனிவர். அநாகுலன் என்னும் தெய்வப் பாண்டியனுக்கும், திலோத்தமை என்னும் தெய்வ மகளுக்கும் சனித்த சாரகுமாரன் என்னும் பாண்டியன், இசை அறிதற்பொருட்டு

Digitized by RMRL

இந்நூல் செய்யப்பட்டதென்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைச் சிறப்புப் பாயிரத்தில் கூறியுள்ளார். இந்நூல் அடியார்க்கு நல்லார் காலத்தில் நிலவியதென்று கொள்ளக்கிடக்கின்றது" என்பது.

தமிழ் வட்டெழுத்து வரலாறு

"ஆசிரியர் தொல்காப்பியனார் உரைக்கும் தமிழ் எழுத்தின் வடிவங்கள் தமிழ் வட்டெழுத்துக்களின் வடிவோடு ஒத்திருத்தல் போல், பிராமி எழுத்துக்களின் வடிவோடு ஒத்து இராமையால், தொல்காப்பியனார் காலத்துக்கு முன்னமேயே வட்டெழுத்துக்கள் தமிழ்நாட்டின்கண் வழங்கினதாக வேண்டும்" என்று "தமிழ் ஆராய்ச்சி" (Tamil Studies) என்ற நூலில் (பக்கம் 113 முதல் 131 வரை) திருவாளர் சீனிவாச அய்யங்கார் கூறுகின்றார். அவர் கொண்ட முடிவே மறைமலையடிகள் அவர்களுடைய முடிவும்.

இம்முடிபையே (Rhys David) இரைஸ் டேவிட், (Thomas) தாமஸ், (Burnell) பர்னெல் முதலிய ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களும் நடு நின்று ஆராய்ந்து ஒத்துக் கொண்டுள்ளார்கள், என்று "மாணிக்கவாசகர் காலம்" என்ற நூலில் பக்கம் 588-இல் கூறப்பட்டுள்ளது காண்க.

ஆதலின், தமிழ் வட்டெழுத்துக்கள் தமிழுக்கே உரியனவாய், தமிழர்களாலேயே உண்டாக்கப்பட்டு, தொல்காப்பியனார் காலத்துக்கு முன்னிருந்தே, தொன்றுதொட்டு, அஃதாவது, கி. மு. 7500 முதற்கொண்டே வழங்கும் தனித் தமிழ் எழுத்துக்களே ஆகும். அவை வடவாரியர் வழங்கிய பிராமி எழுத்துக்களினின்றும் வந்தவை அல்ல.

"எருது ஈன்றது என்றால், கொட்டத்தில் கட்டு," என்று கூறப்படும் பழமொழிபோல, பிராமி எழுத்துக்களின் வழிவந்தனவே தமிழ் வட்டெழுத்துக்கள் என்று எவனோ ஒருவன் ஆராய்ச்சி இன்றிக் கூறுவானேல், அதனைப் படித்துக்கொண்டு சிலர் கூத்தாடுகின்றனர். அது பொருந்தாக் கொள்கையாகும்.

தமிழ் வட்டெழுத்துக்கள் 9000 ஆண்டுகளாக தமிழ் நாட்டில் வழங்குவனவாயிருக்க, இரண்டாயிரத்து முந்நூறு ஆண்களுக்கு உட்பட்ட வழக்கையே கொண்டுள்ள பிராமி எழுத்துக்களே தமிழ் வட்டெழுத்துக்களின் வழிவந்தவை என்று கூறுவது பொருத்தமுடைத்தோ?

கோல் எழுத்து வட்டெழுத்தாக மாறிய விதம்

கோல் எழுத்துக்களே ஏட்டில் விரைவாக எழுதப் படும்போது, எழுத்தாணியின் முனையானது எழுதுபவரின் முயற்சி இல்லாமலே வட்டமாக விழுந்துவிடுவதால் வட்டெழுத்துக்களாகக் காணப்பட்டதை நோக்கித் தொல்காப்பியனாருக்கு முன் முதுகுடுமிப் பெருவழுதியின் தமிழ்ச் சங்கத்தில் இருந்த இலக்கண ஆராய்ச்சியாளர்கள் வட்டெழுத்து வரிவடிவங்களை ஒரு முறைப்படுத்தி அதற்கு இலக்கணம் வகுத்தார்கள்.

வட்டெழுத்துக் காலத்தில்தான் ஆந்திரம், கன்னடம் முதலிய மொழிகள் தமிழினின்றும் பிரிந்தன. எப்படியெனில், முதுகுடுமிப் பெருவழுதி காலந்தொட்டே ஆரியர் தென்னாடுவர ஆரம்பிக்கவே, இந்துத்தானத்தை அடுத்துள்ள நாடு ஆந்திர நாடு ஆனதால், ஆண்டுள்ளோர் பேசும் தமிழ்மொழியோடு ஆரியம் கலக்கவே, ஒரு புதுமொழி பிறந்தது. அதுதான் ஆந்திரம்.

Digitized by RMRL

ஆந்திர நாட்டுக்கு மேல் பாகமாக அமைந்துள்ள நாடு கரிசல்நில நாடு, அல்லது, கருநாடு ஆகும். கருநாடு என்பது கருநாடகம் என்று ஆயிற்று. அந்த நாட்டிலும் ஆரியர்கள் குடியேற ஆரம்பிக்கவே, அவர்கள் பேசும் தமிழ்மொழியும் ஆரியமும் கலந்து கருநடம்—கன்னடம் என்னும் மொழியாக ஆயிற்று. ஆந்திரரும்—கன்னடரும் தமிழ் வட்டெழுத்துக்களையே பின்பற்றித் தங்களுடைய புது மொழிகளுக்கு வரிவடிவங்கள் அமைத்துக் கொண்டார்கள். தமிழ்—ஆரியம் ஆகிய இருமொழிகளின் இலக்கணங்களைத் தழுவியே தங்கள் மொழிகளுக்கு இலக்கணங்கள் வகுத்துக் கொண்டார்கள்.

கி. மு. 6000-இல் வாழ்ந்த இராவணன் போன்ற அரக்க அரசர்கள் தெலுங்கு மொழியைச் சேனைமொழியாகக் கொண்டிருந்தார்கள், ஆங்கிலேயர் காலத்தில் சேனை மொழி இந்துத்தானி என்று இருப்பதுபோல.

தமிழில் வட்டெழுத்துக் காலத்திலும் பதினாறு உயிர்களும் முப்பத்தைந்து மெய்களும் ஆக (51) ஐம்பத்தோர் எழுத்துக்கள் இருந்தன. நீட்டொலிப்புணர்ச்சி (தீர்க்க சந்தி) குவித்தொலிப்புணர்ச்சி (விருத்திசந்தி), எடுத்தொலிப் புணர்ச்சி (குணசந்தி) முதலிய புணர்ச்சி விதிகளும் இருந்தன. இப் புணர்ச்சி விதிகள் ஆந்திர கன்னட இலக்கணங்களில் காணலாம்.

இடைச்சங்கத்தில் சங்கம் ஏற்பட்ட கி. மு. 6805 முதல் தொல்காப்பியனார் காலமாகிய கி. மு. 6000 வரை தமிழில் வட்டெழுத்துக்களே வழங்கிவந்தன. தொல்காப்பியனார் காலத்திலேதான் தமிழ்மொழியில் உள்ள 51 எழுத்துக்களில் அதிகப்படியாக உள்ள 20 எழுத்துக்களை நீக்கி,

31 எழுத்துக்களாக ஏற்பாடு செய்யப்பட்டது. (உயிர் 12-மெய் 18-ஆய்தம் 1 ஆக 31) இதனை :

"எழுத்தெனப் படுப அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப
சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடையே."

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் அறியலாம். தொல்காப்பியப் பாயிர உரையில் நச்சினார்க்கினியர் "முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி" என்ற தொடரில் உள்ள 'முந்து நூல்' என்பதற்கு, "அகத்தியமும் மாபுராணமும், பூதபுராணமும், இசைநுணுக்கமும்" ஆம். அவற்றுட் கூறிய இலக்கணங்களாவன : "எழுத்து-சொல்-பொருள்-யாப்பும்-சந்தமும்-வழக்கியலும்-அரசியலும்-அமைச்சியலும்-பார்ப்பன இயலும்-சோதிடமும்-காந்தருவமும்-கூத்தும் பிறவுமாம்" என்று கூறுகின்றார். தொல்காப்பியனார் மேற்கூறிய நூல்களையும், ஐந்திர நூலையும் கற்றுப் பின் 'தொல்காப்பியம்' என்னும் நூலை யாத்ததாக ஏற்படுகிறது.

அகத்தியமும்-மாபுராணமும்-பூதபுராணமும்-இசைநுணுக்கமும், இடைச் சங்கத்திலேயே தொல்காப்பியத்துக்குமுன், அஃதாவது. கி. மு. 6805 முதல் கி. மு. 6000-க்கு உள்ளே செய்யப்பட்டனவாகும். தமிழ் ஐந்திர நூல் இந்திரனார் என்பவரால் முதுகுடுமிப் பெருவழுதி தமிழ்ச்சங்கத்தில் செய்யப்பட்டது. அவைகளைத் தழுவியே தொல்காப்பியம் செய்யப்பட்டதாக நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.

மேற்கூறிய இலக்கண நூல்களில் பார்ப்பன இயல் என்ற ஒரு தனி இயல் இயற்றப்பட வேண்டுமானால், அவ்விலக்கண நூல்கள் யாக்கப்படுவதற்கு முன்னரே, ஆரியப் பார்ப்பனர் தமிழ்நாடு போந்து இருக்கவேண்டும் என்பது

Digitized by RMRL

தெரிகிறது. ஆதலின், முதுகுடுமிப் பெருவழுதி காலமாகிய கி. மு. 7500-இல் இருந்தே ஆரியப் பார்ப்பனர் தென்னாட்டில் குடிபுகுந்து, தென்னாட்டை இருப்பிடமாய்க்கொண்டு, வாழ்ந்துவந்ததால்தான், அவர் வாழ்க்கையினைக் குறித்து இலக்கண நூல்களில் ஒரு தனி இயல் வகுக்க நேர்ந்தது என்பது தெரிகிறது.

பொதியமலை அகத்தியர் I பாடியது உருவெழுத்துக் காலத்து இலக்கணம் ஆகும்.

வாதாபி அகத்தியர் பாடியது கோல் எழுத்துக் காலத்து இலக்கணம் ஆகும்.

கொற்கைப்புரோகித அகத்தியர் I பாடியது வட்டெழுத்துக் காலத்து இலக்கணம் ஆகும்.

உலோபா முத்திரை அகத்தியர் பாடியது சதுர எழுத்துக் காலத்து இலக்கணம் ஆகும். இந்த இலக்கணத்தைத் தான் இவருடைய மாணவர் தொல்காப்பியர் (ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் அல்லர்) கிழித்தெறிந்துவிட்டார்.

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியனூர் பாடியது சதுர எழுத்துக் காலத்து இலக்கணம். இதுதான் இன்றும் வழக்கில் இருக்கிறது.

௬. திருப்பரங் குன்றத்துத் தென்மதுரைத் தமிழ்ச்சங்கம்

(சதுர எழுத்துக்காலம்)

1. காலம்: கி. மு. 1915 முதல் கி. மு. 1715 வரை இருநூறு (200) ஆண்டுகள்.

2. இடம்: திருப்பரங்குன்றப் பக்கம் இருந்த தென் மதுரை. (இது இப்போதுள்ள கூடல் என்னும் தென்மதுரை கட்டப்படுவதற்குமுன் இருந்த நகர் ஆகும்.)

3. சங்கம் இரீஇய அரசர்:
   (1) இரண்டாம் முடத்திருமாறன் (1915 B. C.)
   (2) பொற்கைப் பாண்டியன்
   (3) குறுவழுதி (இவன் ஒரு சிறந்த புலவன்)
   (4) பாண்டியன் மாறன்வழுதி (இவனும் ஒரு புலவன்)
   (5) மூன்றாம் முடத்திருமாறன் (1715 B. C.) முதலியோர்.

4. புலவர்: திருப்பரங்குன்றத்துத் தென்மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்கள் (1915 B. C. to 1715 B. C.)

வரிசை எண்	சமாக எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டெண்	
1	427	ஈழத்து முரஞ்சியூர் முடிநாக அரையர் II	1272	2189	1
2	53	,, பூதன் தேவனார் (மதுரை)	151	281—7	7
3	61	உழுந்தினைம் புலவர்	177	330	1
4	62	உறையனார்	,,	331	1

Digitized by RMRL

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டுஎண்	
5		கவுதமனார் II (ஆரியர்)			
6	146	கால் எறி கடிகையார்	532	1067	1
7	188	கேசவனார்	604	1176	1
8	208	சத்திநாதனார்	634	1230	1
9	212	சாத்தனார்	638	1239	1
10	218	செம்பியனார்	650	1263	1
11	237	தனிமகனார்	669	1300	1
12	239	தாமோதரனார்	671	1302	1
13	251	தேவகுலத்தார் (ஆரியர்)	686	1332	1
14	252	தேவனார்	687	1333	1
15	255	தொல்கபிலர்	6‹8	1336—41	6
16	269	நல்லுருத்திரனார்	872	1445—61	17
17	278	நற்றமனார்	849	1477	1
18	288	நெடுவெண்ணிலவினார்	860	1500	1
19	290	நெய்தல் காக்கியார்	862	1504—5	2
20	7	பாண்டியன் குறுவழுதி அண்டர் மகன்	12	10—13	4
21	310	,, மாறன் வழுதி	926	1618—9	2
22	318	பிரமசாரி	992	1713	1
23	319	பிரமனார்	,	1714	1
24		புரோகித அகத்தியர் III (ஆரியர்)	பேர் அகத்தியம் சிற்றகத்தியம்		
25	336	பெருந்தேவனார் I	1029	1774—6	3
26		பொற்கைப் பாண்டியன்			
27	356	போதனார்	1082	1940	1
28	375	மதுரைக் கூத்தனார்	1111	1992	1
29	405	மாடலூர் கிழார்	1226	2119	1
30	406	மாதீர்த்தன்	1227	2120	1
31	407	மாமிலாடன்	12‿7	2121	1
32	411	மாலைமாறன்	1248	2154	1
33		முடத்திருமாறன் II			
34	465	வெள்ளியக் தின்னனார்	1307	2251	1
35	469	வெள்ளைமாளர்	1315	2270	1
36		முடத்திருமாறன் III			

5. நூல் : (1) தொல்காப்பியம், (2) இறையனார் ஐந்திணை அகநூல், (3) பேரகத்தியம், (4) சிற்றகத்தியம் முதலியன.

6. **பாடப்பட்டன :** (1) பெருந்தேவனார் பாரதம், (2) எட்டுத்தொகை நூற்களில் கண்ட சில பாடல்கள் கொண்ட நூல்கள், (3) பேரகத்திரம், (4) சிற்றகத்தியம் முதலியன.

7. **பாடப்பட்டோர் :** பொற்கைப் பாண்டியன் முதலியயோர்.

8. **கவிஅரங்கேறிய அரசர் :**

(1) இரண்டாம் முடத்திருமாறன்

(2) பாண்டியன் குறுவழுதி முதலியோர்

9. **வரலாறு :** வடநாட்டிலும் தென்நாட்டிலும் கி. மு. 3105-இல் நடந்த பாரதப் போரினால் ஏற்பட்ட குழப்பங் காரணமாக, கபாடபுரம் கி. மு. 3105-இல் அழிக்கப்பட்டது முதல் கி. மு. 1915 வரை, 1190 ஆண்டுகள் தமிழ்நாடு நிலைகுலைந்து இருந்தது. தமிழ்ச்சங்கமும் நடைபெறாமல் தமிழ் வளர்ச்சி குன்றி இருந்தது. அவ்வளவு ஆண்டுகள் நடைபெறாமல் இருந்ததற்குக் காரணம், அந்தக் காலத்தில் பல கடல்கோள்கள் அடுத்தடுத்து உண்டாயினமையும், அரச இருக்கையானது கடல்கோள் காரணமாகக் கபாடபுரத்திலிருந்து கொற்கைக்கும், கொற்கையிலிருந்து பூழிக்கும் பூழியிலிருந்து மணலூர்ப் புரத்துக்கும் மாறிக் கொண்டு இருந்தமையும், அரசர்களுக்கும் குடிகளுக்கும் ஒற்றுமை இன்மையும், அரக்கர்களுடைய தொல்லையும் காரணமாகும்.

Digitized by RMRL

இடையூழிக்குப் பின் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கடல் கோள்களாவன :

(1) பீடு (Bede) என்பவர் அபிப்பிராயப்படி கி. மு. 3544-இல் ஒரு கடல்கோளும்,

(2) கிளமண்ட் அலெக்சாந்தரின் (Clement Alexandarinus) அபிப்பிராயப்படி கி. மு. 3475-இல் ஒரு கடல்கோளும்,

(3) ஏல்ஸ் (Hales) என்பவர் அபிப்பிராயப்படி கி. மு. 3153-இல் ஒரு கடல்கோளும்,

(4) யூரிபியஸ் (Euribias) என்பவர் துணிபுப்படி கி. மு. 2450-இல் ஒரு கடல்கோளும்,

(5) இலங்கைச் சரிதப்படி கி. மு. 2387-இல் ஒரு கடல் கோளும்,

(6) அர்ஷர் (Ursher) அபிப்பிராயப்படி கி. மு. 2349-இல் ஒரு கடல்கோளும்,

(7) எபிரேயர்களின் (Hebrews) பழைய வேதாகமப்படி (Old Testament) கி. மு. 2344-இல் ஒரு கடல் கோளும்,

(8) ஆரியர்களுடைய சதபதப் பிரமாணத்தின்படி கி. மு. 2300-இல் ஒரு கடல்கோளும்,

(9) எபிரேயர்களின் (Hebrews) சரிதப்படி கி. மு. 2105-இல் ஒரு கடல் கோளும்,

(10) பாபிலோனியா சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ள சாசனப்படி (Cuni form Clay Tablets) கி. மு. 2000-இல் ஒரு கடல்கோளும்,

(11) களவியல் உரைப்படி கி. மு. 1715-இல் ஒரு கடல் கோளும்,

ஏற்பட்டதாக அறிகிறோம். இக் கடல்கோள்கள் எல்லாம் இந்து மாக்கடலைப் பொறுத்தன. ஆனபடியால் தமிழ் நாட்டைப் பெரிதும் கரைத்து, அலைத்து, துன்புறுத்தின. தமிழ்நாடானது இடைச்சங்கத்துக்குப் பின் ஏற்பட்ட கடல் கோள்களாலும், அரக்கரால் ஏற்பட்ட போர்களாலும், உள்நாட்டுக் கலகங்களாலும் அலைக்கழிக்கப்பட்டு வருந்தி நின்றதே தமிழ்மொழி வளர்ச்சிக்கு வசதி இன்றி முடிந்தது. மேலே குறிப்பிட்ட கடல்கோள்கள் எல்லாம் ஏனைய நாடுகளைப் பற்றியனவாய் இருந்தபோதிலும் தமிழ்நாட்டையும் நனி துன்புறச் செய்தன.

கி. மு. 2000-இல் ஏற்பட்ட கடல்கோளுக்குப் பின் திருப்பரங்குன்றத்துப் பக்கம் இருந்த தென்மதுரையில் தமிழ்ச்சங்கத்தை நிலைநாட்டின இரண்டாம் முடத்திருமாறன் கபாடபுரத்தில் அரசாண்ட கடைசிப் பாண்டியனை முதலாம் முடத்திருமாறன் குடிவழி வந்தவன். இவன் மணலூர்ப் புரத்தில் வசித்து வந்தபோதிலும், தமிழ்ச்சங்கம் நிறுவத் திருப்பரங்குன்றத்துப் பக்கம் இருந்த தென்மதுரைதான் தகுந்த இடம் எனக் கருதி, ஆங்குச் சங்கத்தை நிலைநாட்டினன். இவன் ஒரு பெரும் புலவன். பாலையையும் குறிஞ்சியையும் பாடுவதில் இணையற்றவன். நற்றிணையில் இரண்டு பாட்டுக்கள் இவன் பாடியவை

இவன் நாட்டிய சங்கம் 200 ஆண்டுகள் நடைபெற்றது. இந்த 200 ஆண்டுகளிலும் சுமார் ஆறு பாண்டியர்கள் ஆட்சி புரிந்திருக்க வேண்டும். அவர்களில் சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகளால் குறிப்பிடப்பட்ட பொற்கைப் பாண்டியன் என்பவனும், 150-ஆம் அகப்பாடலைப் பாடிய பாண்டியன் குறுவழுதி குறுஞ்செழியன் என்பவனும், இச் சங்க காலத்தவராய் இருக்கலாம் என்று ஊகிக்க இடந்தருகின்

றது. இச் சங்கத்தின் கடைசி அரசன் மூன்றும் முடத்திரு மாறன் என்பவன். இவன் காலத்தில்தான் மணலூர்ப்புரத் துக்கும் திருப்பரங்குன்றத்துக்கும் இடையில் உள்ள பரப்பு கடம்பவனமாயிருந்தது. அக் கடம்பவனத்தில் இப்போது இருக்கும் பொற்றாமரைத் தடம் என்னும் குளத்தருகே ஒரு விமானத்தின்கீழ் சொக்கலிங்கப் பெருமானைத் தேவி யோடும் அவ்வனத்தின் வாழ் மாந்தர் வழிபட்டு வந் தார்கள்.

ஒரு நாள் இரவில் சொக்கலிங்கப் பெருமான் மண லூர்ப் புரத்தில் இருந்த முடத்திருமாறன் III கனவில் தோன்றி, "கோவில் எடுத்துக் குளம் தொட்டுத் தமிழ் வளர்க்க" என்று கூற, அரசனும் அவ்வாறே நகர் அமைக் கத் தகுந்த சிற்பிகளை வரவழைத்து உசாவாநின்ற போழ்து, ஒரு சித்தர் ஆண்டுப் போந்து நகர் அமைக்கும் விதம் உணர்த்திச் சென்றார். அவ்வாறே நகரும் கோவிலும் அமைந்தன. கோவிலின் வடமேற்கு மூலையில் "தமிழ் பயில் மண்டபமும்" கட்டிமுடித்து, தமிழ் அறிஞர்களை ஆங்கு குழுமச்செய்து வண்டமிழ் ஆய்ந்துவந்தான் அரசன். இதனை :

"கோயில் வடகுட புலத்தின் மாடோர், சங்கமண்டப முண்டாக்கித் தகைமைசால் சிறப்பு நல்கி, அங்கமர்ந் திருத்தி ரென்ன இருத்தினார் அறிஞர் தம்மை,"

என்னும் திருவிளையாடற்புராணச் செய்யுளால் அறிய லாம். இதனால் திருபரங்குன்றத்துப் பக்கம் இருந்த தென் மதுரைச் சங்கம் மூடப்பட்டது. தமிழ்ச் சங்கமும் சங்கப் புலவர்களும் கூடல் என்னும் மதுரைக்கு வந்துவிடவே, திருப்பரங்குன்றத் தென்மதுரை அழிவு எய்தியது.

"தமிழ் வரலாறு" என்ற நூலில் 177-ஆம் பக்கத்தில் புலவர் பெருந்தேவனார் என்பவரைப்பற்றிக் கூறியுள்ளது கருதத் தக்கது:

"பெருந்தேவனார் என்னும் பெயரை உடைய புலவர்கள் பலர். முதன் முதலாகப் பாரதம் பாடிய பெருந்தேவனார் வேறு. சின்னமனூர்ச் செப்பேட்டில் களப்பிரர் காலத்தில், அஃதாவது கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் ஒரு பெருந்தேவனார் பாரதம் பாடியதாகக் கூறப்பட்டுள்ளது. கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ஒரு பெருந்தேவனார் பாரதத்தை வெண்பா யாப்பில் பாடியுள்ளார்."

என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, பெருந்தேவனார் என்ற பெயரை உடைய புலவர்களே மூவர் வெவ்வேறு காலங்களில் இருந்தவராகவும், மூவரும் பாரதத்தை வெண்பா யாப்பில் பாடினதாகவும் அறிகிறோம். திருப்பரங்குன்றத்துத் தென்மதுரைச் சங்கத்தில் அங்கத்தினராய் இருந்து, பாரதத்தைத் தமிழில் பாடியவரே முதலாம் பெருந்தேவனார் ஆவர்.

முடிநாக அரையர்

முடிநாக அரையர் என்பார் ஈழநாட்டையும் அதன் பக்கமுள்ள தீவுகளையும் ஆண்ட அரச குடும்பத்தினர். முடிநாக அரையர் என்னும் சொல் வழக்கில் முடிநாகராயர் என்று வழங்கப்படுகிறது. நாகர் என்பார் பதினெண் பழந் தமிழ்க் குடிகளில் ஒரு பிரிவார் ஆவார். இக் குடியின் வழிவந்த வளைவணன் என்பவனுடைய மகள் பீலிவளையை கிள்ளிவளவன் என்ற சோழனும், அதற்குமுன், நாகர் நாட்டு அரசிளங்குமரி நாக கன்னியை அர்ச்சுனனும் மணம்புரிந்த செய்தி யாவரும் அறிந்ததே. நாக அரசபரம்பரையினர் தங்கள் முடியில் ஐந்தலைநாகப் படத்தைப்

Digitized by RMRL

பொன்னால் செய்து தரித்துக்கொள்ளும் வழக்கம் உடைய வரானதால் முடிநாக அரையர் என்ற பட்டத்தைப் பெற்றார். முடிநாக அரசர்களால் புதுப்பிக்கப்பட்ட தமிழ் நாட்டுக் கோவில்களில் ஐந்தலை நாக படத்தை உடைய கிரீடங்களை அணிந்த பல விக்கிரகங்களை நாம் பார்க்கலாம். மூலத் தானத்தில் உள்ள அருவுருவத் திருமேனியாகிய சிவலிங் கத்திற்கு இன்றும் ஐந்தலைநாக ஆபரணம் சாத்துவது வழக்கமாயுள்ளதை நோக்கின், நாகர்கள் தென்னாட்டில் பல சிவன்கோவில் பணிகள் செய்துள்ளார் என்று அறியக் கிடக்கின்றது.

தலைச் சங்கத்தில் ஒரு முடிநாக அரையர் உறுப்பின ராக இருந்தார். இந்தத் திருப்பரங்குன்றத் தமிழ்ச்சங்கத் திலும் ஒரு முடிநாக அரையர் உறுப்பினராக இருந்தார். ஆதலின், இவர் அவர் பரம்பரையில் வந்தவர் ஆவர். தமிழ் நாட்டில் உள்ள பதினெட்டுக் குடிகளைப் பற்றியும், பதி னெட்டுக் குடிமக்களைப் பற்றியும் சிறிது தெரிந்துகொள்ளு வது இன்றியமையாதது.

தமிழ் நாட்டுப் பதினெண் குடிகள்

(1) சேரர் (சேரகுல வேளாளர்)
(2) சோழர் (சோழிய வேளாளர்)
(3) பாண்டியர் (பாண்டிய வேளாளர்)
(4) ஒளியர் (ஒளிநாட்டு வேளாளர்)
(5) நாகர் (ஈழநாட்டு வேளாளர்)
(6) பல்லவர் (மணிபல்லவ நாட்டு வேளாளர்)
(7) கொங்கர் (கொங்குநாட்டு வேளாளர்)
(8) துளுவர் (துளுவ நாட்டு வேளாளர்)
(9) கார் காத்தார் (கார் மண்டல வேளாளர்)

(10) தொண்டை நாட்டார் (தொண்டை மண்டல வேளாளர் மடாதிபதிகளாக இருந்து, அரசர்களுக்கு முடிசூடுபவர்களானதால் இவர்களுக்குக் 'கொண்டை கட்டிகள்' என்ற பெயரும் உண்டு. கொண்டை - முடி)
(11) குறவர் (குறிஞ்சி நில மக்கள். மலைசரர் - மலையாளி)
(12) ஆயர் (முல்லை நில மக்கள்-இடையர்-கோனர்)
(13) வேடர் (பாலை நில மக்கள் - வேட்டுவர் - வில்லவர்)
(14) பரதவர் (நெய்தல் நில மக்கள் - செம்படவர்)
(15) பள்ளர் or மள்ளர் (மருத நில மக்கள்)
(16) கள்ளர் (சேனைக்கு உரியவர்)
(17) மறவர் (,,)
(18) அகம்படியர் (,,)

பதினெண் குடிமக்கள் (தொழிலாளர்)

1. நாவிதன்	7. கொல்லன்	13. மாலைகாரர்
2. குயவன்	8. கன்னான்	14. பாணன்
3. வண்ணான்	9. கம்மியன்	15. பள்ளி
4. ஓச்சன்	10. அறுவை வாணிகன்	16. வலையன்
5. தச்சன்	11. இலை வாணிகன்	17. இடையர்
6. தட்டான்	12. தயில வாணிகன்	18. வீரமுடையான்

இப் பதினெண் குடிமக்களைப்பற்றி அடியில் வருமாறு கல்லில் செதுக்கப்பட்டுள்ளது காண்க :

"தொண்டைமண் டலவரிசை மூவாறு குடிமக்கள்
சுருதிநாள் முதலாகவே
துங்கமிகு நாவிதன், குயவன், வண்ணான்,
ஓலை சொன்னபடி எழுதும் ஓச்சன்,

கண்டகம் மாளர்வகை ஐவர்,வா ணியர்மூவர்,
கந்தமலர் மாலை காரர்,
கலைமீது சரடோட்டும் பாணன், தலைக்கடைக்
காவல்புரி பள்ளி, வலையன்,
பண்டுமுதல் ஊரான் மறிக்கும்இடையன்விருது
பலகூறு வீர முடையான்,
பதினெண் குடிமக்கள் அனைவரும் காராளர்
பணிசெய்து பலமுறை மையும்
கொண்டுபரி வட்டமும் கட்டியே வருவர்இக்
குவலய மதிக்க வேதான்
கூறரிய கச்சிவாழ் ஏகம்பர் ஆலயக்
குமுதத்தில் இட்ட விபியே." —(மிராஸ்ரைட்)

இவர்களைத் தவிர வேறு மக்கள் தமிழ்நாட்டில் உள்ளார்கள். அவர்கள் எல்லாம் ஆரிய நாட்டில் இருந்தும் பிற நாடுகளில் இருந்தும் வந்து குடி ஏறினவர்கள் ஆவார்கள்.

புரோகித அகத்தியர்

வேள்விக்குடி - சின்னமனூர்ச் செப்பேடுகளில்

"பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனகப்
பெற்றது......பாண்டியர் திருக்குலம்."

என்று கூறி இருப்பதை நோக்கின், இத் திருப்பரங்குன்றத் தென் மதுரைச் சங்கத்தில் ஒரு புரோகித அகத்தியர் உறுப்பினராக இருந்தார் என்று எண்ணக்கிடக்கின்றது. முதுகுடுமிகாலத்தில் அவர் ஆரியநாட்டிலிருந்து போந்து பொதியமலை அகத்தியரின் மாணவரான ஓர் ஆரிய அகத்தியரைப் புரோகிதராக நியமித்துக்கொண்டார். அதுமுதல் பாண்டியர் குடும்பத்தில் அவ் வாரிய அகத்திய பரம்பரையினரே புரோகிதராக இருக்கும் பேறு பெற்றார்கள். களவியல் உரைகாரர் கடைச் சங்க வரலாற்றில், "கடைச் சங்கம் இரீஇயினார் கடல்கொள்ளப் பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக நாற்பத்

தொன்பதின்மர் என்ப,'' என்று கூறுவதால், கி. மு. 1715-இல் பாண்டி நாட்டில் ஒரு சிறு கடல்கோள் ஏற்பட்டதாக அறிகிறோம். இப்படிப் பல தமிழ்ச் சங்கங்கள் கடல் கோள்களால் அவதிப்பட்டமை தெரிந்துதான் மூன்றும் முடத்திருமாறன் இத் திருப்பரங்குன்றத் தென் மதுரைத் தமிழ்ச்சங்கத்தைச் சித்த மூர்த்தியால் குறிப்பிடப்பட்டுக் கடம்பவனத்தில் அமைத்த கூடல் ஆலவாய் என்ற தற்கால மதுரையில் கடைச்சங்கமாக நிலை நாட்டினன்.

கo. கடைச் சங்கம்

(சதுர எழுத்துக்காலம்)

1. காலம்: **1715 கி. மு. முதல் 235 கி. பி. வரை, 1950 ஆண்டுகள்.**

2. இடம்: **நான்மாடக் கூடல் என்கிற மதுரை.** ஆலவாய் என்றும் கூறுப. களவியல் உரைகாரர் இதனை உத்தரமதுரை என்பர். முன் சங்கம் நடைபெற்ற திருப்பரங்குன்றத்துத் தென் மதுரையை நோக்க இது வடமதுரையே ஆகும். அதனால் இஃது உத்தரமதுரை என்னப்பட்டது.

3. சங்கம் இரீஇய அரசர்: சங்கம் இரீஇய அரசர்கள் மூன்றும் முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி II ஈறாக 49 பேர். 49 பாண்டியர்களில், மூவர் பாண்டியர் சங்கமேறிய புலவர்கள் ஆவார்கள். 49 பாண்டியர்கள் பெயர்களும் கிடைக்கவில்லை. 17 பெயர்களே கிடைத்துள்ளன. அப் பெயர்களாவன:

Digitized by RMRL

3. சங்கம் இரீஇய அரசர்கள்

மொத்தம் 49 பேர்.

வரிசை எண்	பெயர் (அகராதி வரிசைப்படி)	
1	ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் I (125-144 A. D.)	புலவன்
2	இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் (இவன் நெடுஞ்செழியன் II காலத்தவன்)	
3	உக்கிரப்பெருவழுதி II (204-235 A. D.) அகநானூறு தொகுத்தவன்	புலவன்
4	ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் (சங்க மேறியவன்)	புலவன்
5	கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி	புலவன்
6	கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி-கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி I	50 B. C. to 30 A. D.
7	கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி	
8	சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்கிற வெற்றிவேற்செழியன்	144-174 A. D.
9	தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் II	புலவன் 174-204 A. D.
10	நம்பி நெடுஞ்செழியன் III	
11	நல்வழுதி (பூரிக்கோ) குறுந்தொகை தொகுத்தவன்	புலவன்
12	பன்னாடு தந்த மாறன்வழுதி. நற்றிணை தொகுத்தவன்	புலவன்
13	பாண்டியன் அறிவுடை நம்பி (சங்க மேறியவன்)	புலவன்
14	பாண்டியன் கீரன் சாத்தன், என்கிற பாண்டிக் குதிரைச் சாக்கையன்	
15	பாண்டியன் மதிவாணன் (சங்க மேறியவன்)	புலவன்
16	முடத்திருமாறன் III (—1715 B. C.)	புலவன்
17	வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி முதலியோர்	புலவன்

4. சங்கப் புலவர் (1715 B. C.—235 A. D.)

மொத்த எண்—449
கூட்டம் எண்— 49

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டு எண்	
1	1	அகம்பன் மாலாதனார்	8	1	1
2	4	அஞ்சில் ஆந்தையார்	9	4—5	2
3	5	அடைநெடுங் கல்வியார்	10	6—8	3
4	6	அணிலாடு முன்றிலார்	12	9	1
5	8	அதியன் விண்ணத்தனார்	14	14	1
6	9	அந்தி இளங்கீரனார்	15	15	1
7	10	அம்மூவனார்	16	16—142	127
8	11	அம்மெய்யன்நாகனார்	50	143	1
9	12	அரிசில் கிழார் (துறையூர்)	50	144—161	18
10	13	அல்லங்கீரனார்	61	162	1
11	14	அழிசி நச்சாத்தனார் (பெண்)	62	163	1
12	15	அள்ளூர் நன்முல்லையார்	62	164—174	11
13	17	ஆசிரியன் பெருங்கண்ணன்	67	179	1
14	18	ஆடுதுறை மாசாத்தனார்	68	180	1
15	20	ஆரிய அரசன் யாழ் பிரமதத்தன்	69	182	1
16	265	,, மதுரை ஆசிரியன் நல்லந்துவனார்	745	1400—39	40
17	51	,, இறையனார் IV	150	279	1
18	115	,, கபிலர் I—(ஆதாரம்) இன்னா நாற்பது	352	728—962	235
19	300	,, பரணர் I	871	1523-1607	85
20	314	,, பாலைக் கவுதமனார்	928	1627—37	11
21	169	,, குமட்டூர் கண்ணனார்	573	1131—40	10
22	206	,, கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார்	629	1223—8	6
23	21	ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்	69	183	1
24	22	ஆலங்குடி வங்கனார்	70	184—90	7
25	23	ஆலத்தூர் கிழார்	73	191—7	7
26	25	ஆலியார்	81	206	1

Digitized by RMRL

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம் பக்கம்	ஆதாரம் பாட்டுஎண்	பாட்டு மொத்தம்
27	26	ஆவூர் கிழார்	82	207	1
28	27	,, மகனார் கண்ணனார்	82	208	1
29	333	,, ,, பெருஞ்சாத்தனார்	1016	1754	1
30	28	ஆவூர் கவுதமன் சாதேவனார் ஆமூர் காவிதிகள்	83	209—10	2
31	29	ஆவூர் மூலங்கிழார்	84	211—221	11
32	335	ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்	1024	1765—73	9
33	30	இடைகழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்	91	222	1
34	31	இடைக்காடனார்	100	223—232	10
35	32	இடைக்குன்றூர் கிழார்	106	233—6	4
36	33	இடையன் சேந்தன் கொற்றனார்	108	237	1
37	34	,, நெடுங் கீரனார்	109	238	1
38	240	இதயங் கண்ணனார் (தாயங் கண்ணனார்) எருக்காட்டூர்	671	1303—13	11
39	35	இம்மென் கீரனார்	109	239	1
40	36	இரணிய முட்டத்து - பெருங் குன்றூர் - பெரும் கவுசிகனார்	110	240	1
41	37	இருங்கோக் கண்ணனார் (இருங்கோள்) ஒல்லையாயன் செங்கண்ணனார்	128	241	1
42	38	இருந்தையூர்—கொற்றன் புலவன்	129	242	1
43	317	இரும் பிசிர் ஆந்தையார்	989	1707—12	6
44	39	இரும் பிடர்த் தலையார்	129	243	1
45	49	இள எயினனார்	149	277	1
46	42	இள நாகனார்	140	261—3	3
47	45	இளம் புல்லூர்க் காவிதி	145	272	1
48	46	இளம் பூதனார்	146	273	1
49	48	இளம் போதியார்	149	276	1
50	50	இறங்கு குடிக் குன்றநாடன்	150	278	1
51	52	இனிச் சந்த நாகனார்	151	280	1
52	54	உகாய்க்குடி கிழார் (உப்பூரி குடிகிழார்)	155	288	1

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டுஎண்	
53	56	உமட்டூர் / உரூடூர் கிழார்மகனார் பரங்கொற்றனார்	157	291	1
54	57	உம்பற்காட்டு இளங்கண்ணனார்	157	292	1
55	58	உருத்திரனார்	158	293	1
56	114	உரோடகம் / உரகடம் கவுணியன் சேந்தன் கந்தரத்தனார்	347	720—7	8
57	59	உலோச்சனார்	158	294—328	35
58	60	உவர்க்கண்ணூர் புல்லங்கீரனார்	176	329	1
59	63	உறையூர் இளம்பொன் வாணிகனார்	178	332	1
60	64	,, ஏணிச்சேரி முடமோசியார்	178	333—45	13
61	65	,, கதுவாய்ச் சாத்தனார்	184	346	1
62	66	,, சல்லியங் குமரனார்	185	347	1
63	67	,, சிறுகந்தனார்	185	348	1
64	68	,, பல்காயனார்	185	349	1
65	350	,, பொத்தியார்	1075	1924—8	5
66	69	,, மருத்துவன் தாமோதரனார்	186	350—4	5
67	70	,, முதுகண்ணன் சாத்தனார்	189	355—60	6
68	71	ஊட்டியார்	193	361—2	2
69	73	ஊன்பொதி பசுங்குடையார்	195	364—7	4
70	74	எயிற்றியனார்	198	368	1
71	75	எயினந்தையார்	198	369	1
72	41	எயினந்தையார் மகனார் இளங்கீரனார்	131	245—60	16
73	76	எருமை வெளியனார்	199	370—2	3
74	77	,, ,, மகனார் கடலனார்	200	373	
75	78	எழூம்பன்றி நாகன் குமரன் குமரனார்	201	374—5	2
76	79	ஐயாதி சிறுவெண் தேரையார்	203	376	1

Digitized by RMRL

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம் பக்கம்	ஆதாரம் பாட்டு எண்	பாட்டு மொத்தம்
77	80	ஐயூர் (உறையூர்) முடவனார்	203	377—86	10
78	81	,, மூலங்கிழார்	208	387	1
79	82	ஒக்கூர் மாசாத்தனார்	209	388—9	2
80	84	ஒருசிறைப் பெரியனார்	213	398—400	3
81	85	ஒரூஉத்தனார் (ஒரூஉ-தத்தனார்)	215	401	1
82	88	ஓதலாந்தையார்	217	406—508	103
83	89	ஓரம்போகியார்	241	509—618	110
84	90	ஓரிற்பிச்சையார்	271	619	1
85	91	ஓரேர் உழவர்	272	620	1
86	93	கங்குல் வெள்ளத்தார்	298	680	1
87	94	கச்சிப்பேட்டு இளம் தச்சனார்	,,	681	1
88	95	,, காஞ்சிக் கொற்றனார்	299	682—3	2
89	96	,, பெருந் தச்சனார்	300	684—5	2
90	97	கடம்பனூர்ச் சாண்டிலியன்	301	686	1
91	98	கடலூர்ப் பல் கண்ணனார்	,,	687	1
92	99	கடியலூர் உருத்திரங் கண்ணனார்	302	688—691	4
93	100	கடுந்தொடைக் காவினார்	328	692	1
94	101	கடுந்தோள் காவீரன்	,,	693	1
95	103	கடுவன் இள எயினனார்	329	695—7	3
96	102	,, இள மள்ளனார்	,,	694	1
97	104	,, மள்ளனார்	337	698—701	4
98	105	கணக்காயன் தத்தனார்	339	702	1
99	106	கணியன் பூங்குன்றனார்	340	703—4	2
100		கணிமேதாவியார் (மேதையார்)—(ஆதாரம்) ஏலாதி—திணைமாலை			150
101	107	கண்ணகனார் (கண்ணன் நாகனார்)	341	705—6	2
102	108	கண்ணகாரன் கொற்றனார்	342	707	1
103	109	கண்ணன் கொற்றனார்	,,	708	1
104		கண்ணன் சேந்தனார்—(ஆதாரம்) திணைமொழி			50
105	121	கண்ணன் பாளனார் (கண்ணன் பாணனார்) கருவூர்க் கண்ணன் பாணனார்	485	991—3	3

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டெண்	
106	116	கயத்தூர் கிழார்	466	963	1
107	117	கயமனார் (கையனார்)	467	964—86	23
108	118	கருங்குழல் ஆதனார்	479	987—8	2
109	119	கரும்பிள்ளை பூதனார்	480	989	1
110	87	கருவூர் ஓதஞானி	217	404—5	2
111	110	கருவூர் கண்ணன் புல்லனார்	343	709—10	2
112	113	,, கதப் பிள்ளை (கந்தப் பிள்ளையார்)	345	715—19	5
113	122	,, கதப்பிள்ளை சாத்தனார்	487	994—6	3
114	123	,, கலிங்கத்தார்	489	997	1
115	120	,, கிழார்	485	990	1
116	124	,, கோசனார்	489	993	1
117	125	,, சேரமான் சாத்தன்	490	999	1
118	126	,, நன்மார்பனார்	,,	1000	1
119	127	,, பவுத்திரனார்	491	1001	1
120	128	,, பூதஞ்சாத்தனார்	,,	1002	1
121	129	,, பெரும் சதுக்கத்துப் பூதநாதனார்	492	1003	1
122	130	கல்பொரு சிறு நுரையார்	,,	1004	1
123	131	கல்லாடனார் I	493	1005—18	14
124	132	கவை மகன்	502	1019	1
125	133	கழாஅர் தலையார்	503	1020—5	6
126	134	,, கீரன் எயிற்றியனார்	506	1026	1
127	136	கழைதின் யானையார்	511	1035	1
128	351	களவழி பாடிய பொய்கையார் (ஆழ்வார்,—(ஆதாரம்) களவழி—இன்னிலை }	1077	1929—31	3
129	137	கள்ளிக்குடி பூதம் புல்லனார்	511	1036	1
130	138	கள்ளில் ஆத்திரையனார்	512	1037—9	3
131	140	காசிபன் கீரன்	522	1052	1
132	141	காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்	,,	1053	1
133	142	காப்பியம் சேந்தனார்	523	1054	1
134	143	காப்பியாற்றுக் காப்பியனார்	524	1055—64	10
135	144	காமஞ்சேர்குளத்தார்	531	1065	1
136		காரியாசான்—(ஆதாரம்) சிறுபஞ்ச மூலம் }			

Digitized by RMRL

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டுஎண்	
137	147	காவட்டனார் (அந்துவன் கீரனைப் பாடியவர்)	533	1068—9	2
138	149	காவன் முல்லைப் பூக்கரத்தனார் (பூதனார்)	535	1073—8	8
139	150	காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்	539	1079	1
140	151	,, காரிக்கண்ணனார்	540	1080—9	10
141	152	,, செங்கண்ணனார்	546	1090—2	3
142	153	,, சேந்தன் கண்ணனார்	548	1093	1
143	154	,, பொன் வாணிகன் மகனார் நப்பூதனார்	,,	1094	1
144	155	கிடங்கில் காவிதி கீரங் கண்ணனார்	552	1095	1
145	156	,, ,, பெருங் கொற்றனார்	,,	1096	1
146	157	,, குலபதி நக்கண்ணனார்	553	1097	1
147	158	கிள்ளி மங்கலங்கிழார்	,,	1095-1101	4
148	159	,, ,, மகனார் சேர கோவனார்	554	1102	1
149	160	கீரங்கீரனார்	555	1103	1
150	162	குடபுலவியனார்	558	1105—6	2
151	163	குடவாயில் கீரத்தனார்	560	1107—24	18
152	164	குட்டுவன் கண்ணனார்	569	1125	1
153	165	,, கீரனார்	570	1126	1
154	167	குதிரைத் தறியனார்	572	1129	1
155	168	குப்பைக் கோழியார்	573	1130	1
156	171	குழற்றத்தனார்	583	1142	1
157	172	குளம்பனார்	,,	1143	1
158	173	குளம்பாதாயனார்	584	1144	1
159	176	குறிஇறையார்	585	1147	1
160	177	குறுங்கீரனார்	586	1148	1
161	178	குறுங்குடி மருதனார்	,,	1149—50	2
162	179	குறுங்கோழியூர் கிழார்	587	1151—3	3
163	180	குன்றம்பூதனார்	591	1154—5	2
164	181	குன்றியனார்	595	1156—65	10
165	182	குன்றூர் கிழார் மகனார் கண்ணத்தனார்	599	1166—7	2

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டு எண்	
166	183	கூகைக்கோழியார்	600	1168	1
167	185	கூடலூர் பல்கண்ணனார்	603	1173	1
168	186	கூவன்மைந்தன்	,,	1174	1
169	187	கூற்றங்குமரனார்	604	1175	1
170	189	கொடிமங்கலத்து வாதுளி			
		நற்சேந்தனார்	605	1177—8	2
171	292	கொடியூர் (குடியூர்) கிழார்			
		மகனார் நெய்தற்றத்தனார்	864	1507—9	3
172	190	கொட்டம்பலவனார்	607	1179	1
173	191	கொல்லன் அழிசி	,,	1180—3	4
174	192	கொல்லிக்கண்ணன்	608	1184	1
175	193	கொள்ளம்பக்கனார்	609	1185	1
176	194	கொற்றங் கொற்றனார்	,,	1186—7	2
177	195	கோகுள முற்றனார்	611	1188—9	2
178	196	கோடை பாடிய பெரும்			
		பூதனார்	,,	1190	1
179	198	கோட்டியூர் நல்லாந்தையார்	612	1192	1
180	199	கோண்மா நெடுங்கோட்டனார்			
		(கோட்டனார்)	613	1193	1
181	201	கோவர்த்தனார்	616	1201—2	2
182	202	கோவூர் கிழார்	617	1203—19	17
183	203	கோவேங்கைப்			
		பெருங்கதவனார்	628	1220	1
184	204	கோழிக் கொற்றனார்	629	1221	1
185	205	கோழியூர் கிழார் மகனார்			1
		செழியனார்	,,	1222	1
186	207	சங்க வருணர் என்னும்			
		நாகரியார்	633	1229	1
187	209	சல்லியங் குமரனார்	634	1231	1
188	210	சாகலாசனார்	635	1232—3	2
189	211	சாத்தந்தையார்	636	1234—8	5
190	213	சிறு மோலிகனார்	639	1240	1
191	214	சிறுவெண் தேரையார்	,,	1241	1
192	215	சிறைக்குடி ஆந்தையார்	640	1242—50	9
193	219	செம்புலப்பெயல் நீரார்	650	1264	1
194	220	செயலூர் இளம்பொன்			
		சாத்தன் கொற்றனார்	651	1265	1

Digitized by RMRL

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டுஎண்	
195	221	செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன்	651	1266	1
196	222	செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார்	652	1267—71	5
197	223	செல்லூர் கோசிகன் கண்ணனார்	654	1272	1
198	224	சேந்தன் கண்ணனார்	655	1273—4	2
199	226	,, கீரனார்	659	1282	1
200	228	சேரமான் இளங்குட்டுவன்	660	1284	1
201	227	,, எந்தை — சேரமான் அந்தையார் — அந்துவன் சேரல்	,,	1283	1
202	229	,, கணைக்கால் இரும்பொறை	661	1285	1
203	166	,, குண்டுகட் பாழியாதன் - செல்வக் கடுங்கோ	570	1127—8	2
204	197	,, கோட்டம்பலத்துத் துஞ்சியவன்	612	1191	1
205	230	,, ,, மாக்கோதை— கோட்டம்பலவனார்	661	1286	1
206	315	,, பாலை பாடிய பெருங்கடுங்கோ	939	1638-1705	68
207	400	,, மருதம் பாடிய இளங்கடுங்கோ-நெடுங்கோ	1128	2021—3	3
208	421	,, முடங்கிக் கிடந்த நெடுஞ் சேரலாதன்	1258	2174	1
209	43	சோழன் இளந்திரையன் (தொண்டைமான்)	141	264—7	4
210	232	,, குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்	663	1289	1
211	200	,, கோப்பெருஞ் சோழன்	613	1194-1200	7
212	233	,, நலங்கிள்ளி	663	1290—1	2
213	134	,, நல்லுருத்திரன்	664	1292	1
214	412	,, மாவளத்தான்	1249	2155	1

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டுஎண்	
215	457	சோழன் வீரை வெளியன் தித்தன் — தித்தன், மாவெண் தித்தன் — வீரைவெளியன்	1302	2240	1
216	231	சோழநாட்டு முகையலூர் சிறுகருந்தும்பியார்	662	1287—8	2
217	235	தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்	665	1293	1
218	236	,, பொற்கொல்லன் வெண்ணாகனார்	666	1294—9	6
219	238	தாமப்பல் கண்ணனார்	670	1301	1
220	242	திப்புத் தோளார்	678	1315	1
221	243	திருத்தாமனார்	,,	1316	1
222	244	தீன்மதி நாகனார்	680	1317	1
223	245	தும்பிசேர் கீரனார்	,,	1318—24	7
224	246	துறைக்குறுமாவில் பாலங் கொற்றனார்	683	1325	1
225	247	துறையூர் ஓடைகிழார்	,,	1326	1
226	248	தூங்கல் ஓரியார்	684	1327—9	3
227	249	தேய்புரி பழங் கயிற்றினார்	685	1330	1
228	250	தேரதரன்	686	1331	1
229	253	தொடித்தலை விழுத்தண்டினார்	687	1334	1
230	254	தொண்டி ஆமூர் சாத்தனார்	688	1335	1
231	279	நண்பகலூர் சிறுமேதாவியார்	850	1478—9	2
232	259	நப்பண்ணனார்	734	1386	1
233	260	நப்பாலத்தனார்	738	1387—8	2
234	261	நம்பி குட்டுவன்	739	1389—93	5
235	262	நரிவெரூஉத்தலையார்	741	1394—7	4
236	263	நரைமுடி (நிரைமுடி) நெட்டையார்	742	1398	1
237	264	நல் அச்சுதனார்	743	1399	1
238	266	நல் அழிசையார்	803	1440—1	2
239	,,	நல் ஆதனார் (திரிகடுகம்)			
240	267	நல் ஆவூர் கிழார் (நல்லார் பூரன் கிழார்)	807	1442—3	2
241	268	நல் இறையனார்	811	1444	1

Digitized by RMRL

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டெண்	
242	271	நல் எழினியார்	838	1463	1
243	273	நல் விளக்கனார்	844	1465	1
244	274	நல் வெள்ளியார் (நல் ஒளியார்)	,,	1466—9	4
245	276	நல் சேந்தனார்	848	1475	1
246	270	நல்லூர் சிறுமேதாவியார்	838	1462	1
247	277	நற்றங் கொற்றனார்	849	1476	1
248	282	நாகம் போத்தன்	857	1493	1
249	283	நாமலார் மகன் இளங் கண்ணன்	858	1494	1
250	284	நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்	,,	1495	1
251	285	நெடுங்கழுத்துப் பரணர்	859	1496	1
252	291	நெய்தற் சாத்துய்த்த ஆவூர் கிழார்	863	1506	1
253	293	நொச்சி நியமம் கிழார்	865	1510—4	5
254	294	நோய்பாடியார் (நொய்ப்பாடியார்)	868	1515	1
255	295	பக்குடுக்கை நன்கணியார்	,,	1516	1
256	296	படுமரத்து மோசி கீரனார்	869	1517—9	3
257	297	,, மோசி கொற்றனார்	870	1520	1
258	298	பதடி வைகலார்	,,	1521	1
259	299	பதுமனார்	,,	1522	1
260	301	பராயனார்	921	1608	1
261	302	பரூஉமோவாய்ப் பதுமனார்	,,	1609	1
262	303	பறநாட்டுப் பெருங்கொற்றனார்	922	1610	1
263	305	பாண்டரங் கண்ணனார்	923	1612	1
264	16	பாண்டியன் அறிவுடை நம்பி	66	175—8	4
265	306	,, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்	924	1613	1
266	55	,, உக்கிரப்பெருவழுதி	155	289—90	2
267	307	,, எனாதி நெடுங்கண்ணனார்	924	1614—5	2
268	86	,, ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்	215	402—3	2

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம் பக்கம்	ஆதாரம் பாட்டுஎண்	பாட்டு மொத்தம்
269	47	பாண்டியன் கடலுண் மாய்ந்த இளம்பெரு வழுதி—இளம் திருமாறன்	146	274—5	2
270	308	,, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்	925	1616	1
271	272	,, நல்வழுதி	840	1464	1
272	309	பாண்டியன் பன்னாடு தந்த மாறன் வழுதி	926	1617—9	3
273	340	,, பெருவழுதி	1033	1783—4	2
274	,,	,, மதிவாணன் (நாடகத் தமிழ் நூல் வசைக்கூத்து)			
275	423	,, முடத்திருமாறன் III	1267	2176—7	2
276	311	பாரதம் பாடிய பெருந்தேவனார் II	927	1620—4	5
277	313	பார் காப்பான்	928	1626	1
278	316	பாவைக் கொட்டிலார்	988	1706	1
279	320	பிரான் சாத்தனார்	993	1515	1
280	321	புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர் கிழான்	,,	1716	1
281	322	புல்லாற்றூர் எயிற்றியனார்	994	1717	1
282	280	புறத்திணை நன்னாகனார்	851	1480—4	5
283	324	பூங்கண்ணன்	996	1721	1
284	325	பூதங்கண்ணனார்	,,	1722	1
285	327	பூதம் புல்லனார்	997	1724	1
286	328	பூதனார் (பூதத் தாழ்வார்)	,,	1725	1
287	329	பூதன் தேவனார்	998	1726—7	2
288	3	பெண்புலவர் அஞ்சில் அஞ்சியார்	9	3	1
289	2	,, அஞ்சில் ஆந்தை மகள் நாகையார்	8	2	1
290	19	,, ஆதிமந்தியார் Wife of ஆட்டனத்தி	68	181	1
291	72	,, ஊண்பித்தை	195	363	1

Digitized by RMRL

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டுஎண்	
292	83	பெண் புலவர் ஒக்கூர் மாசாத்தியார்	210	390—7	8
293	92	,, ஔவையார் I	272	621—79	59
294	281	,, கச்சிப்பேட்டு நன்னாகையார்	855	1485—92	8
295	135	,, கழார்அர் கீரன் எயிற்றியார்	507	1027—34	8
296	148	,, காவற்பெண்டு (காதற் பெண்டு)	534	1070	1
297	170	,, குமிழிஞாழலார் நப்பசலையார்	582	1141	1
298	174	,, குறமகள் இளஎயினி	584	1145	1
299	175	,, ,, குறி எயினி	585	1146	1
300	139	,, சிறுகாக்கை பாடினியார் நச்செள்ளையார்	513	1040—51	12
301	241	,, தாயங்கண்ணியார்	678	1314	1
302	312	,, பாரி மகளிர்	928	1625	1
303	323	,, பூங்கண் உத்திரையார்	995	1718—20	3
304	326	,, பெருங்கோப் பெண்டு w/o ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்	996	1723	1
305	342	,, பேய்மகள் இளஎயினி	1058	1890	1
306	356	,, பெருங்கோழிநாய்கன் மகள்நக்கண்ணையார்	691	1342—7	6
307	348	,, பொதும்பில் கிழார் மகளார் வெண் கண்ணியார்	1034	1921—2	2
308	349	,, பொதும்பில் புல்லாளங் கண்ணியார்	1075	1923	1
309	353	,, பொன் மணியார்	1081	1935	1
310	357	,, போந்தைப் பசலையார்	1083	1941	1
311	258	,, மதுரைக் காமக்கணி நப்பசலையார்	734	1385	1
312	414	,, மாறோகத்து நப்பசலையார்	1250	2157—64	8

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம் பக்கம்	ஆதாரம் பாட்டு எண்	பாட்டு மொத்தம்
313	415	பெண் புலவர் மாற்பித்தியார்	1255	2165—6	2
314	442	,, வருமுலை ஆரித்தி (ஆரியத்தி)	1259	2215	1
315	460	,, வெண்ணிக் குயத்தியார்	1304	2244	1
316	462	,, வெண்பூதியார்	1305	2246—8	3
317	463	,, வெண்மணிப்பூதி	1306	2249	1
318	466	,, வெள்ளிவீதியார்	1307	2252—64	13
319	330	பெருங்கண்ணனார்	999	1728—30	3
320	331	பெருங்குன்றூர் கிழார்	1000	1731—51	21
321	332	பெருங் கவுசிகனார்	1015	1752—3	2
322	334	பெருஞ்சித்திரனார்	1016	1755—64	10
323	337	பெருந்தோள் குறுஞ்சாத்தன்	1031	1777	1
324	338	பெரும்பதுமனார்	,,	1778—81	4
325	339	பெரும்பாக்கன்	1033	1782	1
326		பெருவாயின் முள்ளியார் (ஆதா.) ஆசாரக்கோவை			
327	341	பேயனார் (பேயாழ்வார்)	1034	1785-1839	105
328	345	பேரெயில் முறுவலார்	1072	1917—8	2
329	346	பொதுக்கயத்துக் கீரந்தை	1073	1919	1
330	347	பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணனார்	,,	1920	1
331	352	பொருந்தில் இளங்கீரனார்	1079	1932—4	3
332	354	பொன்முடியார்	1081	1936—8	3
333	355	பொன்நாகன்	1082	1939	1
334	358	மடல்பாடிய மாதங்கீரனார்	1084	1942—3	2
335	359	மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் அம்மள்ளனார்	1085	1944—56	13
336	360	,, அறுவை வாணிகன் இளவேட்டனார்	1092	1957—68	12
337	361	,, ஆசிரியர் கோடங்கொற்றனார்	1099	1969	1
338	24	,, ஆறுலாவியநாட்டு ஆலம்பேரி சாத்தனார்	77	198—205	8
339	362	,, இளங்கண்ணி கவுசிகனார்	1099	1970	1
340	363	,, இளங்கவுசிகனார்	,,	197	1

Digitized by RMRL

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம் பக்கம்	ஆதாரம் பாட்டுஎண்	பாட்டு மொத்தம்
341	364	மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்	1100	1972—4	3
342	325	,, எழுத்தாளன் சேந்தன் பூதனார்	656	1275—81	7
343	365	,, ஓலைக்கடையத்தார் கண்ணன் புகுதராயத்தனார்	1102	1975	1
344	366	,, ,, நல்வெள்ளையார்	1103	1976—7	2
345	367	,, கடையத்தார் மகன் வெண்ணாகனார்	1104	1978	1
346	368	,, கணக்காயனார்	,,	1979—83	5
347	257	,, ,, மகனார் நக்கீரனார்	694	1348—84	37
348	369	,, கண்டரதத்தனார்	1107	1984	1
349	370	,, கண்ணத்தனார்	,,	1985—6	2
350	111	,, கண்ணனார்	344	711—12	2
351	112	,, கதக்கண்ணனார்	345	713—14	2
352	371	,, கவுணியன் பூதத்தனார்	1108	1987	1
353	372	,, கள்ளில் கடையத்தன் வெண்ணாகனார்	1109	1988—9	2
354	373	,, காமக்கணி நப்பாலத்தனார்	1110	1990	1
355	404	,, காஞ்சிப் புலவன் மாங்குடி மருதனார்—மாங்குடி கிழார்	1195	2106—78	13
356	374	,, காருலவியங் கூத்தனார்	1111	1991	1
357	184	,, கூடலூர் கிழார் (முதுமொழிக்காஞ்சி)	601	1169—72	4
358	216	,, கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் (கந்தர் அருகன்)	643	1251—60	10
359	376	,, கொல்லன்புல்லன்	1112	1993	1
360	377	,, ,, வெண்ணாகனார்	,,	1994—5	2
361	378	,, சுள்ளம் போதனார்	1113	1996	1
362	217	,, செங்கண்ணனார்	648	1261—2	2
363		,, கண்ணன் கூத்தனார் (ஆதாரம்) (கார் நாற்பது)			

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம் பக்கம்	ஆதாரம் பாட்டு எண்	பாட்டு மொத்தம்
364	379	மதுரை தத்தங்கண்ணனார்	1114	1997	1
365	380	,, தமிழ்க் கூத்தன் நாகன் தேவனார்	1115	1998	1
366		,, தமிழ் ஆசிரியன் மகன் பூதன் சேந்தனார் (ஆதா.) இனியவை நாற்பது			
367	381	,, தமிழ்க் கூத்தனார்	1116	1999	1
368	382	,, படைமங்க மன்னியார்	,,	2000	1
369	44	,, பண்டவாணிகன் இளம் தேவனார்	143	268—71	4
370	383	,, பாலாசிரியன் சேந்தன் கொற்றனார்	1117	2001	1
371	384	,, ,, நப்பாலனார்	,,	2002	1
372	385	,, ,, நற்றமனார்	1118	2003	1
373	386	,, புல்லங் கண்ணனார்	1119	2004	1
374	387	,, பூதன் இளநாகனார்	,,	2005	1
375	388	,, பூவண்டநாகன் வேட்டனார்	1120	2006	1
376	389	,, பெருங்கொல்லன்	,,	2007	1
377	390	,, பெருமருதனார்	1121	2008	1
378	391	,, பெருமருது இளநாகனார்	,,	2009	1
379	343	,, பேர் ஆலவாயார் (அறிவுடை அரனார்)	1058	1891—6	6
380	392	,, போத்தனார்	1122	2010	1
381	393	,, மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்	1123	2011—2	2
382	394	,, மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்	1124	2013—5	3
383	395	,, மருதங்கிழார் மகனார் இளம்போத்தன்	1125	2016	1
384	396	,, வேள் ஆசான்	1126	2017	1
385	397	மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்	1126	2018	1
386	398	,, பட்டினத்துச் சேந்தன் குமரனார்	1127	2019	1

Digitized by RMRL

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம் பக்கம்	ஆதாரம் பாட்டுஎண்	பாட்டு மொத்தம்
387	399	மருங்கூர் கிழார் பாகை சாத்தன் பூதனார்	1127	2020	1
388	401	மருதன் இளநாகனார்	1130	2024-2102	79
389	402	மலையனார்	1194	2103	1
390	403	மள்ளனார்	,,	2104—5	2
391	408	மாமூலனார்	1228	2122 – 51	30
392		மாறன் பொறையனார் (ஆதா.) ஐந்திணை ஐம்பது			
393	413	மாரோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார்	1249	2156	1
394	416	மிளைக்கந்தன்	1255	2167	1
395	275	மிளைகிழான் நல்வேட்டனார்	846	1470—4	5
396	417	மிளைப்பெருங்கந்தன்	1256	2168—70	3
397	418	மிளைவேள் தித்தன்	1257	2171	1
398	419	மீனெறி தூண்டிலார்	,,	2172	1
399	420	முக்கல் ஆசான் நல்வெள்ளை [யார்	,,	2173	1
400	422	முடத்தாமக்கண்ணியார்	1259	2175	1
401	424	முதுகூத்தனார்	1267	2178—86	9
402	425	முதுவெங்கண்ணனார்	1271	2187	1
403	426	முப்பேர் நாகனார்	1272	2188	1
404	428	முள்ளியூர் பூதியார்	1273	2190	1
405		முன்றுறை அரையனார் (ஆதா.) பழமொழி			
406	429	மூலங்கீரனார்	1274	2191	1
407		மூவாதியார் (ஆதா.) ஐந்திணை எழுபது			
408	430	மையோடக் கோவனார்	1275	2192	1
409	431	மோசி கண்ணத்தனார்	1278	2193	1
410	434	,, கரையனார்	1233	2204	1
411	432	,, கீரனார்	1278	2194—202	9
412	433	,, கொற்றன்	1282	2203	1
413	435	,, சாத்தனார்	,,	2205	1
414	436	மோதாசனார்	1234	2206	1
415	437	வடநெடுந்தத்தனார் [ரன்	,,	2207	1
416	438	வடமவண்ணக்கன் தாமோத	1285	2208—9	2
417	344	,, பெருஞ்சாத்தனார் (பேரிசாத்தனார்)	1061	1897-1916	20

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம் பக்கம்	ஆதாரம் பாட்டுஎண்	பாட்டு மொத்தம்
418	439	வடமோதங் கிழார்	1285	2210—1	2
419	440	வண்ணக்கன் சோருமருங் குமரனார்	1287	2212	1
420	441	வண்ணப்புறக் கந்தரத்தனார்	1288	2213—4	2
421	443	வன்பரணர் (கல்லாடனார்)	1289	2216—22	7
422	444	வாடாப்பிரமந்தன்	1293	2223	1
423	445	வாயிலான் தேவன்	1294	2224—5	2
424	446	வாயில் இளங்கண்ணன்	,,	2226	1
425	448	விட்டகுதிரையார்	1295	2228	1
426	449	விரிச்சியூர் நன்னாகனார்	,,	2229	1
427	450	விரியூர் நக்கனார்	1296	2230	1
428	451	வில்லக விரலினார்	,,	2231	1
429	452	விழிக்கட்பேதை பெருங் கண்ணனார்	1297	2232	1
430		விளம்பி நாகனார் (ஆதா.) நான்மணிக்கடிகை			
431	453	விற்றூற்று மூதெயினனார்	1297	2233—6	4
432	454	,, வண்ணக்கந் தத்தனார்	1300	2237	1
433	455	வினைத்தொழில் சோகிரனார்	,,	2238	1
434	456	வீரை வெளியனார்	1301	2239	1
435	458	வெண்கண்ணனார்	1302	2241—2	2
436	459	வெண்கொற்றன்	1303	2243	1
437	461	வெண்பூதன்	1304	2245	1
438	464	வெள்ளாடியனார் (வெள்வட்டியார்)	1306	2250	1
439	467	வெள்ளெருக்கிலையார்	1312	2265—6	2
440	468	வெள்ளைக்குடி நாகனார்	1313	2267—9	3
441	470	வெறியாடிய காமக்கண்ணியார் (பெண் புலவர்)	1316	2271—5	5
442	471	வேட்ட கண்ணன்	1319	2276	1
443	472	வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன்	,,	2277	1
444	473	,, குமரனார்	1320	2278—9	2
445–449		குறிப்பு: புலவர்கள் பெயர்கள் கிடைக்கவில்லை. கிடைத்த போது சேர்த்துக்கொள்ளப் படும்.			

வரிசை எண்	சமாச எண்	பெயர்	ஆதாரம்		பாட்டு மொத்தம்
			பக்கம்	பாட்டு எண்	
A		**ஆசிரியர் பெயர் காணாப் பாடல்கள்**			
		(பெயர்கள் கிடைத்தபோது மீதியிருக்கும் ஐந்து பேர் களில் சேர்த்துக்கொள்ளப் படும்.)			
	1	அகநானூறு	1321	2280—2	3
	2	குறுந்தொகை	1322	2283—92	10
	3	நற்றிணை	1326	2293-2348	56
	4	பதிற்றுப்பத்து	1350	2349—54	6
	5	பரிபாடல்	1352	2355—67	13
	6	புறநானூறு	1362	2368—81	14
	7	கைந்நிலை			
B		**கடைச்சங்க காலத்தில் வாழ்ந்திருந்தும் சங்கத்தில் சேராத புலவர்கள்**			
	1	இளங்கோ அடிகள்— சிலப்பதிகாரம்			
	2	திருத்தக்க தேவர்— சிந்தாமணி			
	3	தோலாமொழித் தேவர்— சூடாமணி			
	4	கொங்குவேளிர்— உதயணன் காதை			
	5	திருவள்ளுவர்— திருக்குறள்			
	6	யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை. (ஐங்குறுநூறு தொகுத்தவன்)			
	7	திருமூலர்—திருமந்திரம்			

(5) **நூல்** :—தொல்காப்பியம், (2) களவியல் ["இடைச் சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம்" என்று நக்கீரர் கூறியதாகப் பேராசிரியர் தொல்—வினை—மரபு 94 உரையில் கூறுவது காண்க.]

(6) பாடப்பட்டன:—(1) முத்தொள்ளாயிரம், (2) சிற்றிசை, (3) பேரிசை, (4) வரி, (5) கூத்து, இன்னும் :

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

(1) திருமுருகாற்றுப்படை—பாடினவர் நக்கீரர் I
(2) பொருநர் ஆற்றுப்படை—முடத்தாமக்கண்ணியார்.
(3) சிறுபாண் ,, —இடைகழிநாட்டு நல்லூர் நத்தத்தனர்.
(4) பெரும்பாண் ,, } —கடியலூர் உருத்திரங்
(5) பட்டினப்பாலை } கண்ணனர்.
(6) முல்லைப்பாட்டு—காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனர் மகனர் நப்பூதனர்.
(7) மதுரைக்காஞ்சி—மாங்குடி மருதனர் என்கிற மாங்குடிகிழார் மருதனர்.
(8) நெடுநல்வாடை—நக்கீரர் I
(9) குறிஞ்சிப்பாட்டு—கபிலர் I
(10) மலைபடுகடாம்—இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கவுசிகனர்.

தொகுக்கப்பட்டன :—

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்துங் கலியோ(டு) அகம்புறமென்(று)
இத்திறத்த எட்டுத் தொகை."

Digitized by RMRL

நூல்	எண்	புலவர் எண்	தொகுத்தவர்	தொகுப்பித்தவர்
(1) நற்றிணை (9 அடி முதல் 12 அடி வரை.)	400	175		பன்னாடுதந்தபாண்டியன் மாறன் வழுதி.
(2) குறுந்தொகை (4 அடி முதல் 8 அடி வரை.)	402	205		பூரிக்கோ என்கிற பாண்டியன் நல்வழுதி.
(3) ஐங்குறுநூறு	500	5	கூடலூர்கிழார்	யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை.
(4) பதிற்றுப்பத்து	100	10		
(5) பரிபாடல்	22	13		
(6) கலித்தொகை	150	5	நல்லந்துவனார்	
(7) அகநானூறு (13 அடி முதல் 37 அடி வரை.)	400	145	உருத்திரசன்மனார்	உக்கிரப் பெருவழுதி.
(8) புறநானூறு	400	160		

7. **பாடப்பட்டோர் :**

(1) சோழன் கரிகாலன் I
(2) ஓய்மாநாட்டு நல்லியக்கோடன்
(3) தொண்டைமான் இளந்திரையன்
(4) பாண்டியன் நெடுஞ்செழியன் I
(5) ஆரிய அரசன் பிரகத்தன்
(6) நன்னன்சேய் நன்னன்
(7) உதியஞ்சேரல் ஆதன்
(8) இமயவரம்பன் நெடுஞ்சேரல் ஆதன்
(9) பல்யானை செல்கெழு குட்டுவன்
(10) களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்
(11) செங்குட்டுவன்
(12) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
(13) செல்வக்கடுங்கோ வாழியாதன்

(14) பெருஞ்சேரல் இரும்பொறை
(15) இளஞ்சேரல் இரும்பொறை
(16) யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை முதலியோர்.

8. **கவிஅரங்கேறிய அரசர் :**

மூவர் பாண்டியர். அவராவார் :

(1) பாண்டியன் மதிவாணன்
(2) ,, அறிவுடைநம்பி
(3) ,, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

9. **வரலாறு :** கடைச்சங்கம் நடைபெற்ற நான்மாடக்கூடலாகிய மதுரையை வடமதுரை என்றும், உத்தர மதுரை என்றும் களவியல் உரையில் கூறியுள்ளமை காண்க. இவ்வாறு கூறப்பட்டுள்ளமைக்குக் காரணம், இச் சங்கத்துக்கு முந்திய சங்கம் கூடலுக்குத் தென்புறமாகவும், திருப்பரங்குன்றத்தை அடுத்தும் இருந்த **தென்மதுரை**யில் நடந்ததும், அத் தென்மதுரைச்சங்கம் உள்ளபோதே கூடல் கட்டப்பட்டதும் என்க.

திருப்பரங்குன்றத்துப் பக்கம் இருந்த **தென்மதுரை**க்கு அவ்வாறு பெயர் அமையக் காரணம் என்ன என்றால், வடக்கே ஆரியாவர்த்தத்தில் (இந்துத்தானத்தில்) வடமதுரை (Muttra) என்று ஒரு நகர் பாரதகாலத்தில் கண்ணன் பிறப்பிடமாய்ப் பெயர்பெற்றிருந்தமை பாண்டியர்கள் கருதி, பாரதப்போரின் பின் அமைக்கப்பட்ட இந் நகருக்குத் **தென்மதுரை** என்று பெயரிட்டதே என்று அறியக்கிடக்கின்றது.

தலைச்சங்கம் இருந்த மதுரைக்குத் தென்மதுரை என்று பெயர் வருவானேன் என்றால், ஏழ் மதுரைநாட்டில் அந் நகரம் தென்கோடியில் இருந்தமையால் என்க.

Digitized by RMRL

இச் சங்கத்தைப்பற்றிய அகவலினும் இந்நகர் வட மதுரை என்றே குறிக்கப்பட்டுள்ளது. அவ் வகவல் வருமாறு:

"அருங்கடைச் சங்கம் இருந்தோர் யாரெனில்
சிறுமே தாவியார், சேந்தம் பூதனார்
அறிவுடை அரனார், பெருங்குன் றூர்கிழார்,
பாடல் சான்ற இளந்திரு மாறன்,
கூடலா சிரியன் நல்லந் துவனார்,
பரவுதமிழ் மதுரை மருதனிள நாகனார்,
அவிர்கணக் காயர், நவில்நக் கீரர்,
கீரங் கொற்றர், கிளர்தே னூர்கிழார்,
ஒரும் கலைமண லூரா சிரியர்,
கல்லூர்ப் புளியங் காய்ப்பெரும் சேந்தர்,
செல்லூ ராசிரியர், முண்டம் பெருங்குமரர்,
முசிறி ஆசிரியர் நீல கண்டனார்,
அசைவிரி குன்றத்து ஆசிரியர் அன்றி
நாத்தலம் கணிக்கும் சீத்தலைச் சாத்தனார்,
முப்பா லுணரும் உப்பூரி குடிகிழார்,
உருத்திர சன்மர், மருத்துவ ராகிய
நாம நாற்கலைத் தாமோ தரனார்,
மாதவள நாகரோடு, ஓதுமிள நாகர்,
கடியும் காமப் படியங் கொற்றனார்,
அருஞ்செய லூர்வாழ் பெருஞ்சுவ னாருடன்,
புவிபுகழ் புலமைக் கபிலர், பரணர்,
இன்னாத் தடித்த நன்னாகர், அன்றியும்
ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்துக்கு
உரையிடை யிட்ட விரகர்கல் லாடர்,
போர்மலை முணரும் மாமூலர், தம்மொடு
விச்சை கற்றிடும் நச்செள்ளை யார்முதல்
தேனூற் றெடுப்பச் செந்தமிழ் பகர்ந்தோர்
நானூற் றுவர்முதல் நாற்பத்தொன் பதின்மர்,
பீடுபெற உலகில் பாடிய செய்யுள்
மூத்தொள் ளாயிரம், நற்றிணை, நெடுந்தொகை,

அகநா னூறு, புறநா னூறு,
குறுந்தொகை, சிற்றிசை, பேரிசை, வரியொடு,
அறம்புகல் பதிற்றுப்பத்து, ஐம்பதோ டிருபான்
பெரும்பரி பாடலும், குறுங்கலி நூற்றைம்
பதுமுதல் ஆகிய நவையறுங் கலைகள்
அக்காலத் தவர்க்கு அகத்தியம், அதனோடு
மிக்காம் இலக்கணம் விளங்குதொல் காப்பியம்
எண்ணூற் கேள்வியர் இருந்தது ஆயிரத்து
எண்ணூற் றைம்பது வருடம் என்ப ;
இடர்ப்படா திவர்களைச் சங்கம் இரீஇயினோர்
முடத்திரு மாறன் முதலா உக்கிரப்
பெருவழுதி யீறாப் பிறங்குபாண் டியர்கள்
நரபதிக ளாகும் நாற்பத்தொன் பதின்மர் ;
இவருட் கவியரங் கேறினர் மூவர் ;
புவியிற் சங்கம் புகழ்வட மதுரை
ஆதிமுச் சங்கத்து அருந்தமிழ்க் கவிஞர்
ஓதிய செய்யுள் உலவாப் பெரும்பொருள்
வாளாக் கேட்கும் தோளாச் செவிக்கும்
கேட்டும் தெரியா ஓட்டைநெஞ் சினுக்கும்
நுழையா ; ஆதலின் நுழைபுலன் தன்னொடும்
விழைவார்க் குரைக்க வேண்டுவர் தெரிந்தே.”

“தொளாயிரத் தைம்பது வருடம் என்ப” என்றும் பாடம். சிலர் சங்கம் 1850 ஆண்டுகள் நடைபெற்ற தென்றும், சிலர் 1950 ஆண்டுகள் நடைபெற்றதென்றும் கூறுவர்.

மேலே காட்டிய அகவலில் கடைச்சங்கம் நடைபெறுமல் அழிந்தபின் வாழ்ந்துவந்த புலவர்களின் பெயர்களும் கூறப்பட்டுள்ளன.

காலவரையறையும், சரித்திர வரலாறும், சங்க வரலாறும் அறியாத பிற்காலத்தில், அஃதாவது, கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிந்தியகாலத்தில் இருந்த ஒரு புலவரால்

Digitized by RMRL

இவ்வகவல் பாடப்பட்டதால் அவ்வாறு சங்க வரலாற்றுக்கு முரணாக உள்ளது தெளிமின்.

கடைச்சங்கத்துக்குக் கடைசியாக உக்கிரப்பெருவழுதி காலத்தில் தலைமைவகித்தவர் மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார். இவருக்கு முன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் II காலத்தில் தமிழ்ச்சங்கத்தில் தலைமைவகித்தவர் மாங்குடி மருதனார். இதனை,

> " ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
> மாங்குடி மருதன் தலைவ னாக
> உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
> புலவர்பா டாது வரைகஎன் நிலவரை."

என்று நெடுஞ்செழியன் II வஞ்சினம் கூறிய செய்யுளால் அறியக்கிடக்கின்றது. இவன் காலத்தில் நக்கீரர் இளம் புலவராய் இருந்து, இவன்பேரில் நெடுநல்வாடை என்னும் நூலைப் பாடியுள்ளார். இவ்வரசனுடைய காலம் கி. பி. 174 முதல் 204 வரை. நக்கீரர் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் II, உக்கிரப்பெருவழுதி இம்மூவர் காலத்திலும் வாழ்ந்தவர் ஆவர். ஆதலின், இலவந்திகைப்பள்ளித் துஞ்சியநன்மாறன் என்பவன், நெடுஞ்செழியன் II என்பவன் காலத்தில் அவனுக்குக் கீழ் பாண்டியநாட்டில் ஒரு பகுதியை ஆட்சி செலுத்திவந்தான் என்று ஏற்படுகிறது.

நக்கீரர் காலத்துச் சோழர்கள்: கிள்ளிவளவன்—நலங்கிள்ளி—காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி—இவன் மகன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவர் ஆவர்.

நக்கீரர் காலத்துச் சேரர்கள்: செங்குட்டுவன்—அவன் மகன் குட்டுவன் சேரல் என்கிற மாரிவெண்கோ—யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை.

செல்வக்கடுங்கோவாழியாதன் என்னும் சேர அரசன் நக்கீரர் காலத்துக்குச் சிறிது முற்பட்டவன். முற்பட்ட அரசர்களைப்பற்றிப் புலவர்கள் பாடும் வழக்கம் போல் செல்வக்கடுங்கோவையும் நக்கீரர் பாடியுள்ளார் என்று கொள்வதே பொருத்தம்.

இனி, புலவர் எண்ணிக்கையில் பலபேர் பலவிதமாகக் கூறுவதைச் சிறிது ஆராய்வாம்.

இறையனாரகப்பொருள் உரையில் **நக்கீரரால்** கூறப்பட்ட தொகை 449 இதுதான் சரியானது. ஏனெனின், கடைச்சங்கத்தில் கடைசிகாலத்தில் அச் சங்கத்திற்குத் தலைவராய்த் திகழ்ந்தவர் ஆனபடியால் என்க.

இதனைவிட்டு, **கனகசபை** பிள்ளை அவர்கள் புலவர்கள் எண்ணிக்கை 514 என்றும்;

"சங்க காலம்" என்ற நூலின் ஆசிரியர் ஞா. சா. துரைசாமிப் பிள்ளை 486 என்றும்;

"சங்க இலக்கியம்" என்ற நூலைத் தொகுத்த மா. பாலசுப்பிரமணிய முதலியார் 473 என்றும்;

"சங்கநூற் புலவர் அகராதி" என்னும் நூலின்படி 729 என்றும் இருக்கக் காண்கிறோம்.

இத் தொகைகளின் ஏற்றக்குறைவு, புலவர்களின் பெயர்கள் தலைதடுமாறிக்கிடப்பதாலும், தலை—இடைச் சங்கப்புலவர்களின் பெயர்களும், முதுகுடுமித் தமிழ்ச் சங்கப்புலவர்களின் பெயர்களும், திருப்பரங்குன்றத் தென் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களின் பெயர்களும் சேர்க்கப்பட்டுக் கணக்கிடப்பட்டிருப்பதாலும் ஏற்பட்டதே யாகும். அவைகளை நீக்கிக் கணக்கிட்டால் 444 புலவர்களின் பெயர்களே தேறுகின்றன. இன்னும் பல பாடல்

Digitized by RMRL

களுக்குப் புலவர்களின் பெயர்கள் தெரியாமல் இருப்ப தால், அப் புலவர்களின் பெயர்களையும் சேர்த்தால் 449 எண்ணிக்கையே கிடைக்கும். ஆகையால், புலவர்களின் எண்ணிக்கை **449** என்பதே சரியானதென்று கொள்க.

திருவிளையாடற்புராணப்படி நான்மாடக்கூடலைக் கட்டினவன் குலசேகர பாண்டியன். அவன் முதல் 72 பாண்டியர்கள், கூன்பாண்டியன் காலம்வரை அரசாண்டதாகக் கூறப்பட்டுள்ளது. கூன்பாண்டியன் சம்பந்த சுவாமி களுடைய காலத்தில் இருந்தவன். சம்பந்தருடைய காலம் கி பி **634** முதல் கி. பி. **650** வரை ஆகும். ஆதலின், கூன்பாண்டியன் காலமும் கி. பி. 650 என்று கொள்ள லாம். சாசன ஆராய்ச்சிப்படி கூன்பாண்டியன் காலம் கி. பி. **640** முதல் கி. பி. **670** வரை என்று தெரிகிறது.

கடைச்சங்க ஆரம்பகாலமாகிய கி. மு. 1715 முதல் கி. பி. 670 வரை 2385 ஆண்டுகள் ஆகின்றன.

இத்தொகையை 72 பாண்டியர்களுக்குப் பங்கிட்டால், ஒருவனுக்குச் சராசரி 33 ஆண்டுகள் ஏற்படுகின்றன. இது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதே.

கி. மு. 1715 முதல் கி. பி. 235 வரை 49 பாண்டியர் கள் அரசாண்டார்கள் என்று களவியல் உரையால் அறி கிறோம்

பாண்டியநாட்டில் வடுகக் கருநடர் ஆட்சி கி பி. **340** முதல் கி. பி. **520** வரை நடைபெற்றது

கி. பி. 235 முதல் கி. பி. 340 வரை பாண்டியநாடு நிலைகுலைந்திருந்ததால் 105 ஆண்டுகள் அரசாண்ட பாண் டியர்களின் பெயர்கள் தெரியவில்லை.

கி. பி. **520** முதல் கி. பி. **575** வரை பாண்டியநாட்டை மூர்த்திநாயனர் (பாண்டியர் வமிசத்தவர் அல்லர்) அரசாண் டார்.

கி. பி. 575-இல் பாண்டியன் கடுங்கோன் II என்கிற பாண்டிய அதிராசன் மூர்த்திநாயனருடைய உதவியின் மேல் பட்டத்துக்குவந்து அரசாட்சியை ஒப்புக்கொண்டான். கடுங்கோன் II முதல் கூன்பாண்டியன்வரை நான்கு பாண்டியர்கள் அரசாண்டுள்ளார்கள். ஆகவே, 49 + 4 = 53 பாண்டியர்கள் போக, 72-இல் மீதி **19 பாண்டியர்கள்** கி. பி. 235 முதல் கி. பி. 520 வரை 285 ஆண்டுகள் பாண்டி நாட்டில் சில சிறிய பகுதிகளை (கருநடர் ஆட்சிக்கு உட்படாத பகுதிகளை) ஆண்டுகொண்டு இருந்திருக்கவேண்டும்.

திருவிளையாடற்புராணம் ஆலாசியமான்மியம் என்னும் வடமொழிநூலை முதல்நூலாகக் கொண்டது. ஆலாசியமான்மியத்தில் பாண்டியர்களுடைய தமிழ்ப்பெயர்களை எல்லாம் வடமொழியில் மொழிபெயர்த்தோ அல்லது இடுகுறியாகவோ அதன் ஆசிரியர் பாடிவைத்திருக்கிறார். அப் பெயர்களையே திருவிளையாடற்புராண ஆசிரியர் கைக்கொண்டார். ஆதலின், உண்மைத் தமிழ்ப்பெயர்கள் இன்னவை யெனக் கண்டறிவது கடினமாயிருக்கிறது. இலங்கைப் பௌத்த சரிதமான இராஜாவளி என்னும் நூலில், கி. மு. **205**-க்கும்—கி. மு. **161**-க்கும் இடையில் இலங்கையை வென்றுகொண்ட தமிழ்நாட்டரசனாகிய **ஏலேலன்** ஆட்சியில், கல்யாணியில் அரசுபுரிந்த **திஸ்ஸா** என்பவன் காலத்தில் ஒரு பெரிய கடல்கோள் உண்டாயிற்று என்று கூறப்பட்டுள்ளது. கோடிக்கரைக்கும் இலங்கைக்கும் இருகாத தூரமே உள்ளது என்பதை நோக்க, இலங்கையின் ஒரு பகுதியை அழித்த கடல்கோள் தமிழ் நாட்டையும் சிறிது அழித்திருக்கும்.

இராசாவளிப் **பகுதி** வருமாறு: "திஸ்ஸா ராசா கல்யாணியில் அரசுபுரியும்போது கடல் 7 லீக் தூரம் கல்யாணிக்கு அப்பால் இருந்தது. கல்யாணி இலங்கையில்

Digitized by RMRL

உள்ள ஒரு நகர். திஸ்ஸா தன் மனைவியால் முறைபிறழ்ந்த நட்புடையவன் என்று ஐயுற்று திரு நான்ஸின் என்னும் பவுத்த ஆசிரியனைக் காய்ச்சிய எண்ணெய்க்கொப்பரையில் இட்டுக் கொன்றுகை, இலங்கைத் தீவைக் காத்த தேவர் வெகுண்டு பூமிமேல் கடல் பொங்கச் செய்தனர். துவாபர யுகத்து இராவணன் கொடுமையால் அவனுடைய 25 அரண் மனைகளும் அடங்கிய மன்னூர்புரத்து நிலம் கடலால் விழுங்கப் பட்டதுபோல, இப்போதும் கல்யாணியை ஆண்ட திஸ்ஸா இராசாவிற்கு உரிய ஓர் இலக்கம் ஊர்களும், 970 மீன் வலைஞர் சிற்றூர்களும், 400 முத்துக்குளிப்பார் கிராமங் களும் ஆக அவன் நிலத்தில் முக்காலேயரைக்கால் பாகம் அழிந்தது. அப்போது பலர் அக் கடல்கோளுக்குத் தப்பி ஓடியதும் உண்டு. மாதம்பை முதலிய சில ஊர்கள் இக் கடல்கோளுக்குத் தப்பின.”

ஏலேலசிங்கனுக்குத் திஸ்ஸா அரசன் கப்பம் கட்டி வந்தான் என்று இராசாவளி பக்கம் 188-இல் எழுதப்பட் டுள்ளது.

திருவள்ளுவர் கி. மு. 75 முதல் கி. பி. 36 வரை வாழ்ந்தவர் ஆவர். திருவள்ளுவருடைய காலத்தில், அஃதா வது, கி. மு. 50 முதல், கி. பி. 30 வரை கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி என்பவன் பாண்டியநாட்டில் அரசாண் டான். இவன் காலத்தில்தான் திருவள்ளுவர் உள்மந்திரத் தலைமை பூண்டு பாண்டிநாட்டில் அரசியலில் அமர்ந்திருந் தார். இவ்வரசன் இறந்தபின் திருவள்ளுவர் பாண்டி நாட்டைவிட்டுத் திருமயிலை சென்று திஸ்ஸா அரசன் காலத் தில் இருந்த ஏலேலசிங்கச் சோழனுடைய பரம்பரையில் வந்த ஏலேலசிங்கன் என்பவனுடன் நட்புப் பூண்டு திரு மயிலையில் வசித்துவந்தார். திருவள்ளுவர் காலத்தில் சோழநாட்டில் அரசுசெய்தவன் முதலாம் கரிகாலன் ஆவன்.

ஆதலின், திருவள்ளுவரை ஆதரித்த ஏலேலசிங்கன் அரசு செய்யும் உரிமையின்றி வங்க வாணிபத்தொழிலில் ஈடுபட்டிருந்தான் என்று ஏற்படுகிறது.

உக்கிரப்பெருவழுதி II காலத்தில் கடைச்சங்கத்தில் திருக்குறள் அரங்கேற்றப்பெற்றது என்று ஒரு கதை வழங்குகிறது. இஃது உண்மையன்று என்பதற்குப் பல சான்றுகள் உள. உக்கிரப்பெருவழுதி II காலத்துக்கும் திருவள்ளுவர் காலத்துக்கும் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் இடையீடாக உள்ளன.

கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதிக்கு உக்கிரப் பெரும்வழுதி என்ற பெயரும் உண்டு. அவனேதான் கானப்பேர் எயில் சிற்றரசனாகிய வேங்கைமார்பனைப் போரில் வென்றவன் என்று இப்போது ஆராய்ச்சியால் வெளியாகின்றது. இவ்வரசன்தான் தன்னுடைய உள்மந்திரத்தலைமை பூண்டிருந்த திருவள்ளுவரைத் திருக்குறளைப் பாடும்படி கேட்டுக்கொண்டது. இதனைத்,

"தப்பா முதற்பாவால் தாமாண்ட பாடலினால்
முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்—எப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்."

என்னும் கீரந்தையார் பாட்டால் அறியலாம். ஆதலால் பெயர் ஒற்றுமை கொண்டு பிற்காலப் புலவர்கள் கி. பி. 204 முதல் கி. பி. 235 வரை அரசாண்ட உக்கிரப்பெருவழுதிதான் திருவள்ளுவர் காலத்தில் இருந்தவன் எனக்கொண்டு அவ்வாறு கூறிவிட்டார்கள்.

ஆதலின், திருவள்ளுவரால் கடைச்சங்கம் முடிவு பெற்றது என்ற கதையும் பொய்யானது என்று ஏற்படுகிறது.

Digitized by RMRL

உக்கிரப்பெருவழுதி II கி. பி. 235-இல் இறந்தான். இவனுக்குப் பின் கடைச்சங்கம் அழிவுற்றது என்பது களவியல் உரையால் ஏற்படுகிறது. ஆனால் காரணம் இன்னதென்று விளங்கவில்லை. திருவள்ளுவரையும் இடைக்காடரையும் கூறுவது பொருத்தமாக இல்லை.

கி. பி. 235-க்குப்பின் பாண்டியநாடு நிலைகுலைந்து, உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டு, அமைதியின்றி இருந்ததால், கி. பி. 340-க்குப் பின்னும், கி. பி. 520-க்கு முன்னும் அரசாண்ட பாண்டியர்களின் பெயர்கள் தெரியவில்லை.

பாண்டியநாட்டில் வடுகக்கருநடர் ஆட்சி கி. பி. 340 முதல், கி. பி. 520 வரை நடைபெற்றபோதிலும், தென்பாண்டிநாடானது பாண்டியர்களிடமே இருந்தது. வடபாண்டியே வடுகக்கருநடர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. தென்பாண்டிநாட்டுக் கல்வெட்டுக்கள் வெளிப்படின் இக்காலத்து அரசர்களின் பெயர்கள் தெரியலாம்.

திரு. ரா. இராகவையங்கார் அவர்கள் "தமிழ் வரலாறு" பக்கம் 223-இல் "பராசவமுனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரதசேனாபதீயமும், நாரதரால் செய்யப்பட்ட பஞ்சபாரதீயமும் கடைச் சங்கம் இரீஇய பாண்டியருள் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணன் செய்த முதனூல்களில் உள்ள நாடகக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தியன்ற "மதிவாணர் நாடகத்தமிழ்" நூலும் என இவ்வைந்தும் இந் நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்கள் அன்றேனும், ஒருபுடை ஒப்புமைகொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரை எனக் கொள்க." என்று கூறுவதால், இவைகள் எல்லாம் கடைச் சங்ககாலத்து நூல்கள் எனக் கொள்ளக்கிடக்கின்றது.

ஆனால், "தமிழ் இலக்கிய வரலாறு," என்னும் நூலில் திரு. K. சீனிவாசம் பிள்ளை அவர்கள் பக்கம் 387-இல், "இந்திரகாளீயம், பஞ்சமரபு, பஞ்சபாரதியம், பரதசேனுபதியம், மயேச்சுரன் என்னும் சமணமுனிவரால் இயற்றப் பட்ட மயேச்சுரயாப்பு, பன்னிருபாட்டியல் முதலியன கி. பி. 11-வது நூற்றாண்டு முதல், 13-வது நூற்றாண்டு வரை உள்ள காலத்திலேயே தோன்றியிருக்கவேண்டும்," என்கிறார். இஃது அவ்வளவு பொருத்தமாக இல்லை. கடைச்சங்க காலத்தில்தான் இந் நூல்கள் தோன்றியிருக்க வேண்டும்.

Digitized by RMRL

கக. வச்சிரநந்தி தமிழ்ச்சங்கம்

(சதுர எழுத்துக்காலம்)

1. காலம்: கி. பி. 470 முதல் கி. பி. 520 வரை ஐம்பது (50) ஆண்டுகள்.

2. இடம்: திருப்பரங்குன்றத்துத் தென்மதுரை.

3. சங்கம் இரீஇயவர்: வடுகக் கருநடர் ஆட்சியில் சமண மதத்துத் தலைவர் வச்சிரநந்தி என்பவர்.

4. புலவர்:

(1) இரண்டாம் நக்கீரர் அல்லது நக்கீரதேவநாயனார்.
(2) ,, கபிலர் ,, கபிலதேவநாயனார்.
(3) ,, பரணர் ,, பரணதேவநாயனார்.
(4) ,, கல்லாடர் ,, கல்லாடதேவநாயனார்.
(5) பெருந்தேவனார் III
(6) பெருந்தேவனார் IV முதலியோர்.

5. நூல்: தொல்காப்பியம்

6. பாடப்பட்டன: (1) இரண்டாம் நக்கீரரால் கயிலை பாதி-காளத்திபாதி அந்தாதி; திருக்கண்ணப்ப தேவர் திருமறம். (2) இரண்டாம் கபிலரால் மூத்தநாயனார் இரட்டை மணிமாலை; சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை; சிவபெருமான் திருவந்தாதி. (3) இரண்டாம் பரணரால் சிவ பெருமான் திருவந்தாதி. (4) இரண்டாம் கல்லாடரால் திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

7. பாடப்பட்டோர்: விநாயகர், சிவபெருமான், திருக் கண்ணப்பர் முதலியோர்.

8. **கவியரங்கேறிய அரசர் :** தெரியவில்லை.

9. வரலாறு : கி. பி. 470-இல் வச்சிரநந்தி என்னும் சமண மதத் தலைவரால் ஒரு தமிழ்ச்சங்கம் திருப்பரங் குன்றத்துத் தென்மதுரையில் ஏற்பாடு செய்யப் பட்டு, நடந்துவந்ததாகத் திகம்பரதரிசனம் என் னும் சமணநூலில் கூறப்பட்டுள்ளது. இச் சங்கம் ஏற்பட்டதற்குக் காரணம் வருமாறு :

ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் சிலம்பு காரணமாகக் கோவலனை ஆராயாது கொல்ல, அப் பிழையினைக் கோவலன் மனைவி கண்ணகி அரசனுக்கு எடுத்துக்காட்ட, அரசன் தன் தவறினை உணர்ந்து, நனி வருந்தி, அரியணையில் இருந்தபடியே உயிர்துறக்க, அது கண்டு, அவனுடைய மனைவியும் உயிர்துறந்தாள். கண்ண கியோ கணவனை இழந்த துயரத்தாலும், நடுநிலை தவறி அரசன் ஆராயாது கோவலனைக் கொன்றதால் ஏற்பட்ட சினத்தாலும், பித்துப்பிடித்தவள்போல் மதுரைமாநகர் எங்கும் திரிந்து, "நல்லார் உளர்கொல்," "நல்லார் உளர் கொல்," "என் கணவன் கோவலன் கள்வன் அலனே," என்று கதறிக்கதறி நகரமாந்தர்க்கு உண்மையை விளக்க வும், அரசன் தான் செய்த கழுவாய் இல்லாத குற்றத்தை உணர்ந்து உடனே உயிர்துறந்ததை நகரமாந்தர் தெரிந்து, அத்தகைய நியாயமற்ற கொலைக்குக் காரணமாய் இருந்த வனை ஒறுக்க அரசனும் இல்லாமை அறிந்து, அதனைப் பொறுதுநிற்க, சிலர் அக்கொடுஞ்செயலுக்குக் காரணமாய் இருந்த பொற்கொல்லன் வீட்டுக்குச் சென்று தீயினைக் கொளுவ, அத் தீ ஆடிமாதக் காற்றின் உதவியால் நகரெங் கும் பரவிப் பெருத்த சேதத்தை விளைத்தது. நகரமாந் தருள் பல பெரியோர்களும், சங்கப்புலவர்களும் அரச

Digitized by RMRL

னில்லா நகரைவிட்டுப் போவார் ஆயினர். கடைச்சங்கத்துப் புத்தக நிலையமும் தீக்கு இரையாயிற்று.

கண்ணகி துன்பம் மீக்கூர நகரைவிட்டு நீங்கி வையைக் கரைவழியே மேற்கு நோக்கிச் சென்று சேரநாடு சேர்ந்து, செங்குன்றம் என்ற மலையின்கண் உள்ள ஓர் வேங்கை மரத்து நீழலில் "வடக்கிருந்து" உயிர் துறந்தாள்.

சங்கப்புலவருள் ஒருவரான கூலவாணிகன் சாத்தனாரும் சேரநாடு சென்று, அப்போது அரசுபுரிந்த செங்குட்டுவனிடமும், அவன் தம்பி இளங்கோ அடிகளிடமும் வசித்துவந்தார்.

ஏனைய சங்கப்புலவர்களில் பெரும்பாலோர் அவரவர்களிடம் இருந்த ஏட்டுச்சுவடிகளை எடுத்துக்கொண்டு சோழநாட்டில் ஆலஞ்சேரி அயிந்தன் என்னும் வள்ளலிடம் தங்கி இருந்தார்கள். இன்னும் சிலர் கொங்குநாடு, தொண்டைநாடுகட்குச் சென்று வசித்து வந்தார்கள்.

பாண்டிநாடோ, அரசனை இழந்தமையாலும், மதுரை மாநகரை எரியுண்டமையாலும், முன்னவனூர் கோயிலில் பூசைகள் முட்டுப்பட்டு இருந்தமையாலும், மழை இல்லாமல், வறுமை எய்தி, வெப்புநோயும் குருவும் தொடரப் பெற்றுப் பெரிதும் வருந்திற்று.

கி. பி. 144-இல் ஆடித்திங்கள் அட்டமி நாளில் அரசன் இறக்கவும், நகர் எரியுண்ணவும், நல்லோர் பலரும், புலவர்களும் ஊரை விட்டு ஏகவும் ஏற்பட்டது. இதனைக் கொற்கையில் அரசுபுரிந்துவந்த நெடுஞ்செழியன் தம்பி வெற்றிவேற் செழியன் அறிந்து, மதுரைக்கு வந்து, முடிசூடி, நன்மாறன் என்னும் பட்டத்தை ஏற்றுக்கொண்டு அரசுபுரியலானான். எனினும், நாடு பஞ்சத்தால் துன்புற்றது. மழைவளம் கரந்து வற்கடம் எய்தியது.

நன்மாறன் கி. பி. 174-இல் சித்திரமாடம் என்னும் இடத்தில் இறக்கவே, அவன் மகன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் II பட்டம் எய்தி, கி. பி. 204-வரை ஆண்டான். அவன் காலத்திலும் மழை இல்லை. வற்கடமே நீடித்தது. இவனுடைய ஆட்சியின் கடைக் காலத்தில் நாடு நல்ல நிலைமைக்கு வந்துகொண்டிருந்தது. இவனுக்கு அப்புறம் இவன் மகன் உக்கிரப்பெருவழுதி II பட்டம் எய்தினன். இவனும் கானப்பேர் எயில் கடந்த உக்கிரப்பெருவழுதியும் வேறு வேறு அரசர்கள். இவன் இரண்டாம் உக்கிரப்பெருவழுதி எனப் பெயர் பெறுவான். இவன் கூலவாணிகன் சாத்தனருக்குப்பின் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் இருந்தவன். கானப்பேர் எயில் கடந்த உக்கிரப்பெருவழுதியோ, திருக்குறள் அரங்கேறிய காலத்தில் இருந்தவன். இவனுக்குக் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி என்றும் பெயர். இவனே வேங்கை மார்பனை வென்றவன். ஔவையாரால் பாடப்பட்டோனும் இவனே.

இரண்டாம் உக்கிரப்பெருவழுதி என்பவன் நிலைகுலைந்து இருந்த தமிழ்ச்சங்கத்தை கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் கூட்டி நடத்தினன். அச் சங்கம் கி. பி. 235-இல் அவனோடு முடிவை அடைந்தது. காரணம் இன்னதென விளங்கவில்லை.

இவனுக்குப்பின் இவன் மகன் வரகுணபாண்டியன் I கி. பி. 235 முதல் கி. பி. 255 வரையிலும், அவனுக்குப் பின் அவன் மகன் அரிமர்த்தன பாண்டியன் கி. பி. 255 முதல் கி. பி. 330 வரையிலும், பின் அவன் மகன் வரகுண பாண்டியன் II கி. பி. 330 முதல் கி. பி. 340 வரையிலும் அரசாண்டார்கள். இரண்டாம் வரகுணன் காலத்தில் வடதிசைக் கருநட அரசன் களப்பிரன் என்பான் பாண்டிநாட்

டின்மீது படை எடுத்துவந்து நாட்டைக் கைப்பற்றி ஆண்டுவந்தான். களப்பிர வமிசத்து அரசர்கள் கி. பி. 520 வரை 180 ஆண்டுகள் ஆண்டார்கள்.

பெரியபுராணத்தில் கூறப்பட்ட மூர்த்திநாயனார் என்பவர் களப்பிரரை நாட்டை விட்டுத் துரத்தி, கி. பி. 520 முதல் கி. பி. 575 வரை அரசாண்டு, பின் நாட்டைப் பாண்டியருக்கே கொடுத்தார். களப்பிரரைத் துரத்துவதில் மூர்த்திநாயனாருக்குக் கூற்றுவநாயனார் உதவியாய் இருந்தார் எனத் தெரிகிறது.

சமணமதத்தைத் தழுவிய களப்பிரவமிசத்தவரான வடுகக்கருநடர் ஆட்சி கி. பி. நான்காம் நூற்றாண்டில், அஃதாவது, கி. பி. 340-இல் ஆரம்பித்து கி. பி. 520 வரை நடைபெற்றது.

களப்பிரர் ஆட்சிக்காலத்தில்தான் சமணர்கள் ஏராள மாக வடநாட்டிலிருந்து மதுரை வந்து (1) பிரான்மலை, (2) அழகர்மலை, (3) ஆனைமலை, (4) பசுமலை, (5) நாகமலை, (6) பரங்குன்றம், (7) பன்றிமலை, (8) கழுகுமலை முதலிய எட்டுக்குன்றங்களிலும் முக்கியமான ஊர்களிலும் குடியேறிச் சமணமதத்தை வளரச்செய்தார்கள்.

கி. பி. 575-இல் பட்டத்துக்குவந்த பாண்டியன் இரண்டாங் கடுங்கோனும் அவன் பின் வந்த அவனிசூளாமணி, செழியன்சேந்தன், கூன்பாண்டியன் முதலியோரும் சமண மதத்தைத் தழுவி அம் மதத்தை வளரச்செய்தார்கள்.

கருநடஅரசர்கள் ஆட்சியிலேயே கி. பி. 470-இல் சமணமதத் தலைவனாயிருந்த வச்சிரநந்தி என்பவன் சமணத்தை வளர்க்க ஒரு தமிழ்ச்சங்கம் நிறுவினான். அதில் சமணப்புலவர்களும் ஏனைய சைவப் புலவர்களும்

கலந்து தமிழை ஆராய்ந்தார்கள். சமணப்புலவர் பலர் பல தமிழ்நூல்களை யாத்தார்கள். சைவப்புலவர்களும் சிவபிரான் மேல் பல நூல்கள் யாத்தார்கள். சமணப் புலவர்களில் சிலர் சாக்கியநாயனார் போன்று சிவபத்தி மிக்கு பல நூல்களை யாத்தார்கள். கருநட அரசர்கள் வடுகர் ஆனதால் தமிழ்மொழி வளர்ச்சியில் அவர்களுக்குக் கருத்து இல்லாமற் போனபோதிலும், மதவளர்ச்சி கருதித் தமிழை வளர்த்தார்கள். இது, தற்காலம் கிறித்துவப் பாதிரிகள் தங்கள் மதவளர்ச்சி காரணமாகத் தமிழ்நூல்களை யாத்து வெளியிடுவதுபோல என்க.

இச் சமணசங்கத்தில் வளர்ச்சியுற்ற தமிழ்மொழி யானது புனிதமற்று, மணிப்பிரவாள நடை பெற்று, புத் துருக்கொண்டு, வடமொழிக் கதைகள் பல கொண்ட புராணங்கள் யாக்கப்பெற்று வளர்ந்துவந்தது.

இக்காலத்தில், கூடலில் வடமொழிப் பட்டிமண்டபம் ஒன்று ஏற்பட்டு அதில் வடமொழியும் வளர்ந்துவந்தது. வடக்கிலிருந்து வந்த சில ஆரியர்களும், மதுரைமாநகரின் கண்ணே ஆரியமதத்தைத் தழுவிய குயக்கொண்டான் போன்ற சில தமிழர்களும் அந்தச் சங்கத்தில் அமர்ந்து, வடமொழியைப் பயின்று அதனை வளர்த்தார்கள்.

குயக்கொண்டான் என்பவன் ஆரியம் நன்று, தமிழ் தீது என்று எழுதியும் பேசியும் வந்தான். அவனை ஒட்டிப் பலபேர் தமிழ்மொழியைக் கெடுக்கவும் ஏற்பாடு செய் தார்கள்.

குயக்கொண்டானுக்கும் இரண்டாம் நக்கீரருக்கும் மொழி பற்றிய வாதம் ஏற்பட, அதில் நக்கீரர் II வெற்றி பெற்றுக் கொண்டானுடைய தருக்கை அடக்கினர்.

Digitized by RMRL

அப்போது நக்கீரர் II பாடிய அங்கதப் பாட்டுக்கள் வருமாறு :

(1) "முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரசுடனே
ஆனந்தவேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தம் சேர்க சுவாகா,"

(2) "ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தால் காலக்கோட் பட்டானை—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்
செந்தமிழே தீர்க்க சுவாகா."

என்பனவாம்.

வச்சிரநந்தியால் துவக்கப்பட்ட தமிழ்ச்சங்கமானது கி. பி. 520-இல் முடிவு அடைந்தது. மதுரையில் இருந்த வடமொழிப் பட்டிமண்டபமும் குயக்கொண்டானுடைய தோல்வியால் ஒழிந்தது. என்றாலும், கி. பி. 520-க்குப் பின் தமிழில் வடமொழிக்கலப்புச் சிறிது சிறிதாக ஏறிக் கொண்டேவந்தது. தனித்தமிழ் வளர்ச்சி குன்றிற்று. இயற்கை வனப்பு அழிந்தது. செயற்கை வனப்புடன் தமிழ்மொழி மிளிரத் தொடங்கிற்று. ஒவ்வொரு தலங்கட்கும் வடமொழிச் சார்பாகப் புராணங்கள் வகுக்கத் தொடங்கினார்கள்.

கஉ. மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்

(சதுர எழுத்துக் காலம்)

(கி. பி. 520 முதல் கி. பி. 1901 வரை 1381 ஆண்டுகள் சங்கம் நடைபெறவில்லை).

1. **காலம்:** 1901 கி. பி. மே மாதம், 24-ஆம் தேதியில் இருந்து சங்கம் ஆரம்பிக்கப்பட்டு நாளிது வரை நடைபெற்று வருகிறது.

2. **இடம்:** நான்மாடக்கூடல் என்னும் மதுரை.

3. **சங்கம் இரீஇயவர்:** பாலவனத்தம் நிலக்கிழவர் பொ. பாண்டித்துரைத் தேவர்.

4. **புலவர்:** (1) திரு. மகாமகோபாத்தியாயர், தாக்ஷிணாத்திய கலாநிதி, உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள், சென்னை.

(2) திரு. ரா. இராகவையங்கார் அவர்கள், சேது சமத்தான வித்துவான், இராமநாதபுரம்.

(3) திரு. திருநாரணையங்கார், செந்தமிழ்ப் பத்திராசிரியர்—மதுரை.

(4) திரு. அரங்கசாமி அய்யங்கார், மதுரை.

(5) திரு. சேற்றூர் சுப்பிரமணியக் கவிராயர், சோழவந்தான்.

(6) விருந்து (16) முடிய * *

(17) திரு. மு. ரா. கந்தசாமிக் கவிராயர், மதுரை.

(18) திரு. மு. ரா. அருணாசலக் கவிராயர், மதுரை; முதலிய 251 பேர்கள் ஆவார்கள்.

5. **நூல்:** தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம் முதலியன.

Digitized by RMRL

6. பாடப்பட்டன : * * *

7. பாடப்பட்டோர் : * * *

8. கவி அரங்கேறியவர் : * * *

9. வரலாறு : கி. பி. 520-இல் அரசியல் மாறுதலினால் வச்சிரநந்தியால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்ச்சங்கம் கலைந்துபோகவே, அதற்குப் பின் 1381 ஆண்டுகள் தமிழ்ச்சங்கம் நடைபெறாமல் நின்றுவிட்டது.

கி. பி. 1901-ஆம் ஆண்டில், மதுரையில் நான்காவது தமிழ்ச்சங்கம் ஏற்படுத்தப்பட்டு நாளிதுவரை நடந்து வருகிறது. இன்னும் நீடித்து நடக்கும் என்று தெரிகிறது. இச் சங்கத்தில் பல புலவர்கள் இதுவரை தலைமை தாங்கி இருப்பதும், இச் சங்கத்தில் 251-க்கு மேற்பட்ட புலவர்கள் உறுப்பினர்களாக இருப்பதும், தமிழைப்பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருவதும் நாம் நேரே காணும்போது, இதற்கு முன் நடந்த சங்கங்களிலும் நடைபெற்ற காரியங்களைப்பற்றி ஐயங்கொள்ள இடமுண்டா?

பாலவனத்தம் நிலக்கிழவர் (சமீன்தார்) பாண்டித்துரைத் தேவர் அவர்களின் பெருமுயற்சியால் இந்த நான்காம் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இச்சங்கத்தில், ஆரம்பித்த நாள் முதல் தலைமை ஏற்றவர்கள் :

(1) திரு. பாண்டித்துரைத் தேவர் அவர்கள்
(2) ,, S. சாமிநாத விசய தேவர் ,,
(3) ,, P. S. சுப்பிரமணிய ஐயர் ,,
(4) ,, இராசராசேஸ்வர முத்துராமலிங்க சேதுபதி ,,

(5) திரு. இராவ்பகதூர் M. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்
(6) ,, ஆனரபிள் K. இராம அய்யங்கார் ,,
(7) ,, ,, P. இராமநாதன் ,,
(8) ,, மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாத அய்யர் ,,
(9) ,, சண்முக ராசேஸ்வர நாகநாத சேதுபதி ,,

என்பவர்கள்.

இந்த மாதிரிதான் முன் நடந்த சங்கங்களிலும் பல புலவர்கள் தலைமை ஏற்று நடத்திவந்தார்கள். தலைச் சங்கத்திற்கு அகத்தியர் தலைவர். இடைச் சங்கத்திற்குத் தொல்காப்பியர் தலைவர். கடைச் சங்கத்திற்கு நக்கிரர் தலைவர் என்று சொன்னால், அவர்கள் எல்லாம் அந்தந்தச் சங்கங்களில் ஒவ்வொரு காலத்தில் தலைமை ஏற்றவர்களே யாவர். அவர்களைப்போல் எத்துணையோ புலவர்கள் அந்தந்தச் சங்கங்களில் தலைமை ஏற்றுள்ளார்கள்.

இந்த நான்காம் தமிழ்ச்சங்கத்தில் புரவலர்களாகவும், புலவர்களாகவும், உறுப்பினர்களாகவும் இருந்தவர்கள், இருப்பவர்களுடைய பெயர்கள் வருமாறு :—

(அ) (1) பாலவனத்தம் நிலக்கிழவர் திரு. பொ. பாண்டித்துரைத் தேவர் அவர்கள்
(2) மாண்புமிக்க திரு. பாஸ்கர சேதுபதி ,,
(3) ,, திரு இராசராசேஸ்வர முத்துராமலிங்க சேதுபதி ,,
(4) ,, புதுக்கோட்டை மகாராசா ,,
(5) ,, திருவாங்கூர் ,, ,,
(6) ,, பரோடா ,, ,,

Digitized by RMRL

(7) மாண்புமிக்க மைசூர் மகாராசா அவர்கள்
(8) ,, தர்பங்கா ,, ,,
(9) ,, கொச்சி ,, ,,
(10) ,, எட்டையாபுரம் ,, ,,
(11) ஆண்டிப்பட்டிச் சமீன் திரு. பெத்தாச்சிச் செட்டியார் ,,
(12) சேத்தூர்ச் சமீன் திரு. வி. டி. எஸ். சேவுகபாண்டியத் தேவர் ,,
(13) திரு. எ. எல். எ. ஆர். அருணாசலம் செட்டியார் ,,
(14) ,, இராமச்சந்திரத் தேவர் ,,
(15) ,, சிங்கம்பட்டிச் சமீன் சுப்பிரமணிய தீர்த்தபதி ,,
(16) ,, இராசா தினகர பகதூர் ,,
(17) ,, ராம-மெ-சித-வைரவன் செட்டியார் ,,
(18) ,, மெ-லெ-மெ-இராமநாதன்செட்டியார் ,,
(19) ,, மெ-அரு-நா- ,, ,, ,,
(20) ,, ராம-அரு-அரு-ராம-அருணாசலம் செட்டியார் ,,
(21) ,, அரு-அரு-சோம-சோமசுந்தரம் செட்டியார் ,,
(22) ,, மெ-அரு-அரு-அருணாசலம் செட்டியார் ,,
(23) ,, முத்து-கரு-வே-அழகப்ப செட்டியார் ,,
(24) ,, வீர-பெ-ராம-வெ-பெத்த பெருமாள் செட்டியார் ,,

முதலியோர்.

(ஆ) இச் சங்கத்தின் உறுப்பினர்களாயிருந்து நூல்களைப் புதிதாக எழுதியும், பழைய நூல்களை ஆராய்ந்து வெளிப்படுத்தியும், சங்கத்திலிருந்து மாதந்தோறும் வெளியாகும் "செந்தமிழ்ப்" பத்திரிகைக்கு ஆராய்ச்சி உரைகள் எழுதியும் வந்தவர்களும் வருபவர்களும் :

(1) to (7) * * * *

(8) திரு. சென்னை. பூவை. அட்டாவதானம் கலியாணசுந்தர முதலியார் அவர்கள்

(9) and (10) * * * * *

(11) யாழ்ப்பாணம். திரு. ஆ. முத்துத்தம்பி பிள்ளை ,,

(12) ,, ,, அ. குமாரசாமி பிள்ளை ,,

(13) திருநெல்வேலி. ,, கவிராச நெல்லையப்ப பிள்ளை ,,

(14) * * * * *

(15) தரங்கம்பாடி. திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள்

(16) லிருந்து (18) வரை * *

(19) சென்னை, திரு. காஞ்சி. நாகலிங்க முதலியார் அவர்கள்

(20) லிருந்து (24) வரை * *

(25) சென்னை. திரு. நா. சுவாமி வேதாசலம் ,,

(26) லிருந்து (28) வரை * *

(29) திருவனந்தபுரம், சுவாமி உருத்திர கோடீச்சுரர் ,,

(30) * * * *

(31) தஞ்சை. திரு. வி. கோபாலசாமி ரகுநாத ராசாளியார் ,,

Digitized by RMRL

(32) * * * *
(33) நாகப்பட்டினம். திரு. ஜி. சதாசிவம்
பிள்ளை அவர்கள்
(34) * * * *
(35) கோயமுத்தூர் திரு. சி. எஸ். சொக்கலிங்கம்
பிள்ளை ,,
(36) முதல் (38) வரை * *
(39) கீழக்கரை. திரு. செ. மு. சையத் மகமத்
ஆலிம் புலவர் ,,
(40) புதுக்கோட்டை. திரு. எஸ். இராதாகிருஷ்
ணையர் ,,
(41) முதல் (46) வரை * *
(47) திருச்சி. திரு. எஸ். வி. கண்ணபிரான்பிள்ளை ,,
(48) கோயமுத்தூர். திரு. பகடாலு
பி. எஸ். நரசிம்மலு நாயுடு ,,
(49) முதல் (53) வரை * *
(54) நெல்லை. திரு. வி. பி. சுப்பிரமணிய
முதலியார் ,,
(55) இரங்கூன். திரு வி. முத்துக்குமாரசாமி
முதலியார் ,,
(56) கொழும்பு. ,, சி. த். கைலாசம் பிள்ளை ,,
(57) * * * *
(58) பெங்களூர். திரு எஸ். கிருஷ்ணசாமி
அய்யங்கார் ,,
(59) முதல் (61) வரை * *
(62) கோவை. திரு. டி. ஏ. இராமலிங்கம்
செட்டியார் ,,
(63) முதல் (68) வரை * *
(69) பாரிஸ் எம். சூலியன் வின்சன் ,,
(Mr. M. Julien Vinsen)

(70) விருந்து (82) வரை * *
(83) திருச்செங்கோடு. திரு. எஸ்.
காளியண்ணக் கவுண்டர் அவர்கள்
(84) விருந்து (85) வரை * *
(86) பல்லாரி. திரு.ஜே.வி.சுப்பிரமணிய அய்யர் ,,
(87) திருச்செங்கோடு. திரு. தி. அ.
முத்துசாமிக் கோனர் ,,
(88) சென்னை. திரு. ஜே. ஏ. கோபிநாத ராவ் ,,
(89) * * * *
(90) விருந்து (95) வரை * *
(96) திருவாரூர். பாவா. வைத்தியலிங்க
முதலியார் ,,
(97) * * * *
(98) திருத்துறைப்பூண்டி. திரு. இராமசுப்பா
முதலியார் ,,
(99) விருந்து (100) வரை * *
(101) பர்மா. திரு. பி. சாம்சன் ,,
(102) விருந்து (106) வரை * *
(107) கோவை. திரு. துடிசைகிழார்.அ.சிதம்பர
முதலியார் ,,
(108) விருந்து (161) வரை * *
(162) மதுரை. ஆனரபிள் கே. இராமய்யங்கார் ,,
(163) விருந்து (173) வரை * *
(174) இராமநாதபுரம். திரு. மு. இராகவய்
யங்கார் ,,
(175) விருந்து (196) வரை * *
(197) சிவில்லிபுத்தூர். திரு. ரா. கு.
நல்லகுற்றாலம் பிள்ளை ,,
(198) விருந்து (225) வரை * *

Digitized by RMRL

(226) சேலம். திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை
அவர்கள்

(227) விருந்து (245) வரை * *

(246) சென்னை. திரு. டி. கோபாலாச்சார்லு ,,

(247) விருந்து (250) வரை * *

(251) தஞ்சை. திரு. ஏ. ஜி. பிச்சைமுத்துப்
பிள்ளை ,,

குறிப்பு :—இந்தப்பட்டி கருணாமிருதசாகரத்தில் எழுதியுள்ள படி கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நான்காம் தமிழ்ச்சங்கத்தில் எப்படிப் பல புலவர்கள் பல ஊர்கள், பல தேசங்களிலிருந்து சங்க உறுப்பினர்களாகி, தமிழ்மொழி ஆராய்ச்சி செய்து வருகிறார்களோ, அப்படியேதான் முன் இருந்த சங்கங்களிலும் இருந்திருக்கவேண்டும். அதனைத் தெரிந்துகொள்ளுவதற்காகவே இவ்வளவு விரிவாய் ஈண்டுக்கொடுக்கப்பட்டுள்ளது.

கரு. கோவைத் தமிழ்ச்சங்கம்

கொங்கு நாட்டின் தலைநகராகிய கோயமுத்தூரிலே (கோவை) கி. பி. 1915-ஆம் ஆண்டுக்கு முந்தியே பண்டிதர் திருச்சிற்றம்பலம் பிள்ளையால் ஒரு தமிழ்ச்சங்கம் நிலை நாட்டப்பட்டது.

கி. பி. 1915-இல் அந்தத் தமிழ்ச் சங்கத்துக்குப் பெரிய புராண உரையாசிரியர் திரு, சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் B.A., அவர்கள் தலைவராகவும், கோவை வக்கீல் திருவாளர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் செயலாளராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அன்று முதல் அச் சங்கம் நாளிதுவரை நடைபெற்று வருகிறது.

கோயமுத்தூரில் C. K. சுப்பிரமணிய முதலியார் தகப்பனர் கந்தசாமி முதலியார் 1866 கி. பி. இல் சைவப் பிரசங்கசாலை ஒன்று ஏற்படுத்தினர். அதற்குக் கோயமுத்தூர் வைசியாள் வீதியில் ஒரு கட்டிடம் உள்ளது. அந்தக் கட்டிடத்தில்தான் கோவைத் தமிழ்ச்சங்கம் நடைபெற்று வருகிறது.

இச் சங்கத்தைப் பற்றிய விவரங்கள் இன்னொரு சமயம் விவரித்து எழுதப்படும்.

Digitized by RMRL

கசு. கரந்தைத் தமிழ்ச்சங்கம்

இச் சங்கமானது தஞ்சாவூர்க் கோட்டத்திலே தஞ்சைக்கு அடுத்த கருந்தட்டாங்குடியிலே (கரந்தை) கி. பி. 1911 மே மாதம் 14-இல் திரு. வே. இராதாகிருட்டினப் பிள்ளை, B. A. அவர்களால் ஏற்படுத்தப்பட்டு, திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, B.A., B.L. அவர்களால் வளர்க்கப்பட்டு, இப்போது நடைபெற்று வருகிறது.

இச் சங்கத்திலிருந்து மாதந்தோறும் "தமிழ்ப் பொழில்" என்ற தனித்தமிழ்ப் பத்திரிகை ஒன்று கி. பி. 1925 (குரோதன) சித்திரை முதற்கொண்டு தொடங்கப் பெற்று நடைபெற்று வருகிறது.

இச் சங்கத்தைப்பற்றிய விவரங்கள் இன்னொரு சமயம் விவரித்து எழுதப்படும்.

பின் இணைப்பு

I. தமிழ்நாட்டில் தமிழ்ச் சங்கங்கள் நடைபெற்றதற்கு ஆதாரங்கள்

(1) பஃறுளியாற்றுத் தென் மதுரையில் நடந்த தமிழ்ச் சங்கத்தைப்பற்றி மதுரைக் காஞ்சியின் (761—763 அடிகளில்) கூறப்பட்டுள்ளது. அது வருமாறு :—

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்."

இது, முதலாம் நிலந்தருதிருவின் நெடியோன் என்கிற ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியனையும், அவன் இரீஇய பஃறுளியாற்றுத் தென்மதுரைத் தமிழ்ச்சங்கத்தையும் பற்றியது. இச் சங்கமானது 30,000 B. C. முதல் 16,500 B. C. வரை நடைபெற்றது.

நல்லாசிரியர் புணர்—கல்வி, ஒழுக்கம், அறிவு முதலியவைகளிற் சிறந்த நல்ல புலவர்களுடைய கூட்டம்.

புணர்—புணர்ப்பு, கூட்டம், சங்கம்.

கூட்டுண்ட—ஒருவரோடு ஒருவர் கலந்து, உரையாடி இன்பந்துய்த்த.

"அறிவுடையார் தம்முட் குழீஇ நகலின்
இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி."

என்பதையும் நோக்குக.

ஆதலின், 'நல்லாசிரியர் புணர்கூட்டுண்ட' என்பதற்கு, கல்வி, அறிவு, ஒழுக்கம் வாய்ந்த புலவர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து, தம்முள் கருத்து ஒப்பப் புணர்ந்த கலப்

Digitized by RMRL

பிணையுடைய சங்கத்தின் முடிவுகளை எடுத்து ஆண்ட என்று பொருள் கொள்வது பொருத்தம்.

மேலே காட்டிய அடிகளில் கூறியுள்ள நல்லாசிரியர் களால் புகழப்பட்ட பாண்டியன் நிலந்தருதிருவின் நெடியோன் என்பவன் ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன் ஆவான். அவன் இற்றைக்கு 31,946 ஆண்டுகளின் முன்னர் கடல் கொண்டுபோன பெருவளநாடு, ஒளிநாடுகளைக் கைப்பற்றி, பஃறுளி ஆறு என்னும் ஆற்றை மேருமலைத் தொடரினின்றும் வெட்டி, பெருவளநாட்டை வளப்படுத்தினவன். அவனே அப் பஃறுளி ஆற்றங்கரையில் தென்மதுரை என்ற அழகிய நகரை உண்டாக்கி, அதனைத் தனது அரச இருக்கையாக்கி, அங்கே ஒரு தமிழ்ச்சங்கத்தையும் நிலைபெறச் செய்து, முத்தமிழையும் ஆராய்ந்து புலவர்களைப் புரந்துவந்தான். இதனை,

"செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீந்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."

என்னும் புறப்பாட்டால் அறியலாம்.

(2) தலை—இடை—கடைச்சங்கங்கள்

இம் மூன்று சங்கங்களைப் பற்றியும் பேராசிரியர் தொல்-மர-94-உரையில், "மூன்றுவகைச்சங்கத்துச் சான்றோரும் அது கூறுவர்," என்று கூறுவதை நோக்குங்கள்.

(3) பொதிகைமலைத் தமிழ்ச்சங்கம்

கம்பராமாயணம் நாடவிட்ட படலம் 30-இல்

"தென்தமிழ்நாட் டகன்பொதியில்
திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்"

என்று கூறுகிறார்.

இராமாயண காலத்துக்கு, அஃதாவது, கி. மு. 6000-க்கு முன்பே பொதிகைமலை அகத்தியரால் நிலை நாட்டப்பட்ட தமிழ்ச்சங்கம் ஒன்று இராமாயண காலத்திலும் தனிசிறப்பாக நடந்துவந்ததைப்பற்றிச் சுக்கிரீவன் அனுமார் முதலிய வானரவீரர்களுக்குக் கூறுவதை நோக்குங்கள்.

(4) இடைச்சங்கம்

தொல்காப்பியப் பாயிரத்தில், நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையத்து அதங்கோட்டாசான் முன்னிலையில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டதாகப் பனம்பாரனார் என்னும் புலவர் கூறுகின்றார். இவண் கூறப்பட்ட நிலந்தரு திருவிற் பாண்டியன் மூன்றும் நிலந்தரு திருவிற் பாண்டியன் ஆவன். இவன் கி. மு. 6000-இல் இருந்தவன்.

ஆழிவடிம்பலம்பநின்ற பாண்டியனே முதலாம் நிலந்தருதிருவிற் பாண்டியன் ஆவான். இவன் கி. மு. 30,000-இல் இருந்தவன். பஃறுளியாற்றுத் தென்மதுரையில் அரசாண்டவன்.

இங்கே (தொல்காப்பியப் பாயிரத்தில்) குறிக்கப்பட்டவையோ, இடைச்சங்கம் நடைபெற்ற கபாடபுரம் என்னும் இடத்தில் நிகழ்ந்த தமிழ்ச் சங்கமேயாகும்.

இந்தக் கபாடபுரத் தமிழ்ச் சங்கத்தைப்பற்றியேதான் கம்பர் தம் நூலில்,

> "அத்தி ருத்தகு நாட்டினை அண்டர்நாடு
> ஒத்தி ருக்குமென் றால்உரை யொக்குமோ
> எத்தி றத்தினும் ஏழுல கும்புகழ்
> முத்தும் முத்தமி ழும்தந்து முற்றலால்." - (ஆறுசெல்-௫௩)

என்று குறிப்பிடுகிறார்.

Digitized by RMRL

இக் கபாடபுரச் சங்கத்தைப்பற்றி வான்மீகியும் தம்முடைய வடமொழி இராமாயணத்தில் குறிப்பிட்டுள்ளார். கபாடபுரத்தில் எடுக்கும் முத்துக்குக் கபாடம் என்றே பெயர். இந்த முத்தானது ஏனைய இடங்களில் எடுக்கும் முத்தைவிட உயர்ந்தது என்று வடமொழி இராமாயணத்தாலும், உரோம்—கிரீஸ்—எகிப்து முதலிய அன்னிய நாட்டுச் சரிதங்களாலும் அறியக்கிடக்கின்றது.

(5) சீனதேசத்துச் சரித்திரம்

நம் நாட்டுத் தமிழ்ப் புலவர்களும், நம் நாட்டு இலக்கியங்களுமேயன்றி, தமிழ்நாட்டுத் தொடர்புடைய சீன தேசத்தார் தங்கள் இலக்கியங்களில் தமிழ்ச்சங்கங்களைப் பற்றிக் கூறியுள்ளார்கள்.

திருவாளர் R. இராகவையங்கார் அவர்கள் எழுதிய 'தமிழ் வரலாறு' முதற்பாகம் 5-ஆம் பக்கத்தில்,

"மூன்றும் அரசனாகிய பாண்டி (பாண்டியன்) ஏற்பட்டு, தேர் முதலியன செய்து, அரண் வகுத்து, உலக வரலாறு அறிந்த அறிஞர் பலரைக் கூட்டி, நூலாராய்ச்சி செய்தனன்; இசையளவும் கண்டான்," என்று கூறப்பட்டுள்ளது.

மூன்றும் அரசன்—என்பது சேர—சோழ—பாண்டியர் என்னும் வழக்கில் உள்ள மூவரில் மூன்றும் அரசன் பாண்டியன்.

தேர் முதலியன செய்து—என்று தேரைக் குறிப்பிடுவதால் இடைச்சங்கம் நிறுவிய வெண்டேர்ச் செழியனைக் குறிப்பிட்டுள்ளது. இடைச்சங்கம் கி. மு. 6805-இல் நிறுவப்பட்டது.

உலக வரலாறு அறிந்த அறிஞர்—என்றதால் அவ்விடைச்சங்கத்தில் உலக சரித்திரங்களை நன்றாய் அறிந்த

புலவர் பலர் குழுமி இருந்தார்கள் என்றும், அவர்கள் பல சரித்திரங்களை இயற்றினார்கள் என்றும் அறிகிறோம்.

இசையளவும் கண்டான்—என்றதால், அச் சங்கத்தில், இசைத்தமிழ் நன்றாய் ஆராயப்பட்டது என்றும், குருகு வெண்டாளி, இசை நுணுக்கம் முதலிய இசை நூல்கள் அப்பொழுது இயற்றப்பட்டன என்றும் அறிகின்றோம்.

தமிழ்நாட்டில் தமிழ்ச்சங்கங்கள் நடைபெறவில்லை என்றும், நடந்ததாகக் கூறுவது வெறுங்கதை என்றும் கூறும் அறிஞர்கள் மேலே காட்டிய சரித்திரக் குறிப்பினையும் கதை என்பாரோ?

(6) திருப்பரங்குன்றதுத்துத் தென்மதுரைச் சங்கம்

சின்னமனூர்ச் செப்பேட்டில் அடியில் கண்ட வாசகம் பொறிக்கப்பட்டு இருக்கிறது:

"மதுராபுரிச் சங்கம் வைத்தும்
மகாபாரதம் தமிழ்ப்படுத்தும்" (பாண்டியன் மெய்க்கீர்த்தி)

துவரைக் கோமான் கண்ணன் கபாடபுரத்துத் தமிழ்ச் சங்கத்தை கி. மு. 3105-இல் அழித்தபின், பாண்டியன் சாகரத்துவசன் என்கிற பப்புருவாகனன் (அல்லி மகன்) திருப்பரங்குன்றத்துப் பக்கம் இருந்த தென்மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கத்தை நிலைநாட்டி, அதில் தமிழ்நூல்களை ஆராய்ந்ததோடு, வியாசர் செய்த மகாபாரதம் என்னும் இதிகாசத்தைப் பெருந்தேவனார் I என்னும் புலவரைக் கொண்டு தமிழில் பாடும்படி செய்தனன். அப் பாரதம் இப்போது கிடைத்திலது.

(7) கடைச்சங்கம்

சிறுபாணாற்றுப்படை (66—67 அடிகள்)

"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை."

Digitized by RMRL

இதற்கு உரைகண்ட நச்சினார்க்கினியர் 'தமிழ்நிலை பெற்ற மறுகின் மதுரை,' எனக் கூட்டி, "தமிழ் வீற்றிருந்த தெருவினையுடைய மதுரை," எனக் கூறுவது காண்க.

தமிழ்நிலை என்பதனைத், தமிழ் நிலையத்தை—தமிழ்ச் சங்கத்தைத் தன்கண்பெற்ற மறுகின் மதுரை என்று கொள்க. பசுக்கள் நிற்குமிடம் "ஆன்நிலை" (ஆசாரம் ௬௬) என்று கூறப்படுவதுபோல, தமிழ்ப் புலவர்கள் கூடும் இடம் 'தமிழ் நிலை' ஆயிற்று.

தேர்நிலை—படைநிலை—நீர்நிலை என்ற வழக்குகளும் தமிழில் உண்டு என்பதையும் உற்று நோக்குக.

(8) சிலம்பு—புறஞ்சேரி—130-132-133,

"புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பில்
பொதியில் தென்றல் போலாது ஈங்கு
மதுரைத் தென்றல் வந்தது காணீர்."

என்று இளங்கோ அடிகள், பொதியமலையினின்றும் வரும் தென்றலினும், மதுரையினின்றும் வரும் தமிழ்த் தென்றலுக்குள்ள சிறப்பு, புலவர் செந்நாப் பொருந்திய ஏற்றம் என்று கூறுதல் காண்க.

பொதியைச் சந்தன மணங்கமழ் தென்றலினும், மதுரைத் தமிழ்மணங்கமழ் தென்றல் சாலச்சிறப்புடைத்தே.

(9) புறநானூறு—72.

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பில்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை."

இது, கி. பி. 174 முதல் கி. பி. 204-வரை அரசாண்ட தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனால் பாடப்பட்டது.

இவன் கடைச்சங்க காலத்தவன். சங்கம் அரங்கேறிய மூவர் அரசர்களில் ஒருவன். இவன் காலத்தில் நக்கீரர் சங்கத் தலைவராக இல்லை என்பது இவன் பாடலால் அறியக்கிடக்கின்றது. நக்கீரர் சங்கத் தலைவராக ஏற்பட்டது மாங்குடி மருதனுக்குப் பின்னேயாகும். 1950 ஆண்டுகள் நடைபெற்ற சங்கத்துக்கு அவ்வப்போது பல புலவர்கள் தலைவர்களாக அமர்ந்திருந்தார்கள். சங்கம் அரங்கேறிய அரசனே, சங்கத்தைப்பற்றிக் கூறி இருக்க அதைப்பற்றி ஐயங்கொள்ளக் காரணம் சிறிதும் இல்லை.

(10) கலித்தொகை—68.

"மதிமொழி யிடல்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெ றுவாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர."

என்ற அடிகட்கு நச்சினார்க்கினியர், "அறிவாகிய சொல்லைச் சொல்லுதலை இயல்பாக உடைய அமைச்சரைப் போல, நூல்வல்ல ஆசிரியராலே பொல்லாவாகிய சொற்கள் இடையிற் புகுதாமல் போக்கப்பட்ட தம் செவிகள் செய்யாக, முன்னுள்ள சான்றோர்கள் கூறிய செய்யுட்கள் தம் சொல்லை வளர்க்கும் நீராக, அறிவினையுடைய நாவாகிய ஏராலே உழுதுண்ணும் புலவருடைய புதிய கவிகளைக் கொள்ளைகொண்டு உண்ணும் மதில் சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையை உடையவனே," என்று கூறுகிறார்.

இதன்கண், அமைச்சரைப்போல, நூல்வல்ல புலவர்களும் மதுரைக்கண் இருந்தனர் என்றும், பேரரசனாகிய பாண்டியற்கு அவர் தம் செவி செய்யாகவும், சான்றோர் செய்யுள் நீராகவும், அவர் தம் நா ஏர் ஆகவும் கொண்டு புலம் உழுதுண்ணும் புலவர் என்றும், அவர் புதிய புதிய கவிகளை மிகுதியாகப் பாடுபவர் என்றும், அச் செய்யுள்

Digitized by RMRL

வளத்தைக் கொள்ளைகொண்டு உண்டது மதுரை என்றும் கூறியது காண்க.

(11) கலித்தொகை—35.

"நிலனாவிற் றிரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ."

என்று வருதலும் காண்க.

இதன்கண் 'கூடலார் புலனாவில் சொற்புதிது' என்றது, மதுரையின்கண் உள்ள புலவர்தம் அறிவுடை நாவின்கண் தோன்றும் சொற்புதுமை (அஃதாவது, புதிய பாடல்கள்) என்றதாம்.

இது, கூடலின்கண் இருந்த சங்கத்தில் தமிழாராய்ந்த புலவர்களையும், அவர்களுடைய அறிவுடைய நாவன்மையையும் அவர்கள் புதிது புதிதாகப் பாடும் செய்யுட்டிறத்தையும் குறித்தது என்று எளிதில் அறியக்கிடக்கின்றது.

(12) காரிக்கண்ணனார்—புறம்—58

"இமிழ்குரன் முரசம் மூன்றுடன் நாளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே."

ஈண்டு, 'முரசம்..........கூடல்' என்றது மூன்று முரசுகளுடன் முத்தமிழும் ஆராயப்படுகின்ற சிறப்புப்பற்றி என்க. முத்தமிழையும் ஆராய்வதற்குச் சங்கம் இன்றியமையாமை தெளிக.

(13) பதிற்றுப்பத்து—ஒன்பதாம் பத்துப்பதிகம்

"பொத்தி யாண்ட பெருஞ்சோ ழனையும்
வித்தை யாண்டவிளம் பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று"

இதில், 'வித்தையாண்ட.....மாறன்' என்றது, முத்தமிழையும் ஆண்ட (ஆராய்ந்த) மாறனாகிய பாண்டியன் என்பதாம்.

'பொத்தியாண்ட சோழன்'—என்றது, பொத்தியார் என்னும் பாண்டிநாட்டுப் புலவர் தாம் நேரிற்பார்க்காமலே தம் உணர்ச்சியால் வசப்படுத்திய கோப்பெருஞ் சோழன் என்பதாம்.

பழையன் மாறனைப்பற்றி,

"இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகில் கூட லாங்கண்." (அகம்-௩௪௬)

என்று அகநானூற்றில் கூறியிருப்பதைக்கொண்டு, அவன் மதுரையை ஆண்ட முடி அரசர்களில் ஒருவன் என்பதும், அவன் சங்கம் இருந்து முத்தமிழையும் ஆராய்ந்தான் என்பதும் அறிகின்றோம்.

(14) அகநானூறு—உரைப்பாயிரம்

"பழுதில் கொள்கை வழுதியர் அவைக்கண்
அறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அருந்தமிழ் மூன்றும் தெரிந்த காலை."

என்று இடைவள நாட்டு மணக்குடியான் பால் வண்ண தேவனான வில்லவதரையன் கூறுதல் காண்க.

இம் மணக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவரே திருக்குறளுக்கு உரையெழுதிய மணக்குடியார் என்பவர். அவருடைய இயற் பெயர் இன்னதென விளங்கவில்லை. இதனை அறியார் அவரை மணக்குடவர் என்றும் மணக்குடையர் என்றும் கூறுவர்.

(15) பரிபாடல்—19

"புலத்தினும், போரினும் போர்தோலாக் கூடல்."

என்னும் அடிக்கு உரையாசிரியர் பரிமேலழகர் கூறுவதாவது: "அறிவினும் வீரத்தினும் பிறரைப் போர்வெல்லுங் கூடல்," என்பதே.

Digitized by RMRL

கூடலில் போரில் தோலாதார் பலர் உளராதல் போலவே, புலத்தில் (புலமையில்) தோலாதார் பலர் உள ராதலை இது குறிக்கும்.

போர் தோலாமைக்குப் போர் அவை (Military College) இருந்ததனை இப் பரிபாடல் வருணித்திருக்கிறது போலவே, புலமையிற் தோலாமைக்குத் தமிழ்ச்சங்கம் (புலவர் அவை) இருந்ததனையும் வருணித்திருக்கிறது.

ஆமூர் மல்லனை மற்போரில் அட்டு வென்ற பெருநற் கிள்ளி என்பவன் போர் அவை காணப் பொருதனன் என்பது,

" ஆடா டென்ப ஒருசா ரோரே
ஆடன் றென்ப ஒருசா ரோரே. (புறம்-அ௫)

என்னும் பாட்டால் அறியலாம்.

இதனால் சோழன் பெருநற்கிள்ளி போர் அவை (Military College) ஒன்று புரந்தனன் என்பதும், அத னானே அவனுக்குப் "போர் அவைக்கோ பெருநற்கிள்ளி" என்று பெயர் உண்டாயிற்று என்பதும் அறிந்ததாம். இச் சோழனைப் போலவே பாண்டியரும், சேரரும் போர் அவைகள் வைத்திருந்தார்கள்.

இதனை அறியார் சிலர் போர் அவைக்கோ என்ற சொற் றொடரை போர்வைக்கோ என்று எழுதிப் பதிப்பித்துவிட்ட தோடு நில்லாமல் அவ்வாறு பேசியும் வருகிறார்கள்.

(16) பரிபாடல்—6-இல்

" தமிழ் வையைத் தண்ணம் புனல்."

என்று கூடலில் நடந்த தமிழ்ச்சங்கத்தைப்பற்றி கூறி இருப்பது காண்க.

(17) ஔவையார்

" சங்கத் தமிழ்மூன்றுந் தா."

என்று தாம் பாடிய 'நல்வழியில்' சங்கத்தாரால் வளர்க்கப்பட்ட முத்தமிழ்களைப்பற்றியும் கூறியுள்ளது காண்க. இவ் வம்மையார் கடைச்சங்கப் புலவர்களில் ஒருவர். அதிகமான் அஞ்சி என்பவனுக்கு உயிர்த் துணைவர். புறநானூற்றில் இவருடைய பாட்டுகள் பல உள்ளன. இவருடைய கூற்றில் ஐயங்கொள்பவன் உலகின்கண் அலகையாய் எண்ணப்படுவான்.

இதுவரை சங்க நூல்களில் இருந்தும், சங்க காலத்துப் புலவர்களுடைய வாக்கில் இருந்தும், செப்பேட்டுச் சாசனங்களில் இருந்தும், கல்வெட்டுச் சாசனங்களில் இருந்தும், பிற நாட்டுச் சரிதப் பகுதிகளில் இருந்தும் சங்கம் நடைபெற்றதற்குப் பல ஆதாரங்கள் காட்டினோம்.

இனிக் கடைச்சங்கத்தை அடுத்து இருந்த சான்றோர்களுடைய வாக்குகளையும் காண்போம்.

(18) **மாணிக்கவாசகர்**

"உறைவான் உயர்மதிற் கூடலில் ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி? ஏழிசைச் சூழல்புக்கோ.',

என்று கி. பி. 250 முதல் கி. பி. 282-வரை வாழ்ந்த மாணிக்கவாசகர் கூடலில் நடந்துவந்த கடைச்சங்கத்தைப் பற்றிப் பாடி இருக்கின்றார்.

கடைச்சங்கம் அழிவெய்தியது கி. பி. 235-இல் ஆதலின், சங்கத்தை அடுத்து இருந்தவர் மாணிக்கவாசகர் ஆவார். இவர் கடைச்சங்கம் முடிவுபெற்ற 15 ஆண்டுகளுக்கு எல்லாம் பாண்டி நாட்டில் மதுரைக்குப் பன்னிரண்டு கல் தொலைவில் உள்ள திருவாதவூரில் பிறந்தவர். பாண்டி நாட்டிலேயே பாண்டியன் மந்திரியாகத் திகழ்ந்தவர். பிறகு, துறவு பூண்டு, தில்லைக்குச் சென்று ஆங்கு முத்தி அடைந்தவர். கூடலில் நடைபெற்ற சங்கத்தைப்பற்றி அவர் கேள்விப்

Digitized by RMRL

பட்டு இருந்ததோடு, மந்திரியாய் இருந்த காலத்து, அரசாங்க ஆதரவுகளையும் படித்துத் தெரிந்தவர். ஆதலின், அவருடைய கூற்று மிக வன்மையுடையது ஆகும்.

(19) அப்பர் சுவாமிகள்

மாணிக்கவாசகரை அடுத்து இருந்தவர் திருவாமூர் அப்பர் சுவாமிகள். அவர், "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி, நற்கனகக்கிழி தருமிக்கு அருளினான்காண்," என்று சங்க காலத்தில் நடந்த ஒரு சரித்திரத்தைப்பற்றித் திருப்புத்தூர் தேவாரத்தில் பாடியுள்ளார். இவருடைய காலம் கி. பி. **567** முதல் **648** வரை ஆகும்.

ஆலவாய்ப் பெருமான் புலவர் வேடம் தாங்கி, தமிழ்ச் சங்கத்தில் வாதம்செய்து, தருமி என்னும் ஓர் அன்பனுக்குப் பொற்கிழி வாங்கிக் கொடுத்ததைப்பற்றிப் பாடியுள்ளார். இது நடந்தது கடைச்சங்கத்தின் கடைசிக் காலத்தில் 'கொங்கு தேர் வாழ்க்கை' என்னும் பாட்டைப்பற்றி நிகழ்ந்த வாதத்தைக் குறிப்பிட்டுள்ளார். ஆலவாய்ப் பெருமான் நக்கீரரோடு வாதம் புரிந்தார் என்பது சரித்திரம். ஆதலால், இது நடந்தது கி. பி. மூன்றாம் நூற்றாண்டு ஆகும்.

(20) திருஞான சம்பந்த சுவாமிகள்

"புகலி ஞானசம்பந்தன் உரைசெய் சங்கமலி செந்தமிழ்கள்."
(திருத்தேவூர்)

"அற்றன்றி அந்தண் மதுரைத்தொகை ஆக்கினனும்."
(பொதுப்பாடல்)

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில், அஃதாவது கி. பி. **634** முதல் கி. பி. **650** வரை வாழ்ந்த சம்பந்த சுவாமிகள், அவர் காலத்தில் சங்கத் தமிழ் நூல்கள் மிக்கு வழங்கிவந்ததனால்,

அவற்றினின்றும் பல பொருள்களை எடுத்துத் தம்முடைய தெய்வப்பாக்களில் புகுத்திப் பாடியுள்ளது காண்க.

அவர் காலத்திலேயே தொகை நூல்கள் எல்லாம் தொகுக்கப்பட்டு முடிவுற்று இருந்தன என்றும் அவருடைய கூற்றால் தெரிகிறது.

(21) ஆண்டாள் என்கிற கோதையார்

"சங்க முத்தமிழ்" என்று பெரிய திருமொழி 3-4-10-இல் பாடியுள்ளார். இவரும் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

(22) புறத்திரட்டு—புகழ் மாலை

"பாடு தமிழ்வளர்த்த கூடலின் வடாஅது."

என்று நாஞ்சி என்னும் வள்ளலின் ஊராகிய கள்ளியம்பதி, தமிழ்ச்சங்கம் இருந்த கூடலுக்கு வடக்கே உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

(23) சேக்கிழார்

மூர்த்திநாயனர் புராணப் பாட்டு—5—7

"சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய அங்கண் மூதூர்
நூல்பா யிடத்தும் முளை; நோன்றலை மேதி பாயப்
பால்பாய் முலைதோய் மதுப்பங்கயம் பாய எங்கும்
சேல்பாய் தடத்தும் முளைசெய்யுண்மிக் கேறு சங்கம்

"மும்மைப் புவனங்களில்மிக் கதன்றேயம் மூதூர்
மெய்ம்மைப் பொருளாம் தமிழநூலின் விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார் திருவால வாயில்
எம்மைப் பவம் தீர்ப்பவர் சங்கம் இருந்த தென்றால்."

என்று தமிழ்ச்சங்கம் மதுரையின்கண் நடைபெற்றதைப் பற்றிப் பாடியுள்ளார். தெய்வச் சேக்கிழார் பெருமான் சரித்திரச் சான்று இல்லையேல் பாடமாட்டார்.

Digitized by BMRL

மூர்த்தி நாயனார் என்பவர் மதுரையில் கி. பி. 520 முதல் கி. பி. 575 வரை ஐம்பத்து ஐந்து ஆண்டுகள் அரசாண்டவர். களப்பிரர் ஆட்சி முடிந்ததும் இவருடைய ஆட்சி திருவருட் சம்மதத்துடன் ஆரம்பமாயிற்று.

(24) பிற்காலத்தவர்

“செந்தமிழ் நாடே
சந்தனப் பெதியைச் செந்தமிழ் முனியும்
சவுந்தர பாண்டியன் எனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவரும் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநா டென்ப.”

என்பதனால், கடைச்சங்கம் முடிவு அடைந்தபின் அடுத் தடுத்து இருந்தஅடியார்கள் அன்பர்களுடைய வாக்கு களில் இருந்தும் சங்கம் நடைபெற்றது உண்மை யெனக் காட்டினோம்.

சங்க நூல்களையும், சங்கப் புலவர்களுடைய கூற்றுக் களையும், செப்பேட்டுச் சாசனங்களையும், பிறநாட்டுச் சரித் திரச் சான்றுகளையும், அன்பர்களுடைய கவிகளையும் நம் பாமல், தற்காலம் சங்கமே இருந்ததில்லை என்று கூறுவார் கூற்று எவ்வளவு தூரம் பொருத்தமுடைத்து என்று பாருங்கள். அவர்கள் எல்லாம்,

“நேர்நின்று காக்கை வெளிதென்பார்
என்சொலார் தாய்க்கொலை சால்புடைத்து
என்பாரும் உண்டு.”

என்ற முதுமொழிக்கு இலக்கு ஆனவர்களே. ஆதலின், அன்னவர் கூற்றுக்களைக்கொண்டு மயங்கற்க.

1564—1604 A. D.—சடையவர்மன் அதிவீரராம பாண்டியன்.

1588—1613 A. D.—வரதுங்கராம பாண்டியன்.

1613—1700 A. D.—வரகுணராமகுலசேகரசோமாசியார்.

1700—1748 A. D.—வரகுணராம பாண்டிய குலசேகர தேவதீட்சிதர்.

(இதுவரை கல்வெட்டுக்களால் தெரிந்த பெயர்கள் இவையாகும். இன்னும் பல பாண்டியர்கள் பெயர்கள் இடையிடையே உள்ளன.)

19-ஆம் நூற்றாண்டில் விசயநகர வமிசத்தைச் சேர்ந்த நாயக்கர் அரசாட்சியினின்றும் ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பாண்டியநாடு வந்தது.

20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், ஆங்கில அரசாட்சியில், அஃதாவது, **1910**-ஆம் ஆண்டு மேமாதம் **24**-ஆம் தேதியில் இப்போது நடைபெற்றுவரும் நான்காம் தமிழ்ச்சங்கம் பாலவனத்தம் சமீன்தார் பொ. பாண்டித்துரைத் தேவர் அவர்களால் கூடல் எ மதுரையில் ஆரம்பிக்கப்பட்டது.

பல தமிழ்ச்சங்கங்கள் நடைபெற்றிருக்க இதனை நான்காம் தமிழ்ச்சங்கம் என்று கூறுவானேன் என்றால், தலை—இடை—கடைச் சங்கங்களாகிய முச்சங்கங்களைப் பற்றியே எல்லோரும் கூறிக்கொண்டிருப்பதால், இது நான்காம் சங்கம் என்னப்பட்டது என்க.

களவியல்—தொல்காப்பியம் என்னும் இரண்டு நூல்களில் குறிப்பிடப்பட்ட தமிழ்ச்சங்கங்களின் காலங்களைப் பற்றியும், நிறுவிய பாண்டிய அரசர்களைப்பற்றியும், கல்வெட்டு—சாசனம்—இலக்கியம் முதலிய சான்றுகளைக் கொண்டு இங்கே விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.

Digitized by RMRL

ஆழிவடிம்பலம்பநின்ற பாண்டியன் I என்பவனைப் பற்றியும்—தமிழ்நாட்டில் ஆண்ட அன்னியர்களாகிய நிருதர்—அவுணர்—அரக்கர்—ஆரியர்களைப்பற்றியும் பல ஆதாரங்களுடனும், குடிவழிப்பட்டியுடனும் தமிழ்நாட்டுச் சரித்திரம் எழுதப்பட்டு வருகின்றது. விரைவில் வெளி வரும். விரிவினை ஆண்டுக் கண்டுகொள்க.

கழக வெளியீடு: சஅ௦

பதிப்பாளர்:
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.

தலைமை நிலையம்:
98, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

அப்பர் அச்சகம், சென்னை - 1.

விலை ரூ. 2 - 8.

Digitized by RMRL